



# அடங்காப்பற்று (வன்னி) வரலாறு

## பாகம் 5

## அடங்காப்பற்று முதலிமார் (கி.பி. 1795–1948)

அருணா செல்லத்துரை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அடங்காப்பற்று (வன்னி)

# வரலாறு

## பாகம் - 5

## "அடங்காப்பற்று முதலிமார்"

(கி.பி. 1795-1948)

அருணா செல்லத்துரை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அடங்காப்பற்று (வன்னி)
# வரலாறு
## பாகம் - 5

## "அடங்காப்பற்று முதலிமார்"
(கி.பி. 1795-1948)

அருணா செல்லத்துரை

அருணா வெளியீட்டகம்
ஏ.15,1/1 மனிங் ரவுண் வீடமைப்புத் தொகுதி
மங்கள வீதி , கொழும்பு -8.
இலங்கை.
☎🖷: 011 - 2688466

2010

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இலங்கைத் தேசிய நூலகம் - வெளியீடுகளில் உள்ள பட்டியற் தரவு.

செல்லத்துரை , அருணா
அடங்காப்பற்று (வன்னி) வரலாறு -5 அடங்காப்பற்று முதலிமார்
செல்லத்துரை .- கொழும்பு : ஆசிரியர். 2010

பக்கம். 16 + 144 + 4

**ISBN** 978-955-1347-01-7 விலை : ரூ. 350.00

1. 894.8112 டிடிசி 2. தலைப்பு
i.. அடங்காப்பற்று (வன்னி) வரலாறு -5 முதலிமார்

**ISBN** 978-955-1347-01-7

அருணா வெளியீட்டகம்
History of Adankappattu -05
'Adankappattu Mudaliyars'
(A.D.1795-1948)
by Arruna Selladurai.

First Edition –2010

**©Arruna Selladurai**

Author: Arruna Selladurai.

**Price: Rs. 350.00**
**US. $ 12**

Printed at : Unie Arts (Pvt) Ltd.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# Adankappattu (Vanni) History

## Part - 05

## Adankappattu Mudaliyars

A.D.1795-1948

by

**Arruna Selladurai**

**Dip. in. Journalism, University of Colombo**

**Arruna Publications**

A 15, 1/1 Manning Town Housing Complex

Mangala Road, Colombo-8.

Sri Lanka.

☎🖷: 011- 2688466

**2010**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# BIBLIOGRAPHICAL DATA

| | | |
|---|---|---|
| Title of the book | : | Adankappattu (Vanni) History - 05<br>Adankappattu Mudaliyars<br>(A.D.1795-1948) |
| Language | : | Tamil |
| Subject | : | History of Adankappattu (Vanni) Mudaliyars |
| Written by | : | Arruna Selladurai. |
| Copyright | : | Author |
| Published by | : | Arruna Veliyettaham<br>*[Arruna Publication]* |
| First edition | : | May 2010 |
| Types used | : | 12 point |
| Number of pages | : | 16 + 144 + 4 |
| Number of copies | : | 1000 |
| Computer Type Setting | : | Arruna Selladurai |
| Printed at | : | Unie Arts(Pvt)Ltd. |
| Price | : | Rs.350.00<br>US $ 12 |
| ISBN | : | 978-955-1347-01-7 |


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உடம்பினுள் உதிரமாய்

உள்ளத்துள் உரமாய்

உள் நின்று ஊக்குவிக்கும்

என் தந்தை

கதிரவேலு அருணாசலத்திற்கும்

என் அன்பு அன்னை

அன்னம்மாவிற்கும்

அடங்காப்பற்றின்

வற்றாத பளையான

வற்றாப்பளை உறையும்

பெத்தாச்சி

கண்ணகை அம்மனுக்கும்

காணிக்கையாகும்

என் படைப்புகள்.

அடங்காப்பற்றான்

அருணா செல்லத்துரை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## ஆசிரியரின் நூல்கள்.

- அடங்காப்பற்று (வன்னி ) வரலாறு பாகம் -5
  "அடங்காப்பற்று முதலிமார்" - 2010
  History of Adankappattu (Vanni) Part-5
  "Adankappattu Mudaliyars" - 2010
- "தொலைக்காட்சிச் செய்திகள்"
  தொழில் நுட்பங்களும் பயிற்சிகளும் - 2008
  "Television News" Technics & Training - 2008
- அடங்காப்பற்று (வன்னி ) வரலாறு பாகம் -4
  "மாப்பாண – மடப்பளி வன்னியர்" - 2007
  History of Adankappattu (Vanni) Part-4
  "Mappana-Madappali Vanniyar" - 2007
- அடங்காப்பற்று (வன்னி ) வரலாறு பாகம் -3
  "சுதேசத் தலைமைகள்" - 2006
  History of Adankappattu (Vanni)Part -3
  "Native Chieftains" - 2006
- அடங்காப்பற்று (வன்னி ) வரலாறு –பாகம் -2
  "அடங்காப்பற்று பண்டாரவன்னியன்" - 2005
  History of Adankappattu (Vanni) Part -2
  (2nd Edition)"Pandara Vanniyan" - 2005
- அடங்காப்பற்று (வன்னி ) வரலாறு பாகம் -1
  "கி.மு.- கி.பி." - 2004
  History of Adankappattu (Vanni) Part -1
  "B.C-A.D" - 2004
- "பண்டாரவன்னியன்"- குருவிச்சி நாச்சியார்
  வன்னிப் பாரம்பரிய நாடகம் - 2003
  Pandara Vanniyan –Kuruvichchi Nachchiya"
  (Traditional Drama) - 2003

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

- அடங்காப்பற்று (வன்னி ) வரலாறு - 2
  "அடங்காப்பற்று பண்டாரவன்னியன்" - 2002
  History of Adankappattu (Vanni)
  1st Edition"PandaraVanniyan" - 2002
- "அகதி முக(ா)ம்"
  அருணா செல்லத்துரையின் நாடகங்கள் - 2001.
  "Ahathi Muha a)m" Dramas.
  (Refugee Camp/ Face of a Refugee) - 2001.
- "வன்னிப் பிராந்தியக் கூத்துக்கள்"பாரம்பரியத் தேடல் - 2000.
  "Traditional Dramas in Vanni" Traditional Findings - 2000
- "இலங்கையில் தொலைக்காட்சி" வரலாற்றுச்சுவடி - 1997.
  (1997 ம் ஆண்டு வட கிழக்கு மாகாண இலக்கியப் பரிசு பெற்றது.)
  "Television in Sri Lanka" - 1997
  (Won the North East Literary Award –1997.)
- "நந்தி உடையார்" வன்னிப் பாரம்பரிய வரலாற்று நாடகம் - 1996.
  (1996 ம் ஆண்டு சாகித்திய மண்டலப் பரிசு,
  சிறந்த வானொலி நாடகப் பிரதிக்கான /உண்டா அபிநந்தன/
  தங்க விருது பெற்றது. )
  "Nanthi Udaiyar "Vanni Historical & Traditional Drama - 1996
  (Won /1996 Sahithiya Award & "Unda Abhinandana"
  Gold Award for the best Radio Drama Script.)
- அருணா செல்லத்துரையின் "மெல்லிசைப்பாடல்கள்" - 1994.
  (வானொலி, தொலைக்காட்சியில் ஒலி-ஒளிபரப்பாகியவை.)
  Aruna Selladuraiyin "Mellisai Paadalkal" (Light Songs) -1994
- " வீடு " தொலைக்காட்சி நாடகமும், வானொலி நாடகங்களும் - 1993.
  (1994 ம் ஆண்டு யாழ். இலக்கியப் பேரவையின் சிறந்த
  நாடக நூலுக்கான இலக்கியச் சான்றிதழ் பெற்றது.)
  "Veedu" Teledrama/ Radio Dramas -1993
  (Selected for the best Drama book - 1994 by
  Ilanakai Literary Council Jaffna.)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## ஆசிரியரின் ஏனைய பங்களிப்புகள்
## Contribution by the Author

**ஒலியில் .. .. ..**

"ஒலித்தென்றல் - 1" மெல்லிசைப்பாடல்கள் - ஒலிப்பேழை - 1994
"Olithenral - 1 " Light Songs Audio Cassette - 1994

"ஒலித்தென்றல் - 2" மெல்லிசைப்பாடல்கள்-ஒலிப்பேழை - 1996.
" Olithenral - 2 " Light Songs Audio Casstte - 1996

"நந்தி உடையார்" வன்னிப்பாரம்பரிய வரலாற்று நாடகம் - ஒலிப்பேழை - 1996
"Nanthi Udaiyar " Vanni Historical & Traditional Drama Audio Cassette - 1996

"நந்தி உடையார்" வன்னிப்பாரம்பரிய வரலாற்று நாடகம் - (சி.டி.) இறுவட்டு - 1996
"Nanthi Udaiyar" Vanni Historical & Traditional Drama/Compact Disc (CD) - 1996

**ஒளியில் .. .. ..**

"வேழம்படுத்த வீராங்கனை" முல்லைமோடி வட்டக்களரி நாட்டுக் கூத்து. ஒளிப்பேழை - 1994.
"Vezhampadutha Veerankanai" Mullai Moody Vaddakkalary, Traditional Folk Drama Video Cassette- 1994.

"திருப்பங்கள்", " வீடு ", ஆகிய தொலைக்காட்சி நாடகங்கள் (ரூபவாகினி )

"மனக்கோலங்கள்" வெளி நிறுவனம் ஒன்றிற்காகவும்,
"யாழ்தேவி", "தண்டனை" போன்ற தொலைக்காட்சி நாடகங்கள் தொலைக்காட்சி நாடகப் பயிற்சிப் பட்டறைகளுக்காகவும் தயாரிக்கப்பட்டவையாகும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"ஒருநாள்" தொலைக்காட்சி விவரண நாடகம் (இறுவட்டு) 2008
(வடமாகாண சபைக்காக எழுதி நெறிப்படுத்தித் தயாரிக்கப்பட்டது.)

**அரங்கில் .. .. ..**

"கோவலன் கூத்து" முல்லைமோடி வட்டக்களரி நாட்டுக் கூத்து
1974 ம் ஆண்டு இலங்கை கலாசாரப் பேரவையின் அகில இலங்கைத் தமிழ் நாடக விழாவில் முதற் பரிசு பெற்றது.

"வேழம்படுத்த வீராங்கனை" முல்லைமோடி வட்டக்களரி நாட்டுக் கூத்து
1994 ம் ஆண்டு கொழும்பு பாடசாலை மட்டத்திலான தமிழ்த் தினப் போட்டிகளில் பரிசு பெற்றது.

"நந்தி உடையார்" வன்னிப் பாரம்பரிய வரலாற்று நாடகம்.
1996 ம் ஆண்டு வவுனியா கல்வியியற்கல்லூரி மாணவர்களால் வவுனியா நகரசபையிலும், கொழும்பிலும் மேடையேற்றப்பட்டது.

"தரைதட்டிய மீன்கள்" சமகாலப் பிரச்சினைகள்.
1998 ம் ஆண்டு யாழ் - இந்து மகளிர் கல்லூரி பழைய மாணவிகளின் கொழும்புக்கிளையினருக்காக கல்லூரியின் அபிவிருத்தி நிதிக்கென, கொழும்பு சரஸ்வதி மண்டபத்தில் மேடையேற்றப்பட்டது.

"அகதி முக(ா)ம்" சமகாலப் பிரச்சினைகள்.
1998 ம் ஆண்டு அரச தமிழ் நாடக விழாவின் இறுதிப் போட்டிக்குத் தெரிவு செய்யப்பட்டு கொழும்பு மருதானை எல்பின்ஸ்டன் அரங்கில் மேடையேற்றப்பட்டது.

"நவீன நாரதர்" சமகாலப் பிரச்சினைகள்.
1999 ம் ஆண்டு கொழும்பு இந்துக் கல்லூரி கலை விழாவில் மாணவர்களால் மேடையேற்றப்பட்டது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# என்னுடன் நீங்கள்...

அடங்காப்பற்று வன்னி வரலாற்றின் ஐந்தாம் பாகம் வெளிவருகிறது.

அநேக விடயங்களைத் திரட்ட முடியாமல் போனதற்கு பல காரணிகளைக் கூறலாம். ஆய்வுக்குறிப்புக்கள் அனைத்தும் அடிப்படை நூலிலிருந்து தரப்படுவதால், சில எழுத்துப்பிழைகள் காணப்படுகின்றன.

ஐந்து பாகங்களையும் ஒன்றிணைத்து அடங்காப்பற்று வன்னி வரலாற்று நூலை வெளியிடத் தீர்மானித்துள்ளேன்.

அடங்காப்பற்று வன்னி ஆய்விற்குத் தேவையானவற்றை தனி மனிதனாகச் செய்து முடிப்பது சிரமமான காரியம்.

நூல் அறிமுகம் தந்த திருமதி மாதவி சிவலீலன், வழக்கறிஞர் வி.பி. லிங்கஜோதி, எஸ். மயூரன், கோவிலூர் செல்வராஜன் மற்றும் நான்கு பாகங்களையும் ஆய்வு செய்து விமர்சனம் எழுதிய மதிப்பிற்குரிய விமர்சகர் கே. எஸ். சிவகுமாரன் அவர்களுக்கும் நன்றி கூறக் கடமைப்பட்டுள்ளேன்.

ஐந்தாம் பாகம் வெளிவருவதற்கு பல வகைகளிலும் ஊக்கம் தந்த வவுனியூர் இரா. உதயணன் அவர்களுக்கும் மனைவி (பேபி) சிவசோதி, மகள் ஜானகி, மகன் சுஜேன் ஆகியோருக்கு எனது நன்றிகளைத் தெரிவிக்கின்றேன்.

**அருணா செல்லத்துரை**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உள்ளே...


| | தலைப்பு | பக்கம் |
|---|---|---|
| 01. | அடங்காப்பற்று (வன்னி) வரலாறு: | 01-04 |
| 02. | முதலிமார் ஒரு முன்னோட்டம் | 05-16 |
| 03. | பரராஜசேகரன் மதமாற்றம் | 17-26 |
| 04. | அடங்காப்பற்று (வன்னி) ஆட்சி முறை | 27-32 |
| 05. | ஆங்கிலேயர் காலம் | 33-42 |
| 06. | வன்னி (அடங்காப்பற்று) நிர்வாகம் | 43-67 |
| 07. | வன்னியில் முதலிமார் கடமைகள் | 68-74 |
| 08. | வவுனியா - நிர்வாகம் | 75-86 |
| 09. | முல்லைத்தீவு - நிர்வாகம் | 87-95 |
| 10. | கரைதுறைப்பற்று முதலிமார் | 96-107 |
| 11. | மன்னார் முதலிமார் | 108-113 |
| 12. | மட்டக்களப்பு முதலிமார் | 114-116 |
| 13. | நூல் வெளியீட்டுரைகள்<br>மாலதி சிவலீலன்<br>வழக்கறிஞர். வி. பி. லிங்கஜோதி<br>எஸ். மயூரன்<br>கோவிலூர் செல்வராசன் (கவிதை) | 117-133 |
| 14. | கே. எஸ். சிவகுமாரன் விமர்சனங்கள் | 134-144 |


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**அத்தியாயம் - ஒன்று**

# அடங்காப்பற்று (வன்னி) வரலாறு

அடங்காப்பற்று (வன்னி) வரலாறு சம்பந்தமாக நான்கு பாகங்கள் வெளியிடப்பட்டுள்ளன.. இவையனைத்தும் அந்தந்தக் காலத்திற்குரிய வரலாற்றுக் குறிப்புகளேயன்றி தொடர்ச்சியான ஒரு முழுமையான வரலாறாக அமையவில்லை. இதுவரை காலமும் அடங்காப்பற்று வரலாறுபற்றிய வரலாற்றுச் சான்றுகள் ஆய்வு செய்யப்படாமையே இதற்கான காரணமாகும்.

இந்தப் பிரதேசத்தின் வரலாற்றுச் சான்றுகள் பல வடிவங்களில் உள்ளன.

- ✦ வரலாற்றுச் சின்னங்கள்.
- ✦ தொல்பொருள் ஆய்வுக் குறிப்புகள்.
- ✦ நாட்டுப் பாடல்கள்.
- ✦ அடங்காப்பற்றுப் பிரதேசத்தில் வெளிவந்த கோயில் பதிகங்கள்
- ✦ சிங்களப் பிரதேச வரலாற்று நூல்கள்.
- ✦ யாழ்ப்பாண வரலாறு சம்பந்தப்பட்ட ஆங்கில மற்றும் தமிழ் நூல்கள்
- ✦ அந்நியர் ஆட்சிக்கால வரலாற்று நூல்கள்.

ஆகியவற்றை ஆய்வு செய்து முறையான வரலாற்றை வெளிக் கொணர்வதே எனது நோக்கமாகும். இவற்றை ஒட்டுமொத்தமாக ஆய்வு செய்து அடங்காப்பற்று (வன்னி) வரலாற்றை முழுமையாக வெளிக் கொணர்வது என்பது மிகப் பெரிய விடயமாகும்

இதனால் அடங்காப்பற்றுப் பிரதேசத்தின் ஆய்வுகளை தொடர்ச்சியான ஆண்டுக் கணக்கில் வெளிக் கொணர முடியாமல் இருப்பது கவலைக்குரிய விடயமாகும். இந்த ஆய்வுகள் முடிவடைந்ததும் அடங்காப்பற்று வரலாறு சான்றுகளுடன் முழுமையாக வெளிவரும். இதுவரை வெளியிடப்பட்ட நான்கு பாகங்களில்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

- கிறிஸ்துவிற்கு முற்பட்ட - பிற்பட்ட காலத்திற்கான வரலாற்றுச் சான்றுகள்.
- கி.பி. 1750 லிருந்து 1811 க்குட்பட்ட காலத்தில் வாழ்ந்த பண்டாரவன்னியன் வரலாறு.
- கி.பி. 1750லிருந்து 1895 வரை வாழ்ந்த சுதேசத் தலைமைகள் பற்றிய ஒரு வரலாற்றுக் கண்ணோட்டம்.
- 1658 லிருந்து 1758 வரை டச்சுக்காரர் காலத்தில் அடங்காப்பற்றில் ஆட்சி அதிகாரம் செலுத்திய மாப்பாண-மடப்பளி வன்னியர்கள் பற்றிய வரலாறு ஆகியன வெளிவந்துள்ளன.

டச்சு மற்றும் ஆங்கிலேயர் காலத்தில் அடங்காப்பற்றில் அதிகாரம் செலுத்திய முதலிமார் பற்றிய வரலாறுகள் ஐந்தாம் பாகமாக வெளிவருகின்றது.

அடங்காப்பற்று வரலாற்றில் பின்வரும் பிரிவுகள் ஆய்வு செய்யப்படவேண்டும்.

1. பெருங்கற்காலம்,
2. குறுணிக்கற்காலம்,
3. அரசர்கள் யுகம்,
4. வன்னியர் ஆக்கிரமிப்பு,
5. போர்த்துக்கேயர் ஆட்சிக் காலம்

மேற் கூறிய பிரிவுகள் ஆய்வு செய்யப்பட்டதும் அடங்காப்பற்றின் முழுமையான வரலாற்றிற்குத் தேவையான ஆய்வுகள் முடிவடைந்துவிடும்.

இந்த ஆய்வு முயற்சிகள் குழுக்களாக செய்யப்படவேண்டும். யாழ்ப்பாண வரலாற்று நூல்கள் சில இதற்கு முன்னுதாரணங்களாக இருக்கின்றன. உதாரணத்திற்கு "யாழ்ப்பாண வைபவ கௌமுதி" என்ற நூலைக் குறிப்பிடலாம். வண. சா. ஞானப்பிரகாசர், கனம் சி. டி.. வேலுப்பிள்ளை, மெஸ்.ச.குமாரசுவாமி போன்றோர் விபரங்களைச் சேகரித்து வழங்கினர். நூலை மெஸ். க. வேலுப்பிள்ளை வெளியிட்டுள்ளார். பலர் உதவிகளை வழங்கியுள்ளனர். அதேபோன்று பேராசிரியர்களும் விரிவுரையாளர்களும் ஏனைய ஆர்வலர்களும் சேர்ந்து தனித்தனியாக கட்டுரைகளை எழுதித் தொகுத்து யாழ்ப்பாண வரலாற்று நூல்களை வெளியிட்டுள்ளமையும் குறிப்பிடத்தக்கது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அடங்காப்பற்று (வன்னி)

பூநகரி, கோணாவில், கல் நீராவி மலை, வெடுக்குநாறிமலை, நாகதாழி, பாவாடைக்கல், வவுனிக்குளம், குருந்தனூர் மலை, கற்சிலைமடு, மற்றும் கூழாமுறிப்பு போன்ற இடங்களில் உள்ள ஈமத்தாழிகளும் ஏனைய இடிபாடுகளும் பெருங் கற்காலத்தில் மனிதர்கள் வாழ்ந்துள்ளார்கள் என்பதற்கு சான்று பகருகின்றன.

இப்பிரதேசத்தில் உள்ள 700க்கும் மேற்பட்ட குளங்கள் பிரதேசத்தின் தொன்மையையும் வளத்தையும் காட்டுவதற்கு சான்றாதாரங்களாகின்றன. இந்தக் குளங்கள் அரசர்கள் யுகத்தில் கட்டப்பட்டதாகவும், முறையான நீர்ப்பாசன முறை இருந்ததாகவும் வேளாண்மை செழித்து ஓங்கியதாகவும் தெரிவிக்கப்படுகின்றது. இதற்கு ஆதாரமாக இப்பிரதேசத்திலுள்ள தண்ணிமுறிப்புக்குளம், பதவியாக்குளம், முத்தையன்கட்டுக்குளம், வவுனிக்குளம், கனகராயன்குளம், இரணைமடுக்குளம், மற்றும் கட்டுக்கரைக்குளம் போன்ற பெரிய குளங்களைக் குறிப்பிடலாம். இவற்றிற்கு தேவையான சில தகவல்களை அம்பலவாணர் மயூரன் அவர்கள் லண்டனில் நடந்த அடங்காப்பற்று (வன்னி) வரலாறு பாகம் - 4 "மாப்பாண வன்னியர் – மடப்பளி வன்னியர்" நூல் வெளியீட்டு விழாவில் கட்டுரையாக சமர்ப்பித்திருந்தார். அந்தக் கட்டுரையும் இந்த நூலில் சேர்க்கப்பட்டுள்ளது.

அடுத்தடுத்து தென்னிந்திய சேர சோழ பாண்டிய மன்னர்கள் இலங்கை மீது படையெடுத்தும், தல வழிபாட்டிற்காகவும் வந்துள்ளனர். இவர்கள் படையெடுத்து அதிகாரத்தைக் கைப்பற்றியதின் காரணமாக தென்னிந்தியாவிலிருந்து வன்னியர்களை வரவழைத்து கிழக்கு மாகாணத்திலும், அடங்காப்பற்றின் ஒரு பகுதியிலும் குடியமர்த்தினர். காலப்போக்கில் வன்னியர்களின் தொகை அதிகரித்ததாக வரலாறுகள் தெரிவிக்கின்றன. அவர்களின் வருகையின் போது சிவன், விஷ்ணு வழிபாடுகளும், நாச்சிமார், வழிபாடுகளும் பௌத்த மதப்பரம்பலும் ஏற்பட்டுள்ளன.

பாண்டி நாட்டு இராசகுமாரத்தியை தென்னிந்தியாவிலிருந்து இலங்கைக்கு அழைத்து வந்தபோது அறுபது வன்னியர்கள் காவலர்களாக இலங்கைக்கு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வந்தனர். அதன் பின்னர்தான் அடங்காப்பற்றுப் பிரதேசம் வன்னியர்களின் அதிகாரத்தின் கீழ் கொண்டுவரப்பட்டது. அவர்களுக்குள் ஏற்பட்ட போட்டி மற்றும் யுத்தம் காரணமாக அநேகர் உயிரிழந்தனர். பனங்காமத்தில் இருந்த வன்னியர்கள் நாடு திரும்பும்போது வெள்ளாள மாப்பாணர்களிடம் பதவிகளை ஒப்படைத்துச் சென்றனர். இதன் பின்னர் யாழ்ப்பாணத்தில் இருந்த வெள்ளாள சாதியினருள் மாப்பாணர்களும் மடப்பளியினரும் வன்னியனார்களாக நியமிக்கப்பட்டனர். 16 ம் நூற்றாண்டிலிருந்து அந்நியர்கள் இவர்களைக் கைக்கூலிகளாகப் பாவித்து அடங்காப்பற்றின் வளத்தை சூறையாடி வந்தனர்.

வன்னியனார்களாகப் பதவி வகித்த வேளாளர் அப்பதவிகளை தமது பரம்பரையினருக்கு உரியதாக்கினர். இதற்கு ஒரு தொகைப் பணத்தை அந்நியருக்குச் செலுத்தி தமது இரத்த உறவுகளை அந்தந்தப் பதவிகளில் தொடர்ந்தும் அமர்த்தினர். இதனால் யாழ்ப்பாணப் பிரதேசத்தில் இருந்து அடங்காப்பற்றிற்கு நியமனம் பெற்று வந்த படித்த முதலிமார்களுக்குமிடையே கருத்து வேறுபாடுகள் ஆரம்பித்தன. இதனால் ஒருவரையொருவர் காட்டிக் கொடுத்தனர்.

பல்வேறு காலங்களில் அந்நியர்களிடம் காட்டிக் கொடுக்கப்பட்டவர்கள் வரிசையில் கயிலாய வன்னியன், மரிய செம்பாத்தை, டொன் நிற்சிங்க சேனாதிராயன், டொன் தியோகு புவி நல்ல மாப்பாணன், டொன் ஜுவான் குலசேகர நல்லமாப்பாண வன்னியனார், பண்டாரவன்னியன், குமாரசேகர முதலியார், பெரியகுளம் மாப்பாண முதலியார், பரியாரிவேலன் போன்றோரைக் குறிப்பிடலாம்.

ஆங்கிலேயருடைய ஆட்சிக் காலத்தில் “வன்னியன்” என்ற பதவிகள் ஒழிக்கப்பட்டு அடங்காப்பற்றுப் பிரதேசத்தில் முதலிமார் என்ற பதவிக்கு முதலிடத்தை வழங்கினர். அடங்காப்பற்றில் முதலிமார் முதலிடத்தை வகிக்கத் தொடங்கிய பின்னரும் கிழக்கு மாகாணத்தில் "வன்னியன்" என்ற பதவி தொடர்ந்தும் வழங்கப்பட்டு வந்துள்ளது. ஆனால் துரதிருஸ்டவசமாக அடங்காப்பற்றுப் பிரதேசத்திற்கு “வன்னி” என்ற பெயர்மாற்றம் நிலைத்ததோடு அதனை வரலாற்று ஆசிரியர்கள் காடு என்பது வனமாக மாறி வன்னியாகிவிட்டது என அர்த்தப்படுத்தியும் வந்துள்ளனர்.

இந்தப் பிரதேசத்தின் தொன்மைத் தன்மையையும் வளங்களையும் 16ம் நூற்றாண்டுக்குள் மட்டுப்படுத்தியே வரலாறுகள் எழுதப்பட்டுள்ளன.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## அத்தியாயம் - இரண்டு

# முதலிமார் ஒரு முன்னோட்டம்

அடங்காப்பற்றில் முதலிமாரின் ஆட்சிமுறையை ஆராய்வதற்கு முன்னர் அதனைச் சுற்றியிருந்த யாழ்ப்பாணப் பிரதேசம், திருகோணமலை, மட்டக்களப்பு மற்றும் அனுராதபுரம் (நுவரகலாவெவ) ஆகிய பிரதேசங்களில் இருந்த நிருவாக ஆட்சி முறைகளை ஆய்வு செய்ய வேண்டியது அவசியமாகின்றது.

மன்னார் ஆட்சிக்காலத்தில் வன்னியில் இருந்த ஆட்சி முறையை ஆய்வு செய்வதற்கு ஆதாரங்கள் கிடைப்பது மிகவும் அரிதாகவே இருக்கின்றது.

வன்னியில் மன்னார் தவிர்ந்த ஏனைய பிரதேசங்கள் போர்த்துக்கேயருடைய ஆட்சியின் கீழ் இருக்கவில்லை. பிற்காலத்தில் யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த பலர் அதிகாரம் செலுத்தி வந்தமைக்கு யாழ்ப்பாண வரலாறுகளும், ஆங்கில மற்றும் தமிழ் வரலாற்று நூல்களும் சான்று பகருகின்றன.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"இந்த நாட்டு மக்கள் றோமன் கத்தோலிக்க சமயத்தை சேர்ந்தவர்களல்ல. போர்த்துக்கேயருடைய சமயமானது அவர்களுடைய வருகைக்கு முந்தியதல்ல. சமயமும் அதனோடு உணர்ச்சிபூர்வமான இணைப்புக்களும் பிந்திய காலத்தில் விருத்தியடைந்தவையாகும். போர்த்துக்கேயருடைய வரலாற்றிலே அதிக பக்கங்களை பிடித்துக்கொண்ட முதலிமார்களில் டொமிங்கோஸ் கொரயா, மனுவல் டி அன்ராடோ, மற்றும் டொன் கொஸ்மஸ் ஆகியோரைக் குறிப்பிடலாம். அவர்களில் இருவர் தங்களுக்குள் தாங்களே போரிட்டுக் களைப்படைந்த இந்த நாட்டைச் சேர்ந்தவர்களாகும். எனினும் கொரயா பின்னர் செய்த தவறுகளுக்காக இராஜத்துரோகி எனக் குற்றஞ் சாட்டப்பட்டு தூக்கிலிடப்பட்டார்." The chieftains of Ceylon by J.C. Van sandan 1936- பக். 9.

---

This does not, however, that the people of this country were Roman Catholic - the religion of the Portuguese - before the arrival of the latter. The religious and sentimental attachment referred to was, indeed, a later development. Prominent amongst the Mudaliyars who loomed large in the pages of Portuguese history are Domingos Corea, Mannuel D Andrado and Don Cosmas, two of whom later went over to their own war- weary countrymen. Corea, however, was recaptured and having recanted in penitence died the death of a traitor on the scafold" The chieftains of Ceylon by J.C. Van sandan 1936. Page -9

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கண்டி மாகாணத்தைப் போன்று பாரம்பரியமாக தலைமைப் பதவிகளும், நீதி பரிபாலனக் கடமைகளும் இலங்கையின் வடக்கு கிழக்கு பிரதேசங்களிலும் வழங்கப்பட்டன. ஒப்பீட்டளவில் கீழ்நாட்டு முதலியார்களுக்கு கொடுக்கப்பட்டதைப் போன்றே இவை வழங்கப்பட்டன. ஆனால் அலுவலகப் பதவிகளுக்கான பெயர்களும் பதவிகளும் மாறுபட்டு இருந்தன. வடக்கில் தலைமைப் பதவிகள் மணியகாரர், அதிகாரம் என்ற பதவிகளும், கிழக்கில் "வன்னியர்" என்ற பெயரிலும் பதவிகள் வழங்கப்பட்டன. ஆனால் இந்த இரண்டு மாவட்டங்களிலும் அலுவலகங்களில் முதலியார் என்ற பதவிப் பெயருடன் பலர் கடமையாற்றியுள்ளனர். The chieftains of Ceylon by J.C. Van sandan 1936- பக். 15

---

Like the Headmen System in vogue in the Kandyan Provinces, the duties and jurisdiction of the Chieftains of the North and the east of Ceylon are amterially the same as those of the low country Mudaliyar, with the difference again in the official designations, the Chief Headmen of the North being known as Maniyagarars and Adikarams, and those in the east as Vanniyahs. Nevertheless, in both these Districts there are also those who hold office and title of Mudaliyar.
The chieftains of Ceylon by J.C. Van sandan 1936- Page 15.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## போர்த்துக்கேயர் காலம் : 1543-1658 வரை (பறங்கியர்)

இலங்கையைப் பொறுத்த வரையில் அந்நியர் ஆட்சிக்காலம் என்பது 1505 ஆண்டிலிருந்து ஆரம்பிக்கின்றது. ஆனால் வடபுலத்தில் போர்த்துக்கேயரின் ஆட்சிக்காலம் 1543ம் ஆண்டிலிருந்து ஆரம்பமாகியது என்று கூறலாம்.

அந்நியர் ஆதிக்கத்தில் தலையாரி நியமனங்கள் குடும்ப அங்கத்தவர்களுக்கு வழங்கும் வழக்கம் இருந்துள்ளது. இதற்கு அவர்கள் மேலதிக கட்டணங்கள் செலுத்த வேண்டும். பதவிகள் அனைத்தும் தகுதி அடிப்படையில் வழங்கப்படவில்லை. ஆட்சியாளர்கள் இதனை பணம் வசூலிக்கும் ஒரு நடவடிக்கையாகவே நடத்தி வந்தனர். பண வசதி படைத்தவர்கள் இரண்டு மூன்று பதவிகளையும் பெற்றுள்ளனர். பின்னர் பணவசதி படைத்தவர்களுக்கு மட்டுமல்ல, வரி வசூலிக்கும் நோக்கத்தை கருத்தில் கொண்டு சாதி மத வேறுபாடின்றி எல்லோருக்கும் பதவிகள் வழங்கப்பட்டுள்ளன. இதனால் ஆட்சியாளர்கள் பலவித பிரச்சினைகளுக்கு முகம் கொடுக்க வேண்டியேற்பட்டதாக குறிப்புகள் தெரிவிக்கின்றன.

அடிக்கடி நிர்வாக முறைகளில் மாற்றங்கள் செய்யப்பட்டுள்ளன. இதனால் பதவிப் பெயர்களும் மாற்றம் பெற்றுள்ளதை அவதானிக்கக் கூடியதாக இருக்கின்றது. ஆரம்ப காலத்தில் உயர் பதவிகள் அனைத்தையும் அந்தந்த ஆட்சியாளர்களே வகித்துள்ளனர்.

போர்த்துக்கேயர் காலத்தில் முதலிமார்களுக்கு பதவிகள் வழங்கும்போது டொமிங்கோஸ், மனுவல், டொன் போன்ற பட்டங்களுடன் கிறிஸ்தவப் பெயர்களும் சேர்த்து பதியப்பட்டுள்ளன. யாழ்ப்பாணத்தில் இருந்த பதவிகள் நிர்வாக முறைகள் பற்றி யாழ்ப்பாணச் சரித்திரத்தில் செ.இராசநாயகம் முதலியார் மற்றும் ஆ.முத்துத்தம்பிப்பிள்ளை ஆகியோர் பின்வருமாறு குறிப்பிட்டுள்ளனர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## வழங்கப்பட்ட பதவிகள்

| | | | |
|---|---|---|---|
| 1. | அதிகாரம் | - | Adikaram |
| 2. | இறைசுவர் | - | Recebedor |
| 3. | தலையாரிகள் | - | Mayoral (மேயோறால்) |
| 4. | கிராமத் தலைவர்கள் | - | Village Headmen |
| | பட்டங்கட்டிகள் | - | Pattangatties |
| | (வரிவசூலிப்பவர்கள்) | | |

## தலைமைக்காரர் :

தமிழரசர் காலத்திற் போலவே "அதிகாரம்" எனுந் தலைமைக்காரர் பறங்கியர் காலத்தில் நியமிக்கப்பட்டிருந்தாலும், வரியறவிடும் முக்கிய தலைமைக்காரர், இறைசுவர் (Recebedor) என்றும் அவர்களுக்கு கீழுள்ளவர்கள் "தலையாரிகள் அல்லது "மேயோறால்" (Mayoral) என்றும் அழைக்கப்பட்டார்கள். உத்தியோகங்களெல்லாம் உயர்ந்த சாதித் தலைவர்களுக்கே கொடுக்கப்பட்டன. கிராமத் தலைவர்கள் பட்டங்கட்டிகளென்றழைக்கப்பட்டனர். யா.ச. செ.இராசநாயகம். பக்.136

## அதிகாரம்:

தலைமைக்காரர் பதவியாகும். ஆனால் இவருடைய பொறுப்புக்கள் குறைக்கப்பட்டு முக்கிய தலைமைக்காரராக இறைசுவர் நியமிக்கப்பட்டார்.

## முதலிப் பட்டம் :

முதலியென்னுஞ் சிறப்புப் பெயர் பண்டைக்கால முதல் வேளாளருக்கே உரியதாய் இருந்தது. பறங்கிகள் அதனை கரையாருக்குமாக்கினர். தமிழரசர் காலத்தில் மந்திரி, இலிகிதர் முதலிய உத்தியோகங்களிலிருந்தவர்கள் பெரும்பாலும் வேளாண் முதலிகள். அதுபற்றிப் பறங்கியரசு ஒல்லாந்தவரசுகளிலும் அவ்வுத்தியோக முடையவரெல்லாம் முதலியாரெனப்பட்டனர். பின்னர் அவ்வுத்தியோகமும் முதலியுத்தியோக மெனப்பட்டது.

## தலையாரி நியமனம் : காலம் கி.பி.1620

ஒரு தலையாரிக்கு ஆண் சந்ததியிருந்து அவ்வுத்தியோகத்திற்கு மகன் வரவேண்டுமேயானால் அத்தந்தையாகுதல், மகனாகுதல் அரச பண்டாரத்திற்கு 60 சக்கரங் கொடுத்து (ஒரு சக்கரம் 2 பொற்பணம் கொண்டது) உத்தியோகச் சீட்டு பெறவேண்டும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

### வன்னியர் - வன்னியனார்

வன்னியர் ஆண்ட இடத்திற்கு வன்னியென்னும் பெயர் வந்தது. அவ்வன்னியரை யடக்கி அவ்வன்னியைக் கைக்கொண்ட வேளாளர் (முதலிமார்) வன்னியனாரெனப்பட்டார்கள். இதுவே வன்னியருக்கும் வன்னியனாருக்குமுள்ள வேற்றுமை. யா. ச. ஆ. முத்துத்தம்பிப்பிள்ளை. பக். 79.

### உத்தியோக வரிசைகள் :

சுதேசிகளுக்கு உயர்தரத் தலைமைக்கார உத்தியோகங்கள் கொடுத்தபோது, அவர்களுக்குக் கொடுத்த உத்தியோக நியமனச் சீட்டுகளில், அவர்களுடைய வரிசைகளுங் கூறப்பட்டன.

### மாகாணசபை :

கம்மந்தோருக்கு உதவியாக, அரசாங்க மாகாணசபையொன்று யாழ்ப்பாணத்திலிருந்தது. அதற்கு கம்மந்தோர் தலைவராகவும், திஸ்ஸாவையும் அரசிறை வருமான உத்தியோகத்தனும், சம்பளக் கணக்கனும் (Zoldy Bockhouder) வர்த்தக பரிபாலன உத்தியோகஸ்தனும் (Negotive Bockhouder) களஞ்சியக் கணக்கனும் (Pkhuis Meester), அரசாங்க நியாயவாதியும் (Public Prosecutor), அரசாங்க காரியதரிசியும், யாழ்ப்பாணத்திலிருந்த வன்னிக்கப்பித்தானும் அங்கத்தினராக இருந்தனர். யா.ச. செ.இராசநாயகம். பக்.174 -175.

போர்த்துக்கேயர் இலங்கையின் வடக்கு கிழக்கு பிரதேசத்தில் தமது நிர்வாகத்தைக் கொண்டு நடத்துவதற்கு மாகாணசபையொன்றை அமைத்திருந்தனர். மாகாணசபைக்கு கம்மந்தோர் (Commander) தலைவராக இருந்தார்.

### மாகாணசபையில் அங்கம் வகித்தோர்

1. கம்மாந்தோர், தலைவர் - Commander
2. அரசிறை வருமான உத்தியோகத்தன்
3. திசாவை - Tissawa
4. அரசிறை வருமான அதிகாரி
5. சம்பளக் கணக்கன் - Zoldy Bockchouder
6. வர்த்தக பரிபாலன உத்தியோகத்தன் - Negotive + Bockhouder
7. களஞ்சியக் கணக்கன் - Pkhuis Meester
8. அரசாங்க நியாயவாதி - Public Prosecutor
9. அரசாங்க காரியதரிசி -
10. வன்னிக் கப்பித்தான் - Wanny Captain

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஒல்லாந்தர் காலம் : 1658-1795

## உத்தியோக நியமனங்கள் :

| | | | |
|---|---|---|---|
| 1. | தேசாதிபதி | - | Governor |
| 2. | கம்மாந்தோர் | - | Commandeur |
| 3. | திஸாவை | - | Tissawa |
| 4. | உப திஸ்ஸாவை | - | Asst Tissawa |
| 5. | ஒப்பர் கூப்மென் | - | Opper Koopman |
| 6. | கூப்மென் | - | Koopman |
| 7. | வர்த்தக நாம சிவில் உத்தியோகத்தர் | - | Onder Koopman |

## சுதேசிகள்

| | | | |
|---|---|---|---|
| 8. | முதலிமார் | - | Mudalier |
| 9. | மேயொறால் | - | Mayoral |
| 10. | இறைசுவர் | - | Recebedor |
| 11. | கிளார்க் | - | Clerk |
| 12. | ஆராய்ச்சி. | - | Arachchi |
| 13. | கையாள் | - | Peon |
| 14. | பட்டங்கட்டி | - | Pattangattis |

ஒல்லாந்தரென நாமிங்கே கூறிச் செல்லும் "ஒல்லாந்த கீழிந்திய கமபனியாரின் கையிற் சிக்கிய இலங்கைக் கடற்கரைத் தேசங்களும், தென்னிந்தியாவிலே சிலபகுதிகளும், கொழும்பிலிருந்த தேசாதிபதி யொருவரின் ஆட்சியின் கீழ் வைக்கப்பட்டன. இத்தேசாதிபதியின் கீழ் யாழ்ப்பாணமுங் காலியும் இரு கம்மந்தோரின் (Commandeur) ஆட்சியிலிருந்தன. அதிகாரமுறையில், யாழ்ப்பாணக் கம்மந்தோர் உத்தியோகர் தேசாதிபதிக்கு இரண்டாவதாகவும், காலிக் கம்மந்தோருக்கு மேற்பட்டவராகவும் மதிக்கப்பட்டபடியால், தேசாதிபதி மாற்றம் பெறும்போது, யாழ்ப்பாணக் கம்மந்தோர் உத்தியோகரே அவர் பதவிக்கு நியமனம் பெற உரிமையுடையவராய் இருந்தனர். கம்மந்தோருக்கு "கௌரவ" என்னும் மகுட வாசகத்தால் அழைக்கப்படும் உரிமையுமிருந்தது.

யாழ்ப்பாணக் கம்மந்தோருக்குக் கீழ் மன்னார், திருக்கோணமலை, மட்டக்களப்பு என்னும் மூவிடங்களுமிருந்தன. தலைநகராகிய கொழும்பைப் போல, ஒவ்வொரு உத்தியோகப் பகுதிக்கும் உத்தியோகத்தருங் காரியாலயமும் உண்டு.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கம்மாந்தோருத்தியோகருக்குக் கீழ், ஒல்லாந்த சாதியாரான ஒரு "திஸ்ஸாவை" யையும், ஓர் உப திஸ்ஸாவையையும், ஒப்பர் கூப்மன் (Opper Koopman) , கூப்மன், ஒன்டர் கூப்மன் (Onder Koopman) என வர்த்தக நாம சிவில் உத்தியோகத்தரையும், அவர்களின் கீழ் சுதேச தலைமைக்காரராக முதலியார், மேயொறால் அல்லது இறைசுவர், ஆராச்சி, கையாள், பட்டங்கட்டி முதலியோரையும் அமைத்தனர். பறங்கிக்காரர் காலத்திற் போலவே ஒல்லாந்தரும் யாழ்ப்பாணத்தை நான்கு பிரிவுகளாகவும், முப்பத்திரண்டு கோயிற்பற்றுக்களாகவும் பிரித்து அதிகாரம் செலுத்தி வந்தனர். நான்கு பிரிவுகளுக்கும், தீவுப்பற்றுக்களுக்கும் ஒவ்வொரு இறைசுவரும், கிளார்க்கும் நியமிக்கப்பட்டனர்.

**தலைமைக்காரர் வேதனம் :**

அதிகாரம் மாசம் 6 இறைசாலும், முதலிமாரும் இறைசுவர்களும் பத்துப்பணமும் ஒருபறை அரிசியும்,
கிளார்க்குமார் 8 பணமும் ஒருபறை அரிசியும் பெற்று வந்தனர்.

## கடமைகள்:

**திஸ்ஸாவையின் கடமைகளாவன :**

கோட்டைக்கு வெளியிலிருக்கும் படைப்பொறுப்பும், றோட்டுகளைத் திருத்துவதும், சேற்று நிலங்களை நீர்போக்கி உலரச் செய்வதும், வேளாண்மையை விருத்திப்படுத்துவதும், நற்குணமும் நல்லொழுக்கமுமுடைய ஒருவரால் காலை மாலை பிரசங்கஞ் செய்விப்பதும், உணவுப்பொருள்களின் விலையை நியமிப்பதும், கடைகளையுஞ் சந்தைகளையும் மேற்பார்வையிடக் கணக்கர்களை நியமிப்பதும், மற்றும் பொருள் பெருக்கும் நன்மைக்கான வழிகளைத் திட்டஞ் செய்வதுமேயாம்.

**முதலியாரின் கடமைகளாவன :**

தத்தம் பிரிவுகளில் நடக்கும் சங்கதிகளை விசாரித்துக் காலத்துக்குக் காலம் அறிக்கைப்பத்திரம் அனுப்புவதும், அந்தந்தப் பிரிவுகளில் எவ்வெவ் வேலைகள் நடாத்த வேண்டுமோ அவற்றை நடாத்துவித்தலுமேயாம். கி.பி. 1661 ம் ஆண்டில் சில முதலிமாரைத் தவிர மற்றையோர் வேலைகளினின்றும் நிறுத்தப்பட்டனர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**இறைசுவர், மேயொறால் ஆகியோரின் கடமைகளாவன :**
தோம்புகளின்படி தலைவரி, நிலவரி, நெல்வரி, முதலிய வரிகளையும், ஊழியத்திற்காக *"சிக்கோஸ்" தண்டத்தை அறவிடுவதும் மூன்று மாசங்களுக்கொருமுறை, கம்மாந்தோரின் உத்தரவுப்படி, தனாதிகாரியிடம் அறவிட்ட பணத்தைக் கட்டுவதும், ஊரார் தத்தம் எஜமான்களுக்குச் செய்ய வேண்டிய கடமைகளைக் குறைவறச் செய்கின்றார்களாவெனப் பார்ப்பதுமேயாகும்.

**கிளார்க்குமார்**
கிளார்க்குமார் மேயொறால்மாரின் கணக்குகளைப் பதிந்து வைத்துத் தோம்புக் கணக்குகளோடொப்புடையனவோ எனப் பார்வையிடுவதேயாம். பின்னர் இவர்களும் முதலியார்கள் என அழைக்கப்பட்டனர்.

**பண்டாரப்பிள்ளை**
யாழ்ப்பாணக் கோட்டை கட்டுவதில் அனேகர் ஊழியஞ் செய்தனர். அவ்வேலையை மேற்பார்வை செய்யும் ஓவசியர்கள் பண்டாரப்பிள்ளைகளெனப்பட்டார்கள்.
(யா. ச. செ.இராசநாயகம் முதலியார் பக்கம் 137.

---

*இராஜகாரியம் என்னும் ஊழியஞ் செய்ய வேண்டியவர்கள் ஊழியத்திற்குப் போகாத ஒவ்வொரு நாளுக்குங் கொடுக்க வேண்டிய ஒரு பணம் "சிக்கோஸ்" (Chicos) தண்டம் எனப்பட்டது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**பட்டங்கட்டிகள்**

பட்டங்கட்டியென்னுமுத்தியோகம் கரையாருக்கும் முக்குவருக்குமேயுரியன. கி.பி. 1694 ம் ஆண்டில் மற்றைய சாதியாருக்கும் உத்தியோகங்கள் கொடுக்கப்பட்டபடியால், இதையிட்டு அவ்வருடத்து ஜூலை மாசத்தில் வேளாளரும் வன்னியருஞ் சேர்ந்து பெருங்கலகம் விளைவித்தனர்.

1937ம் ஆண்டு சி. இராசநாயகம் முதலியார் சமர்ப்பித்த கட்டுரையில் பட்டங்கட்டி பற்றிய விபரங்கள் சேர்க்கப்பட்டுள்ளன.
"பட்டங்கட்டிகள் என்போர் வரி அறவிடுவோராகும்., மற்றும் முக்கியர், திமிலர், ஆகியோரின் தலைமைக்காரரும் ஆகும். 1793ல் மன்னார் பரவர் குலத்தைச் சேர்ந்த அடப்பனார் கஸ்பர் பச்செக்கோ,, ஊர்காவற்றுறை அதிரியன் சில்வெஸ்ரர் ஆகியோர், டொன் தியோகு குருகுலசூரிய அரசுநிலையித்த முதலியார், மற்றும் யாழ்ப்பாணம் கரையூரைச் சேர்ந்த இறைசுவர் (வருமான வரி சேகரிப்பவர்) ஆகியோருடன் சேர்ந்து முத்துப்பாறைகளைக் பரீட்சித்து அறிக்கை சமர்ப்பிக்கும்படி பணிக்கப்பட்டனர். இவர்கள் பட்டங்கட்டிகள் என அழைக்கப்பட்டனர்.

Journal, R.A.S.(Ceylon) [Vol.XXXIV Page110]

---

Journal, R.A.S.(Ceylon) [Vol.XXXIV] (No.90-1937) Nallamappana Vanniyan by C.Rasanayagam Mudaliyar.Page 110.

6. Pattangatties were tax collectors and headmen among the Mukkiyer, Thimilar,etc. Gaspar Pachcheco, Adappanar of the Parawas of Mannar and Adrian Sylvester of Kayts who accompanied Don Deogo Kurukulasuriya Arasunilayitta Mudaliyar, Iraisuvar (Receiver of Revenue) of Karayour, Jaffna in 1793, to examine and report on the Pearl Banks, were called Pattangatties.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பதவி வரிசைகள்

யாழ்ப்பாணக் கம்மந்தோரின் முதல் வைத்தியனாகிய மடப்பளி டொன் சுவான் கந்தப்பன் இலங்கைக் காவல முதலியார் இறக்க. அவரிடத்திற்கு 1756ம் ஹு செப்டம்பர் மீ 29ந் திகதி நியமனமான தெல்லிப்பளை வெள். பூலோகசிங்க முதலியார் பிலிப்பு குமார வேலனுக்கு மாசம் ஒரு இறைசால் சம்பளமும், அரசவூழியமில்லாது 6 அடிமைகளும் சாதி வரிசைகளுடன் கொடுக்கப்பட்டன.

கி.பி. 1758 ல் நியமிக்கப்பட்ட யானைத் தரகனாகிய வண்ணார்பண்ணை வெள். தொன் பிலிப்பு சிற்றம்பல முதலியாருக்கு அரசவூழியமில்லாது 12 சிவியார் கொடுக்கப்பட்டதுமன்றி, என்னேரமும் எவ்விடத்திலுந் தலைப்பாகை அணிந்து கொள்ளலாம் என்றும், தண்டிகை பல்லக்குகள் சிவியாரால் காவப்படலாமென்றும், போகுமிடமெங்குங் குடை கவித்துப் போகலாமென்றும் இடங்கொடுக்கப்பட்டது.

மன்னார் முதற் கணக்கப்பிள்ளையாகிய டொன் மனுவல் இராசகாரிய மானா முதலியார் உத்தியோகம் இளைப்பாற, அவர் மருகனாகிய மானிப்பாய் வெள். வேலாயுதன் சுவான் இராமநாதன் அவ்வுத்தியோகத்திற்கு, கி.பி. 1761 ல் ஆகஸ்து மீ 10 ந் திகதியில், டொன் சுவான் இராசகாரிய இரத்தினசிங்க முதலியார் என்னும் பெயருடன் நியமனமானபொழுது, சாதி வரிசைகளுடன், அரசவூழியமில்லாது 6 அடிமைகள் கொடுக்கப்பட்டன.

**வரி அறவிடுதல் :**
வரி அறவிடுந் தொழில் இறைசுவர்களுக்கும் அதிகார உத்தியோகருக்குமுடையது. அவர்கள் சனங்களுக்கு மிகவும் கொடுமை செய்ததுமன்றி ஒரு வருடத்தில் அறவிட்ட தொகையை முந்திய வருடத்து நிலுவைக்காகக் கட்டியும் வந்தார்கள். வலிகாமத்திற்கு ஒருவரே இறைசுவராகவும் அதிகாரமாகவும் இருந்தார். காரைதீவும் தண்ணித்தீவென்று அழைக்கப்பட்ட ஊராத்துறையும் அதனையடுத்த தீவுகளும் வலிகாமத்துடன் சேர்ந்திருந்தன. தென்மறாட்சி யுமப்படியே. வடமறாட்சியும், பச்சிலைப்பள்ளியும் ஒரு இறைசுவருக்குக் கீழிருந்தன. யா.ச. செ. இராசநாயகம். பக்.155

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## உயர்குல உத்தியோகம் :

யாழ்ப்பாணத்தைப் பிடித்தபின் முதல் கம்மந்தோராயிருந்த "றைக்லொவ் வான் ஹுன்ஸ்" (Ryckloff Van Goens) அரசிறை உத்தியோகங்களும் நீதிபரிபாலன உத்தியோகங்களும் சுதேசிகளுள் உயர்ந்த சாதியினருக்கே கொடுக்கப்படவேண்டுமென, 1658 ம் ஆண்டு ஒக்டோபர் மாசம் 31 ந் தேதி வரைந்து வைத்த அறிக்கையிற் கண்டபடியே, *வேளாளருக்கு அதிகமாகவும் மடப்பளியாருக்குக் குறைவாகவுமளிக்கப்பட்டு வந்தது.

* வேளாளர் என்று குறிக்கப்படுவது மாப்பாண வேளாளர்களையாகும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## அத்தியாயம் - மூன்று

# பரராஜசேகரன் மதமாற்றம்

வன்னி வரலாற்றில் முதலியார் உத்தியோகம் பார்த்தவர்களின் பெயர்களோடு யாழ்ப்பாணத்தில் அரசராக இருந்து அந்நியரின் ஆட்சியில் மதமாற்றம் செய்யப்பட்ட பரராஜசேகரனுடைய வரலாறும் பின்னிப் பிணைந்துள்ளது. இதனால் யாழ்ப்பாணத்தில் இடம்பெற்ற மதமாற்றம் பற்றிய விளக்கம் இங்கு தரப்படுகிறது.

☞ 1623ல் யாழ்ப்பாணத்தில் இடம்பெற்ற மிக முக்கியமான மதமாற்றம் அடங்காப்பற்று முதலிமார் வரலற்றில் முக்கிய இடத்தை வகிக்கிறது

☞ முதலியார் என்ற பதவிகள் கூடுதலாக அரச பரம்பரைக் காலத்திலிருந்து ஆரம்பிக்கப்பட்டுள்ளமைக்கு அந்நிய ராட்சிக்கால அறிக்கைகள் சான்று பகருகின்றன. யாழ்ப்பாணத்திலிருந்த பரராஜசேகர மன்னன் கிறிஸ்தவ சமயத்தை தழுவிய பின்னர் போர்த்துக்கேயர் அவரை "முதலி" என்றே அழைக்க வேண்டு மெனக் கட்டளையிட்டனர்.

☞ 1623 ல் பரராஜசேகர அரசன் குடும்பத்தோடு மதம் மாறியதற்கு வரலாற்றுச் சான்றுகள் உள்ளன.

☞ 1623 ல் கொழும்பில் பரராஜசேகரனின் மகன் அரசகேசரி ஞானஸ்நானம் பெற்றபோது அவருக்கு எட்டு வயது எனக் குறிப்பிடப்பட்டுள்ளது. ஆகவே அரசகேசரி 1615ம் ஆண்டு பிறந்துள்ளான். 1615ல் சுகவீனமுற்றிருந்த பரராசசேகரன் இறக்கும் போது அரசகேசரிக்கு வயது மூன்று எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது. இதனால் பரராசசேகரன் 1618 ம் ஆண்டு காலமாகினான் எனக் கொள்ளலாம்.

☞ யாழ்ப்பாணத்தில் 1623 ல் பரராசசேகரன் அரச குடும்பத்தைச் சேர்ந்தவர்கள் கிறிஸ்தவர்களாக மாறியதும் அவர்கள் அனைவருக்கும் பறங்கியரால் (போர்த்துக்கேயரால்) முதலிப் பட்டங்கள் வழங்கப்பட்டன. அத்தோடு பரராசசேகரனும்,

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பரராசசேகர மாப்பாண முதலி என பதியப்பட்டு, வரலாறுகளிலும் அவ்வாறு அழைக்கப்பட்டுள்ளார்.

- ஏற்கனவே அரசவூழியம் செய்த முதலிகள் போல அரசபரம்பரையினரும் ஊழியம் செய்பவர்களாக கருதப்பட்டு "முதலி" என்ற பதவி வழங்கப்பட்டது.
- 1658ல் டச்சுக்காரர் யாழ்ப்பாண ஆட்சியைக் கைப்பற்றிய பின்னர் அரச பரம்பரையைச் சேர்ந்தவாகள் தமது பெயர்களுக்கு முன்னால் "அரச" பட்டங்களைக் கொண்டு அழைக்கக் கூடாது என கட்டளை பிறப்பித்தனர். அவர்களெல்லோரையும் முதலி என அழைக்க வேண்டும் என்று டச்சக்காரர் சட்டம் கொண்டு வந்திருந்தனர்.
- முல்லைத்தீவு, பனங்காமம், மன்னார் மற்றும் தென்னமரவடிப் பிரதேசத்தில் ஆட்சி செலுத்திய அனைவரும் மாப்பாணர் மற்றும் மடப்பளி பரம்பரையைச் சேர்ந்த முதலிமார்களாகும்..
- தென்னமரவடியில் பிரான்சிஸ்கோ சேதுகாவல மாப்பாண முதலி என்பவர் அதிகாரத்திலிருந்ததாக அறிக்கைகளில் பதியப்பட்டுள்ளது. பரராஜசேகரன் குடும்பத்தோடு டொன் தியோகுவின் குடும்பத்தைச் சேர்ந்த ஒருவர் மதம் மாறிய போது பிரான்சிஸ்கோ எனப் பெயர் பெற்றமையும் குறிப்பிடத்தக்கது.
- போர்த்துக்கேயர், ஒல்லாந்தர், ஆங்கிலேயர் காலத்தில் வன்னியன், முதலியார், உடையார் மற்றும் விதானையார் என்ற பதவிகள் வழங்கப்பட்டுள்ளன. வருமான ஏஜண்டர், றெசிடன்ற், அதிகாரம் போன்ற மேலதிகாரிப் பதவிகளை கூடுதலாக வெளி நாட்டவர்களே வகித்து வந்தனர்.
- இறைசுவதோர் என்பது போர்த்துக்கேயச் சொல்லின் வழியாக வந்தது. வரி சேகரிக்கும் "பண்டாரப்பிள்ளை" என்னும் சேவையாளரைக் குறிக்கும். பண்டாரம் என்பது வரி சேகரிப்பவர்களுக்கு வைக்கப்பட்ட உத்தியோகப் பெயராகும். பச்சிலைப்பள்ளியில் இறைசுவதோர் இலங்கை நாராயண முதலியார் இருந்ததாக 1722 ல் எழுதப்பட்ட கயிலை வன்னியனார் மட தர்மசாதனப் பட்டயத்திலே குறிப்பிடப்பட்டுள்ளது. இறைசுவதோர் என்ற போர்த்துக்கேயச் சொல்லின் தமிழ்ப் பதம் பண்டாரமாகும். முப்பது பேரைக் கொண்ட குழுவிற்கு தலைமை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தாங்குபவர் "பண்டாரம்" என்று அழைக்கப்பட்டதாகவும் வரலாறுகள் கூறுகின்றன.

☞ நுவரகலாவெவ வன்னியர்களுடைய சரித்திரத்திலே அடங்காப்பற்று வன்னி அதிகாரிகள் அனைவரும் பண்டாரம் அல்லது "வன்னிப் பண்டார" என்றே குறிப்பிடப்படுகின்றனர். "பண்டாக்காரயா" என்ற சிங்களச் சொல் திறைசேரி அதிகாரியைக் குறிப்பதாகும்.. இதனால் அடங்காப்பற்றில் இருந்த அதிகாரிகள் (வன்னியனார்) அனைவரும் திறை சேகரிப்பதற்காக நியமிக்கப்பட்டவர்கள் என்பது தெளிவாகின்றது.

☞ 1899 ம் ஆண்டு ஆர்.இ.ஐவர்ஸ் தொகுத்த வட மத்திய மாகாண கை நூலிலே (Manual of the North Central Province) மூன்று வன்னிகளைக் குறிப்பிடுகின்றார். ஒன்று யாழ்ப்பாண வன்னி அடுத்தது புத்தள வன்னி, மற்றும் நுவரகலாவெவ வன்னி எனப் பிரிக்கப்பட்டிருந்ததாகத் தெரிவிக்கின்றார். யாழ்ப்பாண வன்னியர்கள் தாம் மகா சேன மன்னனால் வரவழைக்கப்பட்ட ஏழு பண்டாரங்களின் பரம்பரையினர் எனக் குறிப்பிட்டுள்ளனர். இந்தப் பண்டாரங்கள் அதிகமாக கிழக்கு மாகாணத்தின் பல இடங்களில் குடியேற்றப்பட்டதாகத் தெரிவிக்கப்படுகிறது.

☞ அநேகமாக வன்னியனாக பதவி வகித்த முதலிமார்களின் பெயர்களுக்கு பின்னால் அவர்கள் வகித்த வன்னியனார் பதவிகளின் பெயர்களும் சேர்க்கப்பட்டுள்ளன. பனங்காமத்தில் வன்னியனாராக இருந்த டொன் பிலிப் - நல்ல- மாப்பாண - முதலியார் யாழ்ப்பாணம் வண்ணார்பண்ணையில் வாழ்ந்தவர். இவருடைய மகள்மார்களில் ஒருவரான குழந்தை நாச்சன் பரம்பரையில் வந்தவர் பண்டாரவன்னியன். இவருடைய இயற் பெயர் என்ன என்பதற்கு இதுவரை ஆதாரங்கள் எதுவும் கிடைக்கவில்லை. ஆனால் ஆசிரியர் முல்லைமணி அவர்கள் குலசேகரம் வைரமுத்து பண்டாரவன்னியன் எனக் குறிப்பிட்டுள்ளார். முகமாலையில் இருந்த வைரமுத்து வன்னியனார், நல்ல மாப்பாண முதலியார், நல்லநாச்சன் ஆகியோரின் மகளான கதிரநாச்சியாரைத் திருமணம் செய்திருந்தார்.

☞ 1808 ம் ஆண்டு 16 முதலிமாருக்கு "வன்னியன்" என்ற பதவியுயர்வு வழங்கப்பட்டுள்ளது. பெயர் குறிப்பிடப்பட்டுள்ளபடி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இவர்களுள் நான்குபேர் மாப்பாண குலத்தைச் சேர்ந்த முதலிமார்கள் ஆகும். இவர்களுள் ஒருவர் குலசேகர நல்லமாப்பாண முதலியார். நல்ல மாப்பாணர் பரம்பரையைச் சேர்ந்த பலர் அடங்காப்பற்றுப் பிரதேசத்திலிருந்துள்ளார்கள். வேறு சிலர் நேரடியாகத் தமது சொந்தப் பெயர்களுடன் முதலியாராக நியமிக்கப்பட்டுள்ளார்கள். அவர்களுடைய குலப்பெயர்கள் குறிப்பிடப்படவில்லை.

☞ பண்டாரவன்னியன் வாழ்ந்த 1767 களில் டொன் தியோகு புவி நல்ல மாப்பாணன் (இவன் அழகேசன் புவி நல்ல மாப்பாணன் எனவும் அழைக்கப்பட்டான்.) முகமாலைக்குப் பொறுப்பாக இருந்தார் என்று டச்சு அறிக்கைகள் தெரிவிக்கின்றன. கிழக்குக் கரையில் முகமாலையில் இருந்து தென்னமரவடிவரையும். மேற்குக் கரையில் பூநகரியில் இருந்து கொண்டச்சி வரையும் டொன் தியோகு புவி நல்ல மாப்பாணனின் அதிகாரம் பரந்திருந்தது.

☞ 1767ல் டச்சு தேசாதிபதியாக இருந்த இமாம் வில்லியம் போல்க் என்பவர் கொழும்பிலிருந்து கரையோரமாக வடக்கு நோக்கி தனது உலாவை ஆரம்பித்திருந்தார். கல்பிட்டி ஊடாக அரிப்பு பல்லவராயன் கட்டு மற்றும் பூநகரி வழியாக யாழ்ப்பாணம் சென்றடைந்தார். பின்னர் அங்கிருந்து முகமாலை ஊடாக முல்லைத்தீவு மற்றும் தென்னமரவடி போய்ச் சேர்ந்ததாக அவரது நாட்குறிப்புகள் தெரிவிக்கின்றன.

☞ 1767ம் ஆண்டு மார்ச் 29 ந் திகதி யானையிறவை வந்தடைந்த தேசாதிபதியை டொன் தியோகு புவி நல்ல மாப்பாணர் வரவேற்று உபசரித்துள்ளார். மார்ச் 30 ந் திகதி வெள்ளிவாய்க்கால் என்ற இடத்திலிருந்த ஓய்வு விடுதி ஒன்றில் ஓய்வெடுத்த பின்னர் அவர் தமது பயணத்தை தொடர்ந்ததாக குறிப்பிடப்பட்டுள்ளது. இந்த ஓய்வு விடுதி டொன் தியோகு புவி நல்ல மாப்பாணரின் மருமகனுக்கு உரியதாகும். (அல்லது நல்ல மாப்பாணரின் சகோதரரின் மகனாகவும் இருக்கலாம்) ஆங்கிலத்தில் இந்த உறவை Nephew என்று பொதுவாக குறிப்பது வழக்கம். டச்சு தேசாதிபதியின் நாட்குறிப்பின்படி குறிப்பிட்டுச் சொல்லக்கூடிய அளவிற்கு நல்ல வசதிகளுடன் கூடிய ஓய்வு விடுதியை கட்டிவைத்துள்ள ஒருவர் வெள்ளிவாய்க்கால் (வெள்ளாம் முள்ளிவாய்க்கால்) பிரதேசத்தில் இருந்துள்ளார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## யாழ்ப்பாணத்தில் நிர்வாகம் :

அடங்காப்பற்று (வன்னி) நிர்வாக ஆய்வினைத் தொடர்வதற்கு முன்னால் யாழ்ப்பாணப் பிரதேசத்தில் இருந்த நிர்வாக முறைகளையும் அவற்றிற்கான வரலாற்று விபரங்களையும் உற்று நோக்க வேண்டியுள்ளது.

| | |
|---|---|
| அரசர்கள் ஆட்சி முறை | : நீண்ட வரலாறுகள் எழுதப்பட்டுள்ளன. |
| வன்னியனார் பதவி வகித்தோர் | : மாப்பாண - மடப்பளி வெள்ளாளர் |
| மணியகாரர் பதவியிலிருந்தோர் | : மாப்பாணர் - மடப்பளி வெள்ளாளர் |
| முதலிமார் | : மாப்பாணர் - மடப்பளி வெள்ளாளர் |
| உடையார் | : மாப்பாணர் - மடப்பளி வெள்ளாளர் |

## யாழ்ப்பாண ஆட்சி முறை :

☞ யாழ்ப்பாணத்தில் இருந்த அரச பரம்பரையினரின் ஆட்சிபற்றி பலவாறாக நீண்ட முறையில் ஆய்வுகள் செய்யப்பட்டுள்ளன. அரச பரம்பரையின் இறுதிக் காலத்தில் அந்நியர் ஆட்சியின்போது அரச பரம்பரைப் பெயரைப் பயன்படுத்த 1628ல் போர்த்துக்கேயரும் அதே போன்று 1658 லும் டச்சுகாரர் அனுமதிக்கவில்லை. போர்த்துக்கேயர் ஆட்சிக்காலம் தொடக்கம் யாழ்ப்பாணத்தின் சில பகுதிகளில் "வன்னியனார்" என்ற பதவிகளும் வழங்கப்பட்டு நிர்வாகங்கள் நடத்தப்பட்டுள்ளன. வெள்ளாள மாப்பாணர்களுள் சிலர் அரச பரம்பரையைச் சேர்ந்தவர்கள் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது. வேறு பல விதமான பிரிவுகளும் இருந்துள்ளன. டச்சுக்காரரின் ஆட்சியின்போது அரசர்கள் என்று அழைப்பது மறுக்கப்பட்டு "ராயன்" "முதலி" என்ற பட்டங்கள் வழங்கப்பட்டுள்ளன.

☞ ஆங்கிலேயருடைய ஆட்சிக்காலத்தில் இந்தியாவிலிருந்து வந்த "சொம்பா பொக்கி முதலியார் முதலில் நிர்வாகத்தை நடத்தினார். பின்னர் அவர் திருப்பி அனுப்பப்பட்டார். அதிகாரம் கூடிய பதவிகளை ஆங்கிலேயர்களே சிறிது காலம் வகித்து வந்தனர். உள்நாட்டு வாசிகளிடம் இருந்து வரிகளை இலகுவாக அறவிடும் வகையில் உள்நாட்டவர்களுக்கும் முதலியார்களென

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நியமனங்கள் வழங்கப்பட்டன. அக்காலத்தில் கூடுதலாக யாழ்ப்பாண வெள்ளாள மாப்பாண பரம்பரையைச் சேர்ந்தவர்களே முதலியார்களாக நியமிக்கப்பட்டனர். பின்னர் தேவை கருதி வேறு குலத்தைச் சேர்ந்தவர்களுக்கும் முதலிப் பட்டமும் பதவியும் வழங்கப்பட்டுள்ளன.

## இராசா பட்டம் நீக்கல் :

பறங்கிகள், இனிமேல் இராச குடும்பத்தார் தம் பெயரோடு இராசாவென்னும் பட்டப்பெயரைச் சேர்த்து வழங்கலாகாதெனத் தடுத்து முதலி யெனுஞ் தஞ்சாதிப் பட்டப்பெயரை யொட்டியே வழங்கல் வேண்டுமெனச் சட்டஞ் செய்தார்கள். அவர்கள் பரராசசிங்கனுக்குக் கொடுத்த முதன்மந்திரி பதத்தை அவன் இறந்த பின்னர் பிறருக்குக் கொடாது நிறுத்தி நான்கு மாதாக்கர்களை நியமித்தார்கள்.

## மாதாக்கர்கள்

| | | |
|---|---|---|
| கீழ்நாடு | : | இராசரத்தின முதலி மகனாகிய சோழசிங்க சேனாதிராச முதலியை கீழ்நாட்டுக்கு மாதாக்க னாக்கினார்கள். |
| மேல்நாடு | : | மேல்நாட்டுக்கு விசய தெய்வேந்திர முதலியை மாதாக்கினாக்கினார்கள். |
| தென்பகுதி | : | அழகாண்மைவல்ல முதலி மகன் இராசாவல்லப முதலியை தென்பகுதிக்கு மாதாக்கனாக்கினார்கள். |
| வடபகுதி | : | வடபகுதிக்குத் திடவீரசிங்கமுதலி மகன் குமாரசூரிய முதலியை மாதானாக்கினார்கள். |

இந்நான்கு மாதாக்கர்களும் பறங்கிகளுடைய எண்ணப்படி குடிகளை வசமாக்கி அதிகாரஞ்செய்து வந்தார்கள். இக்காலத்திலே சோழ நாட்டிலே யுண்டாகிய இராச கலகத்துக்கஞ்சி அங்கிருந்து அநேக வேளாண் குடும்பங்கள் புறப்பட்டு வந்து வட்டுக்கோட்டையிலும் காரைதீவிலும் குடியேறின. (கார்காத்த வேளாளர் என்னுஞ் சொல்லைக் காரைக்கால் வேளாளரென்றும் காரைக்காட்டு வேளாளரென்றும் அறியாது வழங்குவர்.)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மீன் குத்தகை :

பறங்கிகள் இவ்வாறரசு செய்து வருகையில் மீன் குத்தகை விற்று அரசிறையைப் பெருக்க வெண்ணினார்கள். அக்குத்தகையை வாங்குவதற்கு வேளாளர் பின்னிட்டார்கள். அது கண்டு கரையார் அநேகர் திரண்டு தம்முள்ளே ஒருவனை அதிகாரியாக்கி அவன் பெயரில் வாங்கிப் பணத்தைச் சேர்த்துக் கொடுத்தார்கள். ஆயினும் பறங்கிகள் எண்ணப்படி பெருந்தொகைக்கு விற்கவில்லை.

## தொன் பிலிப்பு குருகுலநாயக முதலி :

வேளாளர் அக்குத்தகையை ஏற்றிருந்தால் அவருள்ளே தனவந்தர் அநேகர் இருந்தமையால் எனக்கெனக்கென்று விலையேறியிருக்கும் எனவெண்ணிப் பறங்கிகள் வேளாண் மந்திரியிடத்துச் சிறிது வெறுப்புடையராகிக் கரையாருள்ளும் ஒருவனை மந்திரியாக்கி அவனுக்குத் தொன் பிலிப்பு குருகுலநாயக முதலி என்னும் பட்டமுங் கொடுத்தார்கள். கடற்றுறை அதிகாரம் முழுதும் அவனுக்கே கொடுத்தார்கள். அவன் தனக்குக் கீழுள்ள அதிகாரங்கள் கணக்கு வேலைகளை எல்லாம் தன்குலத்தவர்க்கே கொடுத்தான். அதுகாறுங் வேளாளரது அதிகாரத்தால் கீழ்ப்பட்டுக் கிடந்த அக்குலம் இவன் காரணமாகச் சிறப்படையத் தொடங்கிற்று. அவர்களும் அச்சிறப்பினால் தமது கிளையினின்று பிரிந்து தாமொரு கிளையாகிப் பறங்கிகளுடைய போக்குகளுக்கெல்லாமிணங்க நடந்து வந்தனர்.

## மனப்புலிசிங்க முதலி :

இவர் தமிழரசர் வமிசத்திலுதித்து மல்லாகப்பகுதிக்கு அதிபதியாகவிருந்தவரும், அதிகாரம், செல்வம், செல்வாக்கு, அடிமை குடியாட்சிகளாற் கீர்த்தியுற்று விளங்கியவருமான தனபாலசிங்க முதலி வழியிலுதித்தவர். இவர் மகன் வன்னிப்பற்றில் விவாகம் செய்து நாட்டாண்மை செலுத்திய மனப்புலி முதலியார்

தனபாலசிங்க முதலியார்

மனப்புலிசிங்க முதலியார்

மனப்புலி முதலியர் - வன்னிப்பற்றில் விவாகம் செய்தவர். யா.வை.கௌமுதி பக்.253

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**உலக காவல முதலியார்:-**

இவர் கனதனமும் செல்வாக்கும் அதிகாரமும் படைத்த காரைக்கால் கார்காத்த வேளாண் பிரபு வழித்தோன்றல் வண்ணார்பண்ணை அம்பலவாணபிள்ளை. இவர் மகன் நொத்தாரிசு சீனிவாசகபிள்ளை. இவர் விவாகஞ் செய்தது உடுவில் வன்னியனார் வம்சத்திலுதித்த அருளம்பல முதலியார் வழியிலுள்ள பார்பதிப்பிள்ளையை. இவர் புத்திரன் தம்பையாபிள்ளை. இவரே பறங்கிக்காரரால் இடிபட்டிருந்த புராதன ஆலயமாகும் சட்டநாத சுவாமி, அல்லது நல்லைநாத சுவாமி கோவிலைப் புதுக்கி கட்டுவித்து கும்பாபிஷேகம் செய்வித்தவர். யா.வை.கௌமுதி பக்.258

**ஐயம்பெருமாள், வேலாயுதர் :-**

இவர் வல்வெட்டித்துறையிலுள்ளவர். இவருக்கு நான்கு புத்திரர்கள். நாலாவது புத்திரன் பெயர் திருமேனியார். இவரின் புத்திரர் வேங்கடாசலம். எனும் நாமத்தால் அறியப்பட்ட பெரியதம்பியார். இவரே தந்தையின் எண்ணப்படி மேற்படியூரில் தற்காலம் விளங்கும் சிவாலயத்தை 1867 ம் ஆண்டு ஆரம்பித்து 1883ம் ஆண்டு வைகாசி மாதம் பிரதிட்டாபிஷேகம் செய்வித்தவர். இவர் அவ்வூரிற் கீலமடைந்திருந்த வைகுந்தபிள்ளையார், புட்டணிப்பிள்ளையார் என்னுமிரு ஆலயங்களின் திருப்பணிகளை நிறைவேற்றியவர். முல்லைத்தீவில் கடற்கரையோரத்தில் விளங்கும் பெரிய மடாலயமும் ஒவ்வொருவரினதும் வருணாச்சிரமங்களுக்கேற்ப அமைக்கப்பட்டிருக்கும் வீடுகள் கூடங்களும் இவர் பொறுப்பில் ஆக்கப்பட்டனவே. யா.வை.கௌமுதி பக்.12.-11)

**சுப்பிரமணிய முதலியார் :**

இவரூர் நாவற்குளி.. இவர் மண்ணாடுகொண்ட முதலிவழியிலுதித்தவர். இவர் புத்திரர் சந்திரசேகரர். இவர் பிள்ளைகள் (1) கண்ணத்தைப்பிள்ளை 2. கருணாகரர். கண்ணாத்தைப்பிள்ளையை 2ம் தாரமாக விவாகம் செய்தது மறவன்புலவு சிற்றம்பலவுடையார் சிதம்பரநாதர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மேற்படி சிற்றம்பல உடையார் மகன் சிதம்பரநாதர் கமத்தொழில் பயில்வதிலன்றி கல்வி கற்பதிலேயே கண்ணாயிருந்து காலங்கழித்தார். **அக்காலத்திருந்த பொன்னார் வன்னிச்சி ஏசன்றர் மூலமாக இவருக்கு நெல்லுக் குத்தகை வேலையை வாங்கிக் கொடுத்தனர்.**

இவர் அவ்வேலையிலிருந்து தமது வேலையாட்களுடன் ஓர் நாள் முகமாலைக்குச் சென்றார். அப்போது அங்குள்ள கோவிற் புராணப்படிப்புக்குச் சென்று தானும்படித்து மற்றையோரால் மகிழப்பட்டனர். பின் படிப்பை நடத்திய வன்னிமையும் பெண்சாதியும் இவரை விருந்துக்கழைத்துச் சென்றனர். வன்னிமையின் மனைவி வீடு சேர்ந்தவுடன் வீட்டுக்குத் தூரமானதால் மகள் சேதுப்பிள்ளையை இவர்க்குச் சோறிட விட்டனர். சாப்பாடு முடிந்த பின்னர் வன்னிமையும் மற்றோரும் இவருக்குச் சோறு கொடுத்த பெண்ணை இவருக்கே மனைவியாக்கி விட்டனர். இவர்களுக்கு வேலுப்பிள்ளை, சிவகாமிப்பிள்ளையென இரு பிள்ளைகளுளர். இவர்கள் மரபினரெ நாவற்குளி முத்துத்தம்பி உடையார் ஆதியோர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**கதிரைவேற்பிள்ளை :**

இவர் உடுப்பிட்டியிலே 1829ம் வருடம் உயர்வுள்ள பூர்வீக குடும்பத்திலே பிறந்தார். இவர் ஒக்லார் பரம்பரையில் வித்துவத்திறமுடையராய் விளங்கினார். இவர் தந்தையார் குமாரசுவாமி முதலியார். இவர் தந்தையார் கதிர்காமபூப்ப முதலியார். இவர் தந்தையார் சந்திரசேகர மாப்பாண முதலியார். மேற்படி குமாரசுவாமி முதலியாரின் அன்னையார் வள்ளியம்மை. . . . . வள்ளியம்மையின் தந்தை கைப்பித்தான் சந்திரசேகர முதலியார். *ஒல்லாந்தர் அரசர் காலத்திலே வன்னிப்பகுதியிலே நிகழ்ந்த பெருங்கலகங்களையெல்லாம் அடக்கி கீர்த்தி பெற்றவர். இவர் 96 வயசிருந்து சீவித்து சிவகதியடைந்தார். மேற்படி குமாரசுவாமி முதலியார் 83 வயசிருந்து சீவித்து 1874ம் வருடம் சிவபதமடைந்தார்.

சந்திரசேகர மாப்பாண முதலியார்
கைப்பித்தான் சந்திரசேகர முதலியார் - 96 வயசில் காலமானவர்.

**கதிர்காமபூப்ப முதலியார் - வள்ளியம்மை -**

**குமாரசுவாமி முதலியார் (!873-83) 1791 ல் பிறந்தவர்**

யா.வை. கௌமுதி - பக்கம் 210

**தீவுப்பெயர்கள் :**

தீவுகளெல்லாம் ஒல்லாந்த தேசப் பெயர்களினால் வழங்கப்பட்டன. காரைதீவிற்கு "அம்ஸ்றெர்டாம்" (Amsterdam) என்றும், ஊராத்துறைக்கு "கைற்ஸ்" (Kayts) என்றும், தண்ணித்தீவுக்கு "லயிடின்" (Leyden) என்றும், நயினாதீவிற்கு "ஹார்ளெம் (Haarlem) என்றும் அனலைதீவிற்கு "றொற்றர்டாம்" (Rotterdam) என்றும், நெடுந்தீவிற்கு "டெல்ற்" (Delt) என்றும், இரணைதீவிற்கு "ஹூண்" (Hoon) என்றும், "என்கயிசன" (Enkuysen) என்றும் பெயர்கள் கொடுக்கப்பட்டன. யா.ச. செ.இராசநாயகம். பக்.173

*வன்னியில் ஒல்லாந்தருடைய ஆட்சிக் காலமாகிய 1783 ல் இடம்பெற்ற கலகங்களை அடக்கியவர், பனங்காமத்தில் இடம்பெற்ற ஆட்சி மாற்றத்தில் கப்ரன் தோமஸ் நாகெல் முக்கிய பங்கெடுத்தவர். இக்காலத்தில் பண்டாரவன்னியனுடைய நிர்வாகம் முல்லைத்தீவுப் பிரதேசத்தில் இடம்பெற்றது. (டச்சுக்காரர் சாயவேரை இலவசமாக பிடுங்கித் தரவேண்டுமென கட்டளை பிறப்பித்தபோது கலகங்கள் ஆரம்பமாகின)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**அத்தியாயம் - நாலு**

# அடங்காப்பற்று (வன்னி) ஆட்சிமுறை :

அடங்காப்பற்றில் (வன்னி) ஆட்சி அதிகாரம் செலுத்தியவர்களை பின்வருமாறு பிரிக்கலாம்.

| | | |
|---|---|---|
| அரசர்கள் (மன்னர்கள்) | : | ஆய்வு செய்யப்படவேண்டும் |
| வன்னியர்கள் | : | இந்தியாவிலிருந்து வந்தவர்கள் |
| வன்னியனார் | : | மாப்பாண - மடப்பளி வெள்ளாளர்கள் |
| முதலிமார் + உடையார்கள் | : | மாப்பாண - மடப்பளி வெள்ளாளர்கள். |

☞ மன்னர்களுடைய ஆட்சிக் காலத்தில் அடங்காப்பற்றில் குளங்கள் பல கட்டப்பட்டு செழிப்புள்ள பிரதேசமாக இருந்தது. அரசன் ஒருவனுடைய உத்தரவின்படி இந்தியாவிலிருந்து வந்த வன்னியர்கள் அடங்காப்பற்றுக்குத் தலைமை அதிகாரிகளாக நியமிக்கப்பட்டனர். சிறிது காலத்தின் பின்னர் வன்னியர்கள் தம்மை சிற்றரசர்களாக நினைத்து அதிகாரம் செலுத்தி வந்தனர். வன்னியர்களுடைய ஆட்சிக்காலத்தில் அரசர்கள் அடிக்கடி இந்தப் பிரதேசத்தின் மீது படையெடுத்து வன்னியர்களின் கர்வத்தையும் அடங்காத்தன்மையையும் அடக்கி அவர்கள் வெறுமனே அதிகாரிகள் மட்டும்தான் என்பதை நினைவூட்டிச் சென்றுள்ளனர்.

☞ கி.பி. 1447 வரை சப்புமல் குமாரயா (செண்பகப் பெருமாள்) யாழ்ப்பாணத்தை ஆட்சி செய்தான். சுமார் 17 ஆண்டுகள் ஆட்சி செய்த காரணத்தால் 1430 தொடக்கம் இவர் ஆட்சி செய்ததாகக் கொள்ளலாம். சப்புமல் குமாரயாவின் தமிழ்ப் பெயர் செண்பகப் பெருமாள் என்பதாகும். இவர் யாழ்ப்பாணத்தின்மீது படையெடுத்துச் சென்றபோது அடங்காப்பற்றை ஆட்சி செய்தவர்கள் அவருக்கு உதவி செய்ததாக தெரிவிக்கப்படுகிறது.

☞ செண்பகப் பெருமாள் மாப்பாணர் பரம்பரையைச் சேர்ந்தவர் என்பதற்கான ஆதாரங்கள் கிடைத்துள்ளன. அவருடைய பரம்பரையினர் தற்போது சப்ரகமுவ மாகாணத்தில் வாழ்ந்து வருகின்றனர். அவர்களுடைய பரம்பரைப் பெயர் விஜய சிறீ

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வீரபராக்கிரம மகப்பா ஜயலத் என அழைக்கப்படுகின்றது. இங்கே மகப்பா என்று குறிப்பிடப்படுவது மாப்பாணர் என்பதே என தெரிவிக்கப்பட்டுள்ளது. யாழ்ப்பாணத்தை ஆட்சி செய்த பின்னர் கோட்டே இராச்சியத்தில் ஆறாம் புவனேகபாகு என்ற பெயரில் இவர் ஆட்சி செய்துள்ளார்.

☞ ஆரம்பத்தில் இந்தியாவில் இருந்து வந்தவர்களான இவர்கள் கண்டி மற்றும் வட பகுதி ஆகிய பிரதேசங்களில் குடியேறினர். கோட்டே இராஜதானியைக் கைப்பற்றியதும் பத்தேகம மற்றும் இரத்தினபுரிப் பிரதேசங்களுக்கு இடம் பெயர்ந்ததாக தெரிவிக்கப்படுகிறது.

☞ மாப்பாணர் பரம்பரையைச் சேர்ந்த செண்பகப் பெருமாள் 1430 ல் யாழ்ப்பாணத்தின் மீது படையெடுத்துச் சென்றபோது அடங்காப்பற்றில் இருந்தவர்கள் அவருக்கு உதவி செய்த காரணத்தால் அடங்காப்பற்றுப் பிரதேசத்தை மாப்பாணர் பரம்பரையைச் சேர்ந்தவர்கள் நிர்வாகம் செய்துள்ளமைக்கு இது ஆதாரமாகின்றது. (ஆய்வுக்குரியது)

☞ 1618 ல் காலமான பரராசசிங்கனின் மைத்துனனின் பெயர் லியுக்கு குமாரன் (Leucu) என வரலாறுகளில் குறிக்கப்பட்டுள்ளது. இவரே டொன் தியோகு எனப் பெயர் சூட்டப்பட்டுள்ளார் என்று 1918 ல் வெளியிடப்பட்ட யாழ்ப்பாண வைபவ கௌமுதியிலும் தொடர்ந்து வந்த யாழ்ப்பாண வரலாற்று நூல்களிலும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

☞ 1623ம் ஆண்டில் டொன் தியோகு எனப் பட்டம் பெற்றவர் (லியுக்கு குமாரன்) பரராசசேகர அரசனின் சகோதரியைத் திருமணம் செய்திருந்தாலும் அவரும் மாப்பாணர் பரம்பரையைச் சேர்ந்தவராக இருந்திருக்க வேண்டும். ஆனால் அவருடைய பெயர் லியுக்கு குமாரன் என்ற கத்தோலிக்க பெயரால் பதியப்பட்டிருக்கலாம். அவருடைய பெயர் டொன் தியோகு நல்ல மாப்பாணன் என்பதாகும்.

---

லியுக்கு குமாரன என்ற பெயர் மருவி டொன் தியோகு எனவும் அழைக்கப்பட்டிருக்கலாம். பரராசசேகரனின் குடும்பத்தினர் முழுமையாக மதம் மாறிய போது இவருடைய பெயர் டொன் தியோகு எனப் பெயர் மாற்றப்பட்டு பதியப்பட்டிருப்பதாக தமிழ் லரவாற்று நூல்களில் தெரிவிக்கப்பட்டிருக்கிறது. (ஆய்வுக்குரியது)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

- 1645 ல் பிறந்து பனங்காமத்தை ஆட்சி செய்த டொன் பிலிப் நல்ல மாப்பாண முதலியாருடைய மூதாதையர்களாகவும் இருக்கலாம்.
- 1645 ல் பிறந்த டொன் பிலிப் நல்ல மாப்பாணர் முதலியார் கரைச்சியை ஆட்சி செய்த பின்னர் 1679-1697 வரை பனங்காமத்தில் வன்னியனராக நியமிக்கப்பட்டு ஆட்சி செய்துள்ளார்.
- டொன் தியோகு நல்ல மாப்பாணன் முதலியார் (1623)
- டொன் பிலிப் நல்ல மாப்பாணர் முதலியார் (1679-1697 வரை)
- ''நல்ல மாப்பாண முதலி வன்னியனும் மகனும் கொடுக்கத் தவறிய யானைத்திறையை நெடுங்காலஞ் செலுத்தாதிருந்தமையால், அவர்களை நேரில் அப்புறப்படுத்தத் துணியாது பூநகரி, பல்லவராயன்கட்டு, இலுப்பைக்கடவை எனுமிடங்களில் யானை பிடிப்பதற்கு ஓர் ஒல்லாந்தனை அதிகாரியாக நியமித்தனர் யா.வை.கௌ. ப. 126, 127.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

றொபேர்ட் நொக்ஸ் அவர்களுடைய வரைபடத்தில் வன்னிப் பிரிவுகளுக்கு வழங்கப்பட்டிருந்த பெயர்கள் ஒப்பீட்டளவில் நாகரீகமானது. பின்வரும் பெயர்கள் வன்னியிலுள்ள பற்றுக்கள் எனக் குறிப்பிடப்பட்டுள்ளன. கொயிலொட் (சிலோன்) வன்னிஸ் நாடு' என்று குறிப்பிடப்பட்டுள்ள பிரிவுகள் பின்வருமாறு :

1. கரிக்கட்டுமூலை
2. முள்ளியவளைப்பற்று.
3. மேல்பற்று
4. கருநாவல்பற்று.

மற்றும் ஒரு பற்று மன்னார் அல்லது வன்னியிலிருந்த ஊரிக்கரைப்பற்று என்பதாகும். அதனை அடையாளப்படுத்த முடியவில்லை. ஜே.பி.எல்.பக்.28.

☞ 1660ம் ஆண்டளவில் இது வரையப்பட்டதாகக் கொள்ளலாம்.

☞ ஊரிக்கரைப்பற்று (உறுகறை) என்னும் பற்று மாதோட்டத்திற்கு அருகிலிருந்தது. இந்தப்பற்று பனங்காமத்துடன் சேர்க்கப்பட்டதாக யாழ்ப்பாண வைபவ கௌமுதி தெரிவிக்கின்றது. (பக்க.74)


---

* The names of the divisions must be comparatively modern. In Knox's map, the following names pattus in the Vanni, which is styled 'Coylat Wannees Contrey" are given thus;

Carecutmoele,
Moleawillpattu,
Melpatte
Carremwapatte (Karunavalpatte)

There is also another patte, either in Mannar or the Vanni, called Ouregarepatte, which I cannot identify. (JPL.p.28)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




றொபேர்ட் நொக்சின்
வரலாற்று நூலில் அடங்காப்பற்று
வரைபடம் (1660)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

- அடங்காப்பற்றுப் (வன்னி) பிரதேசத்தில் குறிப்பிட்ட ஒரு காலத்தின் பின்னர் கூடுதலாக மாப்பாணர் பரம்பரையினரே வன்னியனாராகவும் முதலியாராகவும் கடமையாற்றியுள்ளனர். இந்தியாவிலிருந்து வந்த வன்னியர்கள் பனங்காமத்தை ஆட்சி செய்தனர். அவர்கள் இந்தியா திரும்ப நினைத்தபோது முல்லைத்தீவில் இருந்த இளஞ்சிங்க மாப்பாணனை பனங்காமத்திற்கு அழைத்து தமது ஆட்சிப்பொறுப்பை கையளித்ததாகவும் வரலாறுகள் தெரிவிக்கின்றன. இதனால் அடங்காப்பற்றில் எப்போது மாப்பாணர்களுடைய ஆட்சி ஆரம்பித்தது என்பதை அறுதியாக கூறமுடியாமல் இருக்கின்றது (ஆய்வுக்குரியது)
- வன்னியன் என்ற பதவி கூடுதலாக மட்டக்களப்பு, திருகோணமலை, அடங்காப்பற்று, புத்தளம் மற்றும் யாழ்ப்பாணம் போன்ற பிரதேசங்களிலே அதிகாரம் கூடிய பதவியாக இருந்துள்ளது. இதனால் அந்நியர் ஆட்சிக் காலத்தில் தொடர்ந்தும் "வன்னியனார்" என்ற நியமனத்தை வழங்கி வந்தனர்.
- 1799ம் ஆண்டு திசை விளங்கு மாப்பாணர் முதலியாராக கடமையாற்றியுள்ளார்.
- 1808 ம் ஆண்டு நியமன அறிக்கையின்படி ஆங்கிலேயர் ஆட்சியில் குலசேகர நல்லமாப்பாண முதலியார் வன்னியனாராக கருநாவல்பற்று வடக்கிற்கும், இராசநாயக மாப்பாண முதலியார் வன்னியனாராக கருநாவல் பற்று தெற்கிற்கும், குல நல்ல மாப்பாண முதலியார் புதுக்குடியிருப்பிற்கு வன்னியனாராகவும், பதவி உயர்வு பெற்றுள்ளனர்.
- கருநாவல்பற்று மற்றும் புதுக்குடியிருப்புப் பிரதேசங்கள் தொடர்ந்தும் 1808 ற்குப் பின்னரும் குல நல்ல மாப்பாண முதலி வன்னியனார் பரம்பரையினரிடம் இருந்துள்ளன.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**அத்தியாயம் - ஐந்து**

## ஆங்கிலேயர் காலம் : 1795 தொடக்கம் ......

☞ ஆங்கிலேயருடைய ஆட்சிக்காலம் பற்றியும் எவ்வாறு முதலிப்பட்டங்கள் வழங்கப்பட்டன என்பதுபற்றியும் யாழ்ப்பாண வைபவ கௌமுதியிலும் யாழ்ப்பாண வரலாற்று நூல்களிலும் தெரிவிக்கப்படும் விபரங்கள் முதலில் இங்கு தரப்படுகின்றன.

1795ல் இங்கிலாந்துக்கும் ஒல்லாந்துக்கும் இடையில் மீண்டும் போர் தொடங்கிற்று. அப்போது சென்னைத் தேசாதிபதியாகவிருந்த நரேந்திரப் பட்டமுடைய ஹோபாட்டு என்பவர் ஸ்துவார்ட் சேனாதிபதியுடன் ஓர் சேனையை இலங்கைக்கு அனுப்பினார். அச் சேனாதிபதி உடனே திரிகோணமலையையும், பின்னர் யாழ்ப்பாணத்தையும் கைப்பற்றினான்.

179Є ல் நீர்கொழும்பும், கொழும்பும் கைப்பற்றப்பட்டன. 138 வருடமாகக் கட்டியாண்டு வந்த கரைதுறை நாடுகள் எல்லாம் ஒருங்கே ஆங்கிலேயருடைய தண்குடை நிழற் கீழ்ப்பட்டன.

ஆங்கிலேயர் ஒல்லாந்தர் ஆளுகை செய்த கரைநாடுகளைப் பிடித்து 1796ம் ஆண்டு மாசி மாதம் தம் அரசியலை நடத்த ஆரம்பித்தனர். கண்டி நாடும் அதையடுத்து மத்திய பகுதிகளும் இராசாதிராசன் என்னுங் கண்டி அரசனின் ஆளுகைக்கு கீழ் இருந்தன.

பின்னர் ஆங்கிலேய அரசினர் ஒல்லாந்த அரசினருடன் சமாதானமான பொழுது அவர்கள் இலங்கையை ஒல்லாந்த அரசினருக்குக் கொடுக்க மனமற்றவராய் இலங்கைத் தீவுக்காய் யாவா தீவை ஒல்லாந்தருக்குக் கொடுத்து, இலங்கையை ஆங்கிலேய அரசுக்கு சொந்தமாக்கினர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சென்னைத் தேசாதிபதியால் அந்திரேசு எனுந் துரைமகன் இலங்கை அரசிறை அதிகாரியாக நியமிக்கப்பட்டான். 1797ல் அவனுக்கு எதிராக சிங்களப் பிரபுக்களும் தமிழ் அதிகாரிகளும் குடிகளுஞ் செயற்பட்டனர். இதனால் இலங்கை அரசை பிரித்தானிய இராச்சிய வேந்தராகிய மூன்றாம் யோட்சு மன்னர் இங்கிலாந்துக்கு ஓர் உப ராசாங்க நாடாக்கி, பிரதிறிக் நோர்து பிரபுவை இலங்கைத் தேசாதிபதியாக அனுப்பினார். இவர் கி.பி. 1798 ம் ஆண்டு ஐப்பசி மாதம் இலங்கைக்கு வந்து கொழும்பில் வசித்து அரசியலைக் கையேற்று நடத்தினார்.

நோர்து பிரபு இலங்கைத் தேசாதிபதியாய் வந்த 1798ம் வருடத்திலே கண்டியரசனாகிய இராசாதிராசசிங்கம் மரணமடைந்தனன்.

இதனால் கண்டி அரசுரிமையில் நிறைய குழப்பங்கள் தொடங்கின.

1803ம் ஆண்டு ஆடி மாதம் 8 ந் திகதி (1803 July 8th) முத்துச்சாமி கண்டிக்கு முடிசூட்டப்பட்டான். முதன் மந்திரி பிலிமத்தலாவ நோர்து தேசாதிபதியுடன் வேறு ஓர் உடன்படிக்கை செய்தான். இந்த உடன்படிக்கையின்படி "பிலிமத்தலாவையை கண்டியரசனாக்கவும், முத்துச்சாமியை வன்னி நாட்டின் அதிபனாக நியமனஞ் செய்வதாகவும்" தெரிவித்திருந்தார்கள். ஆனால் வேறு நிபந்தனைகளை ஆங்கிலேயர் விதித்த காரணத்தால் ஒப்பந்தம் நடைமுறைக் கிடப்படவில்லை.

மீண்டும் குழப்பங்கள் தொடங்கின.

1803ம் ஆண்டு ஆனி மாசம் (1803 June ) ஸ்ரீ விக்கிரம ராசசிங்கன் கண்டி மீது படையெடுத்து முத்துச்சாமியரசனைக் கொலை செய்தது மட்டுமல்லாமல் ஆங்கிலேயரையும் அங்கிருந்து அகற்றினான் இக்காலத்தில் மலாய் வீரர்கள் பலரும் சிங்களப் படையுடன் சேர்ந்திருந்தனர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அக்காலத்தில் வன்னி நாட்டை ஆண்ட பண்டாரவன்னியனும் ஓர் சேனையைச் சேர்த்து ஆங்கிலேயருக்கு மாறாய் வீறு கொண்டு எழுந்து ஆங்கிலேயரைத் தாக்கி, அவர் போர் வீரருள் சிலரைக் கொன்று எஞ்சியவர்களைப் பின்னிடச் செய்தான். சிறிது காலத்தின் பின் ஆங்கிலப் படைவீரர் சென்று வன்னியனையும் அவன் சேனையையுங் கொன்று அவன் பொருட்களையெல்லாம் கவர்ந்து கொண்டனர். யா.வை.கௌமுதி பக்..262-265)

## வரலாற்றுத் தெளிவு

* மேற்கூறிய விபரம் அடங்காப்பற்று (வன்னி)யில் 1803ம் ஆண்டு ஒகஸ்ட் மாதம் 25 ந் திகதி ( 1803 August 25th ) பண்டாரவன்னியன் முல்லைத்தீவுக் கோட்டையை கைப்பற்றியதைக் குறிக்கிறது.

* கண்டி இராஜதானியில் இடம் பெற்ற அரசியல் மாற்றங்கள் அனைத்தும் யாழ்ப்பாணத்தையும், அடங்காப்பற்றையும் (வன்னி) பாதித்திருக்கின்றன. இக்காலத்தில் நுவரகலாவெவ பிரதேசம் கண்டி இராஜதானியின் கீழ் இருந்ததினால் அடங்காப்பற்றிலும் (வன்னி) இது சாத்தியமாயிற்று.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"பிரிட்டிஸார் இலங்கையை வெற்றி கொண்டபோது மட்றாஸிலிருந்த நிர்வாகத்தினரே இலங்கை நிர்வாகத்தையும் கொண்டு நடத்தினர். ஆரம்பத்தில் கரையோரங்களைச் சேர்ந்தவர்களே அமில்தாரர்களாக நியமிக்கப்பட்டிருந்தனர். இவர்கள் 'சொப்பா பொக்கி முதலியார்' என அழைக்கப்பட்டனர். இவர்கள் பொதுமக்களை எதிர்த்து வெறுப்பூட்டி சிறிய குற்றங்களுக்காக அதிக தண்டனையை விதித்தனர். பலவிதமான சித்திரவதைகளைச் செய்து வருமானத்தை வசூலித்தனர்.

ஒரு முறை அறவிடப்படவேண்டிய தொகையை விட 15 தொடக்கம் 20 வீதம் வரையில் அதிக குத்தகையை வசூலித்ததாக குற்றம் சுமத்தப்பட்டிருந்தது. ஒரு தருணத்தில் ஏழு முதலியார்களுடன் சேர்ந்து 40 யானைகளின் விலையை விட ஏமாற்றி ஒரு தொகைப் பணத்தை கூடுதலாகப் பெற்றதாக குற்றஞ் சுமத்தப்பட்டார். ஜே.பி.எல்.ப.27

---

Doubtless, on account of the fact that the British conquests in Ceylon were at the first government direct from Madras, the earlier Aumildars were "coast"men, and the of these appointed, who was called "Choopa Pocky Mudaliyar" in said to have oppressed and vexed the people by inflicting on them heavy fines for trifling offences, and to have etorted payment by "different kinds of tortures"

It also alleged that by unjust measuring of the tithers he made the people pay 15 to 20 per cent, more than was justly due, and that at one time "he defrauded them of their share of the price of 40 elephants caught by him in conjunctions with seven Mudaliyars" JPL.p.27

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தொடர்ந்து பதவி வகித்த ஏனைய அமில்தாஸ் மீது இதுபோன்ற முறைப்பாடுகள் இருக்கவில்லை. 1801ம் ஆண்டு ஏப்ரல் தொடக்கம் 1805 ஓகஸ்ட் வரை 'ஏபிரகாம் இவாட் பாத்தலோமியஸ்' என்ற பேர்கர் அமில்தாராக கடமையாற்றினார். இவருடைய மாதச் சம்பளம் 36 ½ றிக்ஸ் டொலர்களாகும். அவரின் பின்னர் 'லான்டர்ஸ்' என்ற பேர்கர் இனத்தைச் சேர்ந்தவர் நியமிக்கப்பட்டார். இவர் பிற்காலத்தில் விடத்தல்தீவிலிருந்த சுங்க இலாகா கிளார்க் ஒருவருடன் குடிவெறியில் ஈடுபட்டார் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது. அடுத்த இரண்டு வருட காலத்தினுள் அமில்தார் என்ற பதவி ரத்து செய்யப்பட்டது.

With regard to the other Aumildars, his successors, no complaints of this kind were made. The Aumildar from April, 1801, to August, 1805, was a Burgher named Abraham Evert Bartholomeusz, and his salary was 36 ½ rix dollars a month. He was succeeded by another Burgher named Laandersz, who afterwards got into trouble on account of "intoxication" while a clerk under the Customs Master of Vidattaltivu. Some time within the next two years the office of the Aumildar was abolished. JPL.p.27.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

1806 ம் ஆண்டு வில்லியம் மொன்ற் கோமெரி என்பவர் 'வருமான வர்த்தக ஏஜென்ராக யாழ்ப்பாண பட்டணத்திற்கு நியமிக்கப்பட்டார். அவருக்கு சேர் தோமஸ் மெயிற்லண்ட் அவர்களினால் ஒரு பந்தியில் மட்டுமான அறிவுரை வழங்கப்பட்டிருந்தது.

"எனது எண்ணம் உமது மாவட்டத்திலிருந்து வன்னியைப் பிரித்து தனி மாவட்டமாக ஆக்க வேண்டும் என்பதாகும். இந்த அறிவுரையில் தரப்பட்டிருக்கும் ஏற்பாடானது முடிவானதல்ல. ஆனால் மாற்று அறிவுரை வழங்கும் வரைக்கும் அதன் நிர்வாகம் உமக்குக் கீழிருக்கும்" ஜே.பி.எல். பக் - 27.

---

In 1806 William Montgomery was appointed "Agent of Revenue and Commerce, Jaffnapatam," and one paragraph of the instructions issued to him by Sir Thomas Maitland is follows;

"It is my intention that the Vanni should be separated from your district, but as the arrangements I propose making on this head are not finally concluded, you will till such time as you receive further instructions consider this Province as under you direction" JPL.p.27.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**வரலாற்றுத் தெளிவு**

☞ ஆங்கிலேயருடைய ஆட்சி ஆரம்பித்தபோது 1800 ம் ஆண்டளவில் பண்டாரம் மீண்டும் வன்னியனாக நுவரகலாவெவவின் அருகிலுள்ள பனங்காம பகுதிக்கு நியமிக்கப்பட்டார்.

☞ கண்டி இராஜதானிக்கு ஆதரவாகச் செயற்பட்ட நுவரகலாவெவ திசாவையான குமாரசிங்க வன்னியனுடன் சேர்ந்து முல்லைத்தீவுக் கோட்டையை 1803ம் ஆண்டு ஓகஸ்ட் மாதம் 25ந் திகதி கைப்பற்றினான்.

☞ முல்லைத்தீவைக் கைப்பற்றி குமாரசிங்க வன்னியனிடம் (திசாவை) ஒப்படைத்து விட்டு வந்ததாகவும், முதலிமார் அவருடன் ஒத்துழைக்க வேண்டும் அல்லது முதலிமார்களால் ஆட்சியை சீராகக் கொண்டு செல்ல முடியாதெனவும் பண்டாரவன்னியன் கூறியதாக ஆங்கிலேயர்களுக்கு எழுதிய கடிதங்களில் முதலிமார் குறிப்பிட்டுள்ளனர்..

☞ சிங்களப் பிரதேசத்தில் 'திசாவை' என்று அழைக்கப்பட்டவர்கள் வன்னிப் பிரதேசத்தில் 'பண்டாரம்' அல்லது 'வன்னியனார்' என்று அழைக்கப்பட்டுள்ளனர். அதே போல் வடபகுதியில் வன்னியனார் என்று அழைக்கப்பட்டவர்கள் சிங்களப் பிரதேசங்களில் "பண்டாரம்" என்று அழைக்கப்பட்டுள்ளனர்.

☞ பண்டாரவன்னியனைப்பற்றிக் குறிப்பிடும்போது "வன்னிப் பண்டார" என்று குறிக்கப்பட்டுள்ளதையும் நாம் கவனத்தில் கொள்ள வேண்டும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

☞ இதற்கு பின்வரும் உதாரணத்தையும் நாம் குறிப்பிடலாம்.

"1817ம் ஆண்டு கண்டி இராஜதானியில் பாதிக்கப்பட்ட தலைமை ஒருவர் பிரிட்டிஸ் ஆட்சியாளருக்கு எதிராகக் கிளம்பினார். நுவரகலாவிய வன்னித் தலைவனும் அவர்களோடு சேர்ந்து கொண்டான். அரிப்பிலிருக்கும் தமிழ் தேவாலயத்திற்கு நுவரவேவ வன்னி உன்னிச்சே செய்தி அனுப்பி அங்கிருந்த பண்டாரத்தை வரவழைத்தான். அரச குடும்பத்தினர் அமரும் ஆசனத்தை பண்டாரத்திற்கு வழங்கி கௌரவித்தான். ஒருமுறை பாதிக்கப்பட்ட "மடுகல" என்ற தலைவன் வந்தபோது புதிய அரசன் உடனடியாக ஆசனத்தைவிட்டு எழும்பி தனது ஆசனத்தில் அமரும்படி கேட்டு கௌரவித்தான். இதனால் "பண்டாரம்" அரச பதவிக்கு பொருத்தமற்றவனென நீக்கப்பட்டான்." வடமத்திய மாகாணக் கைநூல் பக்-50

---

When in 1817 the Kandyan disaffected chiefs rose in revolt against the British, the Vanniya chiefs of Nuwarakalawiya also joined the revolt. The Nuwarawewa Vanni Unneche is said to have sent messengers to Tamil dewale at Arippu and to have brought a 'pandaram' whom he presented as one of the members of the royal family. Once when Madugala one of the disaffected chiefs arrived, the new king hastil descended from the elevated seat-an in voluntary show of respect. The 'pandaram' was accordingly dismissed as unworthy of a kingship. Manual of the N.C.P.Page 50

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

- பண்டாரவன்னியன் தாக்குதலால் ஆத்திரம் கொண்ட ஆங்கிலேயர் வன்னி மீது மும்முனைத் தாக்குதலை ஆரம்பித்தனர். இதில் குமாரசிங்க வன்னியனும் பண்டாரவன்னியனும் தோற்கடிக்கப்பட்டு பின்வாங்கினர்.
- இதனால் பண்டாரவன்னியன் இராஜத் துரோகியாக ஆங்கிலேயரால் பிரகடனப்படுத்தப்பட்டதோடு வன்னியனார் பதவியில் இருந்தும் நீக்கப்பட்டான். கற்சிலைமடுவில் இடம்பெற்ற சுற்றிவளைப்பிலிருந்து தப்பியோடி பனங்காமம் சென்றனன். பனங்காமத்திலிருந்து ஆங்கிலேயருக்கு எதிராகப் பல தாக்குதல்களை நடத்தி வந்த பண்டாரவன்னியனார் 1811 ம் ஆண்டு உயிரிழந்தார்.
- வன்னியனார் என்ற பதவி இல்லாதொழிக்கப்பட்டதையே ஆங்கில வரலாறுகள் 1811ம் ஆண்டு பண்டாரவன்னியனார் மறைந்ததும் "வன்னியனார்களுடைய ஆட்சியிலிருந்து வன்னியை மீட்டெடுத்துள்ளோம்" எனத் தெரிவித்துள்ளனர்.
- 1817ம் ஆண்டு அதிருப்தியுற்ற கண்டித் தலைமைகள் ஆங்கிலேயருக்கெதிராக புரட்சிகளை ஆரம்பித்தனர். நுவரகலாவிய வன்னித் தலைமையும் இந்தப் புரட்சியில் கலந்து கொண்டார். நுவரகலாவிய வன்னி உன்னச்சே அரிப்பிலிருக்கும் ஆலயம் ஒன்றிற்கு தன்னுடைய தூதுவர்கள் மூலம் செய்தியொன்றை அனுப்பி, அங்கிருந்து பண்டாரத்தை வரவழைத்து தனது அரச குடும்பத்தைச் சேர்ந்த அங்கத்தவர் ஒருவரை அவர்களுடன் அனுப்பி வைத்தான்
- (இதே போன்ற விபரம் பண்டாரவன்னியன் வரலாற்றிலே 1810 ஆண்டு செப்ரம்பர் ஒக்ரோபர் மாதங்களில் செட்டிகுளம் கோணப்ப முதலியார் மற்றும் மேல்பற்று கிழக்கு கதிர்காம நாயக முதலியார் ஆகியோர் பண்டாரவன்னியன் நடமாட்டம்பற்றி கவர்னருக்கு எழுதிய கடிதங்களிலே குறிப்பிடப்பட்டுள்ளது. (பண்டாரவன்னியன் வரலாறு-அருணா செல்லத்துரை ப-116)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அத்தியாயம் - ஆறு

# வன்னி (அடங்காப்பற்று) நிர்வாகம்

அடங்காப்பற்று நிர்வாகம் பற்றி Manual of the Vanni District என்ற நூலில் ஜே.பி.லூயிஸ் அவர்கள் பின்வருமாறு குறிப்பிடுகின்றார்.

'பிரிட்டிஸ் ஆட்சியின் ஆரம்பத்தில் திருகோணமலையிலிருந்த கலெக்டரின் உதவியாளராக இருந்த அமில்தார்ஸ் ஒருவர் வன்னிப் பிரிவு நிர்வாகக் கடமைகளைச் செய்து வந்தார். மட்ராஸ் வாசியொருவர் இந்தப் பதவியை வகித்திருந்தார். அந்தப் பதவிக்கு 'வன்னி. மட்டக்களப்பு. திருகோணமலை ஆகிய பிரிவுகளுக்கான கலெக்ரர்' எனப் பெயரிடப்பட்டிருந்தது.

Amalder = என்ற பதம் அலுவலகத்தை நிர்வகிப்பவர் என்பதைக் குறிப்பதாகும். (அரபு மொழியில் அமல் என்றால் தொழில். பேர்சியன் மொழியில் ஏஜென்சி என்பதைக் குறிப்பதாகும்.) இந்திய தேசிய அரசாங்கத்தில் வருமானம் சேகரிப்பவர் அல்லது வருமானமீட்டுபவர் ஆகும் இவரே அந்த மாவட்டத்தில் இருக்கும் பிரதம அதிகாரமுடையவராக இருப்பார். அமில்தார் என்பது தமிழில் இருந்து வந்ததாகும் (ஆய்வுக்குரியது)

யாழ்ப்பாண மாவட்டமும் இது போன்றே செயற்பட்டது. ஜே.பி.எல்.பக்.27

---

'Administration' Manual of the Vanni Districts" JPL.

In the early years British rule the Vanni was administarted by means of 'Aumildars" and for some time it was under the charge of an offficer subordinate to the Collector at Trincomalee, a Madras civilian, whom title was 'collector of Trincomalee, Batticaloa and the Wanny.

"Properly amalder, one holding office (Arabic, amal work, with Persian term of an agency) . Under the Native Government (of India), a collector of revenue also a farmer of the revenue, invested with chief authority in his District. Tamil, from amiltar. It also for time formed part of the "District of Jaffna patam" JPL.page .27

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சேர் தோமஸ் மெயிற்லன்ட் அவர்களின் அறிவுறுத்தல்படி 1807 ம் ஆண்டு மே மாதம் தனிப்பிரிவு பிரிக்கப்பட்டது.

புதிய மாகாணம் உருவாகியது. அதற்கு 'வன்னி மாகாணம்' எனவும் அதன் தலைமையிடமாக முல்லைத்தீவும் ஆக்கப்பட்டது. தற்போது இருக்கும் (1895) வவுனியா முல்லைத்தீவு இரண்டு நிர்வாக மாவட்ட நிலப்பரப்பை உள்ளடக்கியதாக இருந்தது. இந்த மாகாணத்திற்கு பொறுப்பானவராக கௌரவ ஜோர்ஜ் ரேணர் என்பவர் நியமிக்கப்பட்டார். ( இவர் ஆங்கிலப் பிரபு வின்ரேற்றன் அவர்களின் மகனும். அதே பெயரிலிருந்த கிழக்கிந்திய நிபுணர் ஒருவரின் தந்தையுமாவார்.)
ஜே.பி.எல்.பக்.28

---

In May 1807, this scheme was carried into effect, and new Province was formed called "the province of Wanny", with its headquarters at Mullaitivu. Its limits were almost exactly conterminous with those of the present districts of Vavuniya and Mullaitivu thrown in to one. The officer appointed to the charge of the province was the Hon.George Turnour. (*He was a son of the Earl of Winterton, and father of the Oriental schloar of the same name.)JPL.p.28

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## வன்னியின் முதலாவது ஆங்கிலேய கலெக்ரர் ஜோர்ஜ் ரேணர் (1807)

1795ம் ஆண்டு வரை டச்சுக்காரருடைய ஆட்சியிலிருந்த வன்னிப்பிரதேசத்தின் நிர்வாகத்தை டச்சுக்காரரான தோமஸ் நாகெல் நடத்தி வந்தார். பின்னர் யாழ்ப்பாணம் மற்றும் கொழும்பு ஆகிய இடங்களில் இருந்த கலெக்ரரின் நிர்வாகத்தின் கீழ் இருந்தது. 1807ம் ஆண்டு வன்னிப் பிரதேசத்திற்கென கலெக்ரராக திரு. ஜோர்ஜ் ரேணர் நியமிக்கப்பட்டார். ரேணர் பதவியேற்றதும் அவருடைய கடமைகள் பற்றி பின்வருமாறு தெரிவிக்கப்பட்டுள்ளது.

“திரு. நாகெல் அவர்களுடைய நிர்வாகத்தில் வன்னியின் பிரதான தலையாரிகளையும், சுதேசிகளையும் சந்தித்து மாகாணத்தின் நிலையைத் தெரிந்து கொள்வதற்காக புதிய கலெக்ரர் முதன் முறையாக நாட்டு வலம் வந்தார். அதன் பலனாக அந்தப் பிரதேசத்தின் சனத்தொகை, கால்நடைகளின் தொகை, விவசாயம் செய்யப்படும் நிலப்பரப்பு, உணவு விநியோகம் போன்றவற்றின் மதிப்பீடுகளை அவருடைய குறிப்பிலிருந்து பெறக் கூடியதாகவுள்ளது.

1811ம் ஆண்டு மார்ச் மாதம் கலெக்ரருடைய உடல் நிலை காரணமாக அவர் நிரந்தரமாக முல்லைத்தீவில் தங்கியிருக்க அனுமதிக்கப்படவில்லை. ஆனால் மாவட்டத்திற்கு காலத்திற்கு காலம் விஜயம் செய்ய கட்டளையிடப்பட்டது. ஜே.பி.எல். பக் - 32.

---

The first act of the new Collector was to make a circuit through his Province, examining the principal headmen and inhabitants on the then state of Province as compared with its condition under the Vanni chiefs and under the administration of Mr.Nagel. The results of his inquiries are some statistics to be found in his diary as to the population, number of cattle, tanks, extent of cultivation, and food supply.

In March, 1811, in consequence of the state of his health, the Collector was allowed "not to reside constatntly at Mullaitivu," but he was ordered to "visit his district from time to time."JPL.p.32

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பின்னர் யாழ்ப்பாணத்திற்கு அனுப்பப்பட்டார். அவருடைய இரண்டாவது கிளார்க் மைக்கல் வன்டர்குட் நிர்வாகத்திற்கென அனுப்பப்பட்டார். அத்தோடு அறிக்கைகளை கிரமமாக விடத்தல் தீவில் இருந்த தலைமைக் கிளார்க்கிற்கும், வதிவிட நீதவானுக்கும் அனுப்ப வேண்டும் என அறிவுறுத்தப்பட்டிருந்தார்.

1812 ஏப்ரலில் தனது மாவட்டத்திற்கு திரும்பியிருந்தார். அந்த வருடத்தில் மீண்டும் சில மாதங்கள் விடுமுறையிலிருந்தார். முன்னரைப்போன்று யாழ்ப்பாணத்திலிருந்து கொண்டு தனது கட்டளைகளைப் பிறப்பித்தார். பின்னர் பிரிட்டிஸ் அரசாங்கத்திற்காக புகையிலை உற்பத்தித் திட்டத்தில் முழுநேரமாக ஈடுபட்டார். ஜே.பி.எல்.பக். 32

1813ம் ஆண்டு ஜனவரி மாதம் 9ந் திகதி ஓய்வு பெற கொழும்பில் முத்திரை பகிர்ந்தளிப்பவராக இருந்த எசக்கீல் டேவிட் பொயிட் என்பவர் நியமிக்கப்பட்டார். கலெக்ரர் ஜோர்ஜ் ரேணர் அதே வருடம் ஏப்ரல் மாதம் யாழ்ப்பாணத்தில் காலமானார். ஜே.பி.எல்.பக். 33

---

He thereupon removed to Jaffna (but apparently not until August) and, sending soon after for the second clerk, Michael Vandergucht, carried on his administration by means of directions sent periodically to the head clerk and to the Sitting Magistrate of Vidattaltivu.

He returned to his district in April, 1812, but was again absent for some months in the year, directing its affairs as before from Jaffna, and apparently also engaged on behalf of Government with some "tobacco plan" which "fully occupied his time". JPL.p.32

He was relieved on January 9, 1813, by Esekiel David Boyd, "Distributor of stamps" at Colombo, and died at Jaffna in April of the same year. JPL.p.33

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

திரு ரேணர் நேரடியாக நிர்வாகம் செய்யாதபோது அது வெற்றியானதாக இருக்கவில்லை. முக்கியமான பிரதேசங்களில் கிடைத்த வருமானம் மிகவும் குறையத் தொடங்கியது. இதற்கான காரணம் சம்பந்தப்பட்டவர்கள் விதை தானியத்திற்கென கூடுதல் கடன்பட்ட காரணத்தினால் பலர் தர்மசங்கடமான நிலைக்குத் தள்ளப்பட்டனர். அவர் சட்டரீதியாக எந்தவித நடவடிக்கையும் எடுக்காமல் குத்தகை மூலம் கூடுதலான கொடுக்குமதித் தொகையை அறவிட்டார். இதன் மூலம் இந்த மாவட்டத்தில் விவசாயச் செய்கையை விருத்தியடையச் செய்தார்.

அவர் இந்த மாகாணத்தை பொறுப்பெடுத்தபோது இந்தப் பிரதேசத்தில் வாழ்ந்த மக்கள் கடன்சுமையினால் வறுமையினாலும் மனஅழுத்தத்தினாலும் பாதிக்கப்பட்டிருந்தார்கள். அத்தோடு அவர்கள் எந்தவித இடையூறின்றி தொடர்ந்தும் வருடா வருடம் தேவையானவற்றை பெற்று வந்தார்கள். ஜே.பி. எல். 33.
ஜோர்ஜ் ரேணர் பற்றி ஆங்கிலத்தில் மேலும் பல விபரங்கள் கீழே தரப்பட்டுள்ளன.

---

In spite of his absences, Mr.Turnour's administration was not an unsuccessful one. Before it the little revenue the district yielded was chiefly in arrears, while the body of the people was deeply in debt for advances of grain, which had not other effect than that of increasing their embarrassments. He recovered large arrears of tithes and of advances of seed paddy without recourse to legal process, from which he infers the improvement of the agricultural state of the district.

Owing to the extreme poverty and distress of the inhabitants on his taking charge of the Province, the poorer sort of them were left unmolested with regard to their debts, and they received further large advances every year. In his opinion "the most certain and availing source of further prosperity" was to be looked for in supporting the agricultural produce of the district by persistence in the liberal system of management adopted by the Government of the day.

He was alive to the necessity of irrigation; and although his well-directed efforts in this direction were effective for a short time only, he commenced and carried out the repair of some of the tanks. It was a part of his policy that the circumstances of the Vanni required a more lenient treatment of the renters and others upon whom Government had claims than was expedient in districts possessing a larger and richer population, and for this reason in his dealings with defaulters he always avoided as much as possible the intervention of a court of justice. JPL.p.33

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பிரிட்டிஸார் இலங்கையை சுவாதீனப்படுத்திய சிறிது காலத்தின் பின்னர் வன்னியின் நிலைமையைத் தெரிந்து கொள்வதற்காக திரு ரேணர் நாட்டு வலம் வந்தார். அப்போது அவர் 'வன்னி வருமான ஏஜென்ராக' நியமிக்கப்பட்டிருந்தார். 1808 ம் ஆண்டு ஜூலை வரை இந்தப் பெயரிலேயே அழைக்கப்பட்டுள்ளார். இதன் பின்னர் இவரது பதவி 'வன்னி கலெக்ரர்'' என்றும் 'மாகாணம்' என்பதற்குப் பதிலாக 'மாவட்டம்' என்றும் மாற்றியமைக்கப்பட்டுள்ளதை அவதானிக்கக் கூடியதாய் இருக்கின்றது. ஜே.பி.எல்.பக். 28

Mr.Turnour had been employed shortly after the British occupations in making a circuit of the Vanni and inquiring into its conditions. He was now styled "Agent of Revenue of the Wanny," and bore this title untill july, 1808, when we find its changed to that of "Collector of the Wanny" and the name "District" substituted for that of "Province" .JPL p. 28

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

'மாகாணம் - மாவட்டம்' என்ற சொற் பிரயோகங்கள் தவறுள்ளவையாக கருத்திற் கொள்ளப்படவில்லை. ஆனால் 1813 ல் கலெக்ரர் தமது குறிப்புகளில் 'மாகாணம்' எனவும் 'மாவட்டம்' எனவும் குறிப்பிட்டுள்ளார். 1808 ம் ஆண்டு ஏப்ரல் 26ந் திகதி திரு.ரேணர் எழுதிய குறிப்புகளில் மீண்டும் 'மாகாணம்' எனக் குறிப்பிட்டுள்ளார். சில நாட்களின் பின்னர் இவற்றைப் 'பிரிவுகள்' என்றும் கூறியுள்ளார்.

1806ம் ஆண்டு திரு.சுவெற்றன்ஹம் எழுதியுள்ள குறிப்புகளில் நீதிபரிபாலனத்திற்காக சட்டமுறைப்படியான பெயராக 'மாகாணம்' என்று குறிப்பிடப்பட்டுள்ளது. நீதிபரிபாலனப் பிரிவாக 'மாகாண நீதிமன்றம்' அமைக்கப்பட்டது. வருமான மற்றும் வர்த்தக ஏஜென்ரருக்கு உரிய எல்லையாக 'மாவட்டம்' என்று குறிக்கப்பட்டுள்ளது. ஜே.பி.எல்.பக். 28

*There was not much precision at first with regard to the use of these names, for I find no late as 1813 the Collector speaking of his "Province" and its "Districts" but in his diary at April 26, 1808, Mr.Turnour speaks of the latter as "Provinces" although in that of a few days later date he calls them "Divisions". From a minute on the shedule system by Mr.Swettenham it appears that in 1806 "Province " was the legal term for the territory placed under the Juriduction of a Provincial Court, while "District " was the territory placed under the control of an "Agent of Revenue and Commerce". JPL p. 28.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

புதிய மாகாணம் அல்லது மாவட்டம் 17 பிரிவுகளை உள்ளடக்கியது. அவையாவன :

| | | |
|---|---|---|
| 1. | கரிக்கட்டு மூலை வடக்கு | உள் மாவட்டங்கள் |
| 2. | கரிக்கட்டு மூலை தெற்கு | |
| 3. | புதுக்குடியிருப்பு | |
| 4. | முள்ளியவளை | |
| 5. | கருநாவல்பற்று வடக்கு | |

* மேற்காட்டப்பட்ட 5 பிரிவுகளும் உள் மாவட்டங்கள் என அழைக்கப்பட்டுள்ளன. ஜே.பி.எல்.பக். 28.

---

The New Province or District consisted of Seventeen divisiond which were follows;

| | | |
|---|---|---|
| 1. | Karikkaddumulai North | Home Districts |
| 2. | Karikkaddumulai South | |
| 3. | Puthukkudiyiruppu | |
| 4. | Mulliyavalai | |
| 5. | Karunavalpattu north | |

5 called "the Home Districts". JPL. p. 28.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

06 தொடக்கம் 17 வரைக்கும் உள்ள பிரிவுகள் (12 பிரிவுகள்) வன்னி மாவட்டங்கள் என அழைக்கப்பட்டன.

| | | |
|---|---|---|
| 6. | கருநாவல்பற்று தெற்கு | வன்னி மாவட்டங்கள் |
| 7. | துணுக்காய் | |
| 8. | மேல்பற்று வடக்கு | |
| 9. | மேல்பற்று தெற்கு | |
| 10. | மேல்பற்று கிழக்கு | |
| 11. | கிழக்குமூலை தெற்கு | |
| 12. | கிழக்குமூலை வடக்கு | |
| 13. | சின்னச்செட்டிகுளம். | |
| 14. | நடுச்செட்டிகுளம் | |
| 15. | மேற்கு மூலை | |
| 16. | பனங்காமம் | |
| 17. | உடையாவூர் | |

ஜே.பி.எல்.பக். 29

* இதில் உள்ள சில பிரிவுகள் பின்னர் உள்மாவட்டங்களோடும் யாழ்ப்பாணத்தோடும் சேர்க்கப்பட்டிருப்பதை தொடர்ந்து வரும் குறிப்புக்கள் தெரிவிக்கின்றன.

---

| | | |
|---|---|---|
| 6. | Karunavalpattu South | Wanny District |
| 7. | Tunukkay | |
| 8. | Melpattu North | |
| 9. | Melpattu South | |
| 10. | Melpattu East | |
| 11. | Kilakkumulai South | |
| 12. | Kilakkumulai North | |
| 13. | Chinnacheddikulam | |
| 14. | Naduchcheddikulam | |
| 15. | Metkumulai | |
| 16. | Panankamam | |
| 17. | Udaiyaur | |

6-17 Called "the Wanny Districts". JPL p.29.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கடைசி ஒன்பது பிரிவுகளும் தற்போது (1895) வவுனியா மாவட்டமாக அமைக்கப்பட்டுள்ளது. ஏனைய ஐந்து பிரிவுகளில் கருநாவல்பற்று வடக்குத் தவிர்ந்தவை முல்லைத்தீவு மாவட்டமாக மாறியுள்ளது. (கருநாவல்பற்று வடக்கு யாழ்ப்பாண மாவட்டத்தின் ஒரு பிரிவாக்கப்பட்டுள்ளது) ஜே.பி.எல்.பக்.29.

---

The last nine divisions now form the District of Vavuniya, and the remainder, with the exeption of Karunavalpattu North (which has disappeared as divisions, part of it having been attached to the Jaffna District), that of Mullaitivu. JPL. p. 29.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இதன்படி "வவுனியா மாவட்டம்" ஒன்பது பிரிவுகளாக இருந்தன.

01. மேல்பற்றுத் தெற்கு
02. மேல்பற்றுக் கிழக்கு
03. கிழக்குமூலை தெற்கு
04. கிழக்குமூலை வடக்கு
05. சின்னச் செட்டிகுளம்
06. நடுச்செட்டிகுளம்
07. மேற்குமூலை
08. பனங்காமம்
09. உடையாவூர்

ஜே.பி.எல்.பக். 29

---

Vavuniya District

01. Melpattu South
02. Melpattu East
03. Kilakkumulai South
04. Kilakkumulai North
05. Chinnacheddikulam
06. Naduchcheddikulam
07. Metkumulai
08. Panankamam
09. Udaiyaur

JPL. p. 29.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முல்லைத்தீவு மாவட்டம் பின்வருமாறு ஏழு பிரிவுகளாக அமைந்திருந்தது.

1. கரிக்கட்டு மூலை வடக்கு
2. கரிக்கட்டு மூலை தெற்கு
3. புதுக்குடியிருப்பு
4. முள்ளியவளை
5. கருநாவல்பற்று தெற்கு *
6. துணுக்காய் *
7. மேல்பற்று வடக்கு *

ஜே.பி.எல்.பக். 29

---

Mullaitivu District

1. Karikkaddumulai North
2. Karikkaddumulai South
3. Puthukkudiyiruppu
4. Mulliyavalai
5. Karunavalpattu South
6. Tunukkay
7. Melpattu North

JPL. p. 27

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சில பிரிவுகளின் பெயர்கள் தமிழில் எதுவித அர்த்தமும் இல்லாதவை. சில பெயர்கள் பழமை வாய்ந்த சுத்தமான அர்த்தமுள்ள தெளிவான தமிழ்ப் பெயர்களாகும். பனங்காமம், முள்ளியவளை ஆகிய பெயர்கள் சிங்கள பெயர்களை பிரதிநிதித்துவப்படுத்துபவையாகும். கமம் என்பது சமஸ்கிருதத்திலிருந்து வந்த தமிழ்ப் பெயராகும். சிங்களத்திலிருந்து ‘கம’ என்ற சொல் வந்திருக்கலாம்.

முள்ளியவளை என்ற பெயர் யாழ்ப்பாணச் சரித்திரத்திலே முள்ளியவளை நாடு என்று குறிப்பிடப்படுகின்றது. இந்த நூலிலே செட்டிகுளம் என்ற இடத்தின் வரலாறு பற்றியும் விளக்கப்படுகின்றது. ஜே.பி.எல்.பக்.29

---

Some of these names, for which no meaning can be assigned from Tamil, are no doubt older than the other purely Tamil names of which the meaning is clear. Such are Panankamam and Mulliyavalai, which possibly represent ancient Sinhalese names. Kamam, for instance, in the Tamil form of the Sanskrit word, which in Sinhalese has became gama.

Mulliyavalai is referred to the Yalpanach-charithiram as Mulliyavalai nadu. This book also explains the origin of the name Cheddikulam (vide ante, p.7). JPL p. 29.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஏனைய இடங்களின் பெயர்கள் மிகவும் அர்த்தம் நிறைந்ததாகவும் தற்காலத்துக்குரியவையாகவும் இருக்கின்றன.

| | | |
|---|---|---|
| மேல்பற்று | - | மேற்குப் பற்று |
| கிழக்குமூலை | - | கிழக்கு மூலை |
| மேற்குமூலை | - | மேற்கு மூலை |
| உடையாவூர் | - | உடையார்கள் கிராமம் |

மேற்குறிப்பிட்டவை வவுனியாவைச் சேர்ந்த பிரிவுகளாகும்.

| | | |
|---|---|---|
| கரிக்கட்டு மூலை | - | யானைகள் கட்டப்படும் மூலை |
| கருநாவல் பற்று | - | கறுத்த நாவல் மர பற்று |
| புதுக்குடியிருப்பு | - | புதிய கிராமம் |
| துணுக்காய் | - | காயின் ஒரு துண்டு |

மேற்குறிப்பிட்டவை முல்லைத்தீவைச் சேர்ந்த பிரிவுகளாகும்.
ஜே.பி.எல்.பக். 29

---


The meaning of the remaining names is apparent, a sign that they are much more modern.

| | | |
|---|---|---|
| Melpattu | = | "upper" or "west pattu" |
| Kilakkumulai | = | "eastern corner" |
| Metkumulai | = | "western corner" |
| Udaiyaur | = | "the udaiyar's village |
| Karikkaddumulai | = | "the corner where elephants were tied" |
| Karunavalpattu | = | "black naval tree pattu" |
| Putukkudiyiruppu | = | "the new village" |
| Tunukkay | = | "a slice of, portion" |

JPL. p. 29

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# THE VANNI




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பதினேழு பிரிவுகள் ஒவ்வொன்றிற்கும் 'பிரதான தலைமையாளர்' ஒருவர் இருந்தார். அவர் 'மாகாண முதலியார்' என அழைக்கப்பட்டார்.

ஏனையவற்றைப் போல இவரும் 'மாவட்ட முதலியார்' என அழைக்கப்பட்டார். இதுபோன்று முதலியார் பட்டம் வழங்கப்பட்டதற்கான காரணம், ஒரு பிரிவிலுள்ள பிரதான சிவில் தலைமையாளர் 'பொர்மாண்டோ' அல்லது 'இராணுவ முதலியார்' என்று வழங்கப்படும் முறை அப்போது வழக்கத்திலிருக்கவில்லை. ஆனால் அந்த நடைமுறை பின்பற்றப்பட்டு வந்தது. 1833 ம் ஆண்டு 'பொர்மண்டோ முதலியாருக்கான அலுவலக' நடைமுறை இல்லாதொழிக்கப்பட்டது. இதற்கான சிபார்சை மன்னாரிலிருந்த கலெக்டர் (ஹுஸ்கிஸன்) வழங்கியிருந்தார். மன்னார் மாவட்டத்தோடு இணைக்கப்பட்டிருந்த 12 மாகாண மற்றும் பொர்மாண்டோ முதலியார் பிரிவுகள் குறைக்கப்பட்டு இரண்டு மாவட்ட முதலியார் பிரிவுகளாக்கப்பட்டன.

ஜே.பி.எல். பக்-29.

---

For each of these Seventeen Divisions there was a "principal headman"* called the 'Provincial Mudaliyar'*

Similarly he is now called the "District Mudaliyar". But the reason for using a prefix to the title Mudaliyar, viz; to distinguish the chief civil headman of a division from the Pormando, or Military Mudaliyar no longer exists. The practice however survives. The office of Pormando Mudaliyar was abolished in 1833 on the recommendation of the collector of Mannar (Huskission) and the twelve Provincial and Pormando Mudaliyars of the divisions of the Vanni attached to the Mannar District reduced to two District Mudaliyars. J.P.L. p. 29.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மாவட்ட முதலியாருக்கு அடுத்தபடியாக 'பொர்மாண்டோ'* அல்லது 'பொர்மாண்டோ முதலியார்' இயங்கினார். ஆனால் அவருடைய கடமைகள் என்னவாக இருந்தன என்பது பற்றி அவரது குறிப்புகளில் இருந்து தெரிந்த கொள்ள முடியவில்லை.

இவர் இராணுவத்திற்கு பொறுப்பாகவும், மாகாணம் சிவில் முதலியாருக்கும் லாஸ்கொரின்ஸ் என்றழைக்கப்பட்ட வீரர்களுக்கும் பொறுப்பாக இருந்துள்ளார்.

திரு. சுவெற்றன்ஹாம் அவர்களின் கருத்துப்படி இரண்டு போர்த்துக்கேய சொற்களின் இணைப்பாகும்.

போர்.- க்கு. மாண்டோ அல்லது மான்டர் - கட்டளை என்பதாகும்.

'பிரமாண்ட' என்ற தமிழ்ச் சொல்லில் இருந்தும் 'பொர்மான்டோ' என்ற பெயர் உருவாகியிருக்கலாம். ஜே.பி.எல்.பக். 30.

---

Next to him came a functionary called the 'Pormando'* or Pormando Mudaliyar," but what his exact functions were I have not been able to make out from the records.

* Probably he was the Military, as the provincial was the civil Mudaliyar, and was incharge of the Lascoreens.

"Pormando "Mr.Swettenham thinks, is from two Portuguese words, Por = for, mando or mander = command.

The Tamil form of the word is piramanda (பிரமாண்ட).

JPL. p.30.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மேற்காட்டிய பதவிகளோடு உடையார்கள், விதானைமார், அடப்பன்ஸ், இவர்களை விட மேலும் பல தலைமைப் பதவிப் பெயர்களோடு இருந்தார்கள். ஆனால் அந்தப் பதவிப் பெயர்கள் மறைந்து போயின.

உதாரணமாக 'பட்டங்கட்டி' என்ற பெயரைக் கொண்ட பல மீனவ இனங்களின் தலைமைகள், மற்றும் மயோறால்ஸ் என்றழைக்கப்பட்டோர்

'மரைக்கார்' என்றழைக்கப்பட்ட முஸ்லிம்களுக்கான தலைமைகள்

மொனிலியன்ஸ் என்றழைக்கப்பட்ட கொல்லர்களுக்கான தலைமைகள் போன்றவற்றைக் குறிப்பிடலாம். ஜே.பி.எல்.பக். 30.

---

There were also, as at present, Udaiyars, Vidanes, and Adappans * and besides them there were other headmen whose offices and titles have disappeared.
Such were 'Pattengattya' for the different fisher castes.*
and Mayoraals*
and Marecayers or Head Moormen,*
and Moenillians or Head Blacksmiths.*
JPL. p. 30

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முன்னர் பல அடப்பனார்கள் இருந்துள்ளார்கள். ஆனால் தற்போது ஒருவர் மட்டுமே இருக்கிறார்.(1895)

பட்டங்கட்டி என்ற தமிழ்ச் சொல் சிங்களத்தில் கூறப்படும் பட்டபெந்தி அதாவது பட்டபெந்தி ஆராச்சி' என்பதை ஒத்ததாகும். இலக்கண ரீதியாக பார்க்கும்பொழுது பட்டத்தை கட்டித் தொங்கவிட்டுள்ள ஒருவரைக் குறிக்கும். இரண்டு பதவிகளும் மீனவத் தலைமைகளையே குறிக்கும். இவர்களுடைய கடமைகள் மீன்களை மீன்பிடியாளர்களுக்கும் குத்தகைக்காரருக்கும் பிரித்துக் கொடுப்பதாகும். இதற்கென பட்டங்கட்டிக்கு பிரிக்கப்படும் மீன்களில் இரண்டு வீதம் வழங்கப்படும்.

1810 ஆண்டில் கரிக்கட்டு மூலை வடக்கில் ஒரு மயோறால் இருந்ததாக குறிக்கப்பட்டுள்ளது.

பதினேழு (17) பிரிவுகளிலும் கரையார், முக்குவர், கடையார் போன்ற பிரிவினருக்கு பிரதான தலையாரியாக 'மாகாண முதலியார்கள்' நியமிக்கப்பட்டிருந்தார்கள்' ஜே.பி.எல்.பக்.30.

---

These appear to have been several Adappans.There is only one now. (1895)

Tamil பட்டங்கட்டி This word, paddankaddi, is the exact eqivalent of the Sinhalese pattebendi, as in "Patabendi Aracci" and literally means a person having a title (paddam= பட்டம்) 'tied' to him. Both designations of fisher headmen, whose duty was to divide the fish between the renter and the fishermen.The Paddankaddi was paid two per cent on the fish taken.

A Mayoraal of Karikkaddumulai North in 1810 is mentioned.

For each of these Seventeen Divisions there was a principal headman called the "Provincial Mudaliya' for the 'Careas' (Karaiyars), Mokias, (Mukkuvir), 'Kadeas' (Kadaiyar). JPL p. 30

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

1807ம் ஆண்டு தொடக்கம் 1809 ம் ஆண்டு வரை நான்கு அதிகாரிகள் நியமிக்கப்பட்டிருந்தனர். செட்டிகுளம், அன்னதேவன்மடு (நெடுங்கேணி) பனங்காமம், மற்றும் வவுனிய-விழாங்குளம் ஆகிய இடங்களுக்கே அதிகாரிகள் நியமிக்கப்பட்டிருந்தனர். இவர்கள் முதலிமாரை விடவும் மேல் பதவியை உடையவர்களாகும். முதலிமாருக்கான கட்டளைகள் இவர்களூடாக அனுப்பப்பட்டுள்ளதிலிருந்து தெரியவருகிறது. பூவரசங் குளத்திலிருந்த 'வதிவிடப் பிரதிநிதி' (ஜே .ஈ. தியலெ) காலத்திலும், சிறிது காலத்தின் பின்னர் அன்னதேவன்மடுவில் இருந்த 'வதிவிடப் பிரதிநிதி' (லோறன்ஸ் ஸ்ரெயின்) காலத்தையும் குறிப்பிடலாம். ஆனால் திட்டவட்டமாக இவர்களுடைய கடமைகள் என்னவென குறிப்பிட்டுக் கூற முடியவில்லை.

அன்னதேவன்மடுவிலிருந்த அதிகாரி அங்கிருந்த நெல் களஞ்சியசாலைக்குப் பொறுப்பாக இருந்தார். ஜே.பி.எல்.பக்.30

---

From 1807 to 1809there were four "Adikars"* viz; of Cheddikulam, Annatevanmadu (அன்னதேவன்மடு-நெடுங்கேணி)

Panankamam, and Vavuniya Vilankulam. These seem to have been of superior rank to the Mudaliyars, as orders to the latter were sometimes, if not always, sent through them.* Mention is made during this period of a 'Resident of Puvarasankulam ' (J.E.Thiele), and some years later of a Resident of Anatevanmadu (Lourens Stein), but what the duties of these officers were exactly is wrapped in obscurity.

The Adikar of Annatevanmadu was in charge of the paddy godowin there. JPL. p. 30.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இந்தப் பதவியை 1808ம் ஆண்டு டிசம்பர் மாதம் வரை ரஷ்யாவைச் சேர்ந்த ஜோன்.ஏர்னஸ்ட் தியலே வகித்து வந்தார். இவர் ஆரம்பத்தில் டச்சு கிழக்கிந்திய கம்பனியில் காணிச்சேவை லெப்ரினற் ஆக இருந்து பின்னர் பிரிட்டிஸாரால் போர்க் குற்றவாளியாக கைது செய்யப்பட்டார். பின்னர் பிரிட்டிஸாரின் ஆட்சிக்காலத்தில் பிரிட்டிஸ் அரச ஊழியராகக் கடமையேற்றார். அவர் எவ்வளவோ பிரயத்தனம் செய்தும் அவரால் பழைய பதவியை பெற்றுக் கொள்ள முடியவில்லை.

பிரிட்டிஸாருடைய அரசாங்கத்தில் திருகோணமலை கலெக்டரின் காலத்தில் குறிப்பிடத்தக்க காலம் வன்னிக்குப் பொறுப்பாக இருந்துள்ளார். அத்தோடு திரு.ரேணருடைய காலத்தில் பூவரசங்குளத்தில் வதிவிடப் பிரதிநிதியாகவும் கடமையாற்றியுள்ளார். ஜே.பி.எல்.பக். 31.

---

These offices had been held since December, 1808, by John Ernest Thiele, a native of Prussia, who had been originally a "Lieutenant in the Land service" of the Dutch East Indian Company, had been a prisoner-of-war of the British, and had taken service under the British Government, an act which had "for ever excluded him from returning to his old service," as he found when he made endeavour.

Under the British Government he had charge of the Vanni for considerable time, when it was subject to the Collector of Trincomalee, and had also been the "Resident of Puvarasankulam" under Mr.Turnour. JPL. p. 31

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முதலாவது கச்சேரி கிளார்க் திரு.ஏ.ஈ.பார்த்தோலோமியஸ் (1801). இவர் ஆரம்பத்தில் வன்னியின் அமில்தார் ஆகவும் பின்னர் அதிகாரியாகவும் கடமையாற்றியவர்.

பிஸ்கால் கலெக்ரராக இருந்த திரு.போர்ப்ஸ் அவர்களால் பிரதி பிஸ்காலாக நியமிக்கப்பட்டார்.

கலெக்ரருடைய வருடாந்த வருமானம் 7400 - 7800 றிக்ஸ் வரையாகும். இது 555 லிருந்து 585 ஸ்ரேர்லிங் பவுண்ட்ஸ் வரையாகும். இதில் 4800 றிக்ஸ் சம்பளமாகவும் சேகரிக்கப்படும் நெல் வருமானத்திலிருந்து 2 வீதம் கமிசனாகவும் வழங்கப்படும்

---

The "First Kachcheri Clerk," Mr.A.E.Bartholomeusz, had been at one time Aumildar for the Vanni, and afterwards an "Adigar".*

* He was subsequently appointed Deputy Fiscal also, by Mr.Forbes, the Collector being Fiscal.

The gross annual emoluments of the Collector amounted to from Rds.7,400 to Rds.7,800, or from S.Pounds 555/- to S.Pounds 585/-. Of this sum Rds.4,800 was salary, and the rest was derved from 2 per cent, commission on the grain revenue collected.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 1808ல் வன்னியனராக பதவியுயர்வு பெற்ற முதலிமார்

ஆங்கிலேயர் 1808ம் ஆண்டு பண்டாரவன்னியன் உயிரோடு இருந்த காலப் பகுதியில் முதலிமாராக இருந்த பலருக்கு வன்னியனார் பதவிகளை வழங்கினர். 1808 ம் ஆண்டு முதலிமாராக இருந்து வன்னியனராகப் பதவி உயர்வு பெற்றவர்கள்

| | | |
|---|---|---|
| இராச சேகர முதலியார் | - | வன்னியன்-முள்ளியவளை |
| குல நல்ல மாப்பாண முதலியார் | - | வன்னியன்-புதுக்குடியிருப்பு |
| வேலப்ப முதலியார் | - | வன்னியன்-மேல்பற்று வடக்கு |
| குலசேகர நல்ல மாப்பாண முதலியார் | - | வன்னியன்- கருநாவல்பற்றுவடக்கு |
| இராசநாயக மாப்பாண முதலியார் | - | வன்னியன்- கருநாவல்பற்று தெற்கு |
| திசைவிளங்கு மாப்பாண முதலியார் | - | வன்னியன் -கரிக்கட்டுமூலை வடக்கு |
| இராசகாரிய முதலியார் | - | வன்னியன் -கரிக்கட்டுமூலை தெற்கு |
| வீரசிங்க முதலியார் | - | வன்னியன்-துணுக்காய் |
| கந்தப்பசேகர முதலியார் | - | வன்னியன் -கிழக்கு மூலை வடக்கு |
| சண்முகநாயக முதலியார் | - | வன்னியன்-கிழக்கு மூலை தெற்கு |
| சங்கரப்பிள்ளை முதலியார் | - | வன்னியன்-மேற்கு மூலை |
| சோழங்கர் சேனாதிராய முதலியார் | - | வன்னியன்-பனங்காமம் |
| கணபதி முதலியார் | - | வன்னியன்-மேல்பற்றுத் தெற்கு |
| கதிர்காமநாயக முதலியார் | - | வன்னியன்-மேல்பற்று கிழக்கு |
| கோணப்ப முதலியார் | - | வன்னியன்-செட்டிகுளம் |
| நாகப்ப முதலியார் | - | வன்னியன்-உடையாவூர் |

("யாழ்ப்பாண இராச்சியம் பிரிட்டிஷ் காலம்" செ. இராசநாயகம் முதலியார்- பக்கம்-213)

**வரவாற்றுத் தெளிவு**

☞ முதலில் வரும் எட்டுப் பிரிவுகளும் முல்லைத்தீவைச் சேர்ந்தவையாகும். அடுத்துக் குறிப்பிடப்பட்டுள்ள எட்டும் வவுனியாவைச் சேர்ந்தவையாகும். இதில் முல்லைத்தீவிற்கென தனியான முதலியார் நியமிக்கப்பட்டதற்கான விபரங்களில்லை. அடங்காப்பற்றுப் பிரதேசம் 16 முதலியார் பிரிவுகளாக அதிகரிக்கப்பட்டுள்ளமை தெரிய வருகிறது.

☞ 1808 ம் ஆண்டு ஆங்கிலேயர் ஆட்சி வரலாற்றுப் பதிவின்படி 'மாப்பாணர்" என்ற குலப்பெயரைக் கொண்ட முதலிமார்களும் வன்னியனார்களாகப் பதவி உயர்வு பெற்றுள்ளனர் .

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

| | | |
|---|---|---|
| குலசேகர நல்லமாப்பாண முதலியார் | -வன்னியன்- | கருநாவல்பற்று வடக்கு |
| இராசநாயக மாப்பாண முதலியார் | -வன்னியன்- | கருநாவல்பற்று தெற்கு |
| திசைவிளங்கு மாப்பாண முதலியார் | -வன்னியன்- | கரிக்கட்டுமூலை வடக்கு |
| குலநல்ல மாப்பாண முதலியார் | -வன்னியன்- | புதுக்குடியிருப்பு |

☞ 1808ம் ஆண்டு வன்னியில் இருந்த 16 முதலிமார் வன்னியனார்களாக பதவியுயர்த்தப்பட்டுள்ளனர். இதிலிருந்து முதலிமாருடைய அதிகாரம் இங்கு பலமுடையதாயிற்று..

☞ குலப்பெயர் குறிப்பிடப்படாத 12 முதலிமாரும் வன்னியனார்களாக பதவி உயர்த்தப்பட்டுள்ளார்கள்.

☞ ஆங்கிலேயர் ஆட்சிக்காலத்தில் இந்தப் பிரதேசத்துள் மாப்பாண வெள்ளாளர்களுள் அநேகமான மடப்பளி வெள்ளாளரும் கலந்திருந்தமையால் பதவிகள் வழங்குவதில் ஏற்றத் தாழ்வுகளும் சிக்கல்களும் அதிகம் இருந்ததாகத் தெரியவில்லை.

☞ 1809ம் ஆண்டு காலப்பகுதியில் பண்டாரவன்னியன் பனங்காமத்திலிருந்ததையும், அவரிடமிருந்து "வன்னியனார்" பதவி பறிக்கப்பட்டிருந்ததையும், கதிர்காமநாயக முதலியார் வன்னியனாராக பதவி உயர்வு பெற்றிருந்ததையுமே அவர் சாடையாகக் காட்டி "பண்டாரம்" எனக் குறிப்பிட்டுள்ளார் என்பது தெளிவாகிறது. (பாகம் 2)

☞ ஆங்கில ஆட்சியாளர்களின் குறிப்புகளின் பல இடங்களில் பண்டாரவன்னியனையும் "பண்டாரா" என்றே குறிக்கப்பட்டுள்ளது.

☞ முதலிமாராக நியமனம் பெற்றவர்கள் பிரதேசத்தின் நிர்வாக முறைமைக்கேற்ப 1808ல் வன்னியனார்களாக பதவியுயர்த்தப் பட்டனர். ஆனால் அவர்கள் வன்னியனார் பதவியை ஏற்றுக் கொள்ள விரும்பவில்லை. பரம்பரையாக வன்னியனார்களாக பதவி வகித்தவர்கள் மீது காழ்ப்புணர்ச்சி அதிகரித்திருந்தது. வன்னியனார் என்ற பதவிகள் சமூக அந்தஸ்து குறைந்தது எனவும் அவர்களை மதிப்பது கௌரவக் குறைவு எனவும் நினைத்தனர். இதற்குக் காரணம் வன்னியனார் நியமனங்கள் படிப்பறிவிற்கு முக்கியத்துவம் கொடுக்கப்படாமல் பரம்பரைக்கு முக்கியத்துவம் கொடுக்கப்பட்டு வழங்கப்பட்டமையேயாகும். (பாகம் 2)

☞ "கதிர்காமநாயக முதலியார் 1808ம் ஆண்டு வரை முதலியாராக இருந்து வன்னியனாகப் பதவி உயர்வு பெற்றவர். கதிர்காமநாயக முதலியார் மேல்பற்று கிழக்கிற்கு வன்னியனராக நியமிக்கப்பட்ட

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பின்னர் ஆங்கிலேய கலெக்டருக்கு பண்டாரத்தின் நடமாட்டம் பற்றி தகவல்களைக் கொடுத்துள்ளார். (பாகம் 2)

☞ 18-10-1810 ல் ஆங்கிலேய கலெக்ரர் ரேணருக்கு எழுதிய முதல் கடிதத்தில் "வட்டுவாகலில் ஒரு வருடத்திற்கு முன்னர் காணப்பட்ட பண்டாரம்" என்று மட்டுமே குறிப்பிட்டுள்ளார். அதாவது 1809 ம் ஆண்டு வட்டுவாகலிற்கு பண்டாரம் சென்று வந்துள்ளார் என்பது தெளிவாகின்றது.

"One Pandaram who last year was at Wattowahkalloo (Vaddauvakallu 1 ½ mile from Mullaittivu)

☞ 1808 ம் ஆண்டுக்கு முன்னர் ஆங்கிலேயரால் பதவியுயர்வு பெற்றவர்களில் அநேகர் நாட்டு பற்று இல்லாதவர்களாக ஆங்கிலேயரின் உண்மை விசுவாசிகளாக இருந்தமை கதிர்காமநாயக முதலியார் மற்றும் கோணப்ப முதலியார் ஆகியோர் கலெக்ரருக்கு எழுதிய கடிதங்கள் மூலம் ருசுவாகின்றன.

☞ 1808ல் முதலிமார் "வன்னியனார்" என்று பதவிக்கு உயர்த்தப்பட்டதிலிருந்து முதலிமார் வன்னியனார் பதவிக்கு கீழ்த் தரத்தில் இருந்தார்கள் என்பது தெளிவாகின்றது. இவர்கள் அனைவரும் கல்வியின் நிமித்தமோ அல்லது யாழ்ப்பாணத்திலிருந்த வெள்ளாள மாப்பாணர் மற்றும் மடப்பளி வேளாளர் குடும்பங்களிலிருந்தோ தெரிவு செய்யப்பட்டு ஏற்கனவே முதலியார் நியமனம் பெற்றவர்கள். இவர்களில் மடப்பளி வேளாளர்கள் அடங்காப்பற்றில் பதவியிலிருந்த வெள்ளாள மாப்பாணர்களுடன் திருமண பந்தத்தை ஏற்படுத்திக் கொண்டிருந்தனர்.

☞ முதலிமாராக நியமனம் பெற்றவர்கள் யாழ்ப்பாணத்திலிருக்கும் ஆட்சிமுறை போலவே அடங்காப்பற்றிலும் (வன்னியிலும்) இருக்க வேண்டும் என நினைத்தனர். அடங்காப்பற்றில் முதலிமாராக பதவி வகித்தவர்கள், பரம்பரையாக வன்னியனார் பதவி வகித்தவர்களுக்கு கீழே அடங்கிக் கடமை பார்க்க விரும்பவில்லை. இதனால் அதிகாரப் போட்டிகள் ஏற்பட்டுள்ளன என்பது வரலாற்றை கூர்ந்து கவனிப்பவர்களுக்குத் தெளிவாகும்.

☞ ஆங்கிலேயர் திறை சேகரிக்கும் நடவடிக்கைகளை சுலபமாக்கும் வகையில் கூடுதலாக கல்வித் தகைமைகளுக்கும், தமக்கு விசுவாசமாக கடமையாற்றுவார்கள் என அவர்களால் தெரிவு செய்யப்பட்டவர்களுக்கும் முக்கியத்துவம் கொடுத்து முதலிமார்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பதவிகளை வழங்கினர். அநேகமானோர் யாழ்ப்பாணத்திலிருந்து முதலியார் நியமனங்களுக்கு தெரிவு செய்யப்பட்டுள்ளனர்.

☞ நாட்டுப்பற்றாளர்களாக இருந்த பண்டாரவன்னியனையும், கரைதுறைப்பற்று குமாரசேகர முதலியாரையும், பெரியகுளம் மாப்பாண முதலி வன்னியனாரையும் வேறு பிரிவுகளைச் சேர்ந்த முதலிமார்கள் ஆங்கிலேயர்களுக்குக் காட்டிக் கொடுக்க இதுவே முக்கிய காரணிகளாக முன்னின்றது எனலாம்.

☞ வன்னியனார் என்ற அதிகாரப் பதவி இல்லா தொழிக்கப்பட்டதையே ஆங்கில வரலாறுகள் 1811ம் ஆண்டு பண்டாரவன்னியன் மறைந்ததும் "வன்னியனார்களுடைய ஆட்சியிலிருந்து வன்னியை மீட்டெடுத்துள்ளோம்" எனத் தெரிவித்துள்ளனர்.

☞ இதன் மூலம் பரம்பரையாக வன்னியனார் பதவி வகித்தவர்களுக்கும், படிப்பறிவைத் தகுதியாகக் கொண்டு பதவி பெற்றவர்களுக்குமிடையில் ஏற்றத் தாழ்வுகள் ஏற்பட்டன. யாழ்ப்பாணப் பிரதேசத்தைப் போன்று வன்னியிலும் முதலிமார் தமது பதவிகளை முதன்மைப்படுத்த முயன்றமையே இந்த ஏற்றத் தாழ்வுகளுக்கும், காட்டிக் கொடுப்புகளுக்கும், வன்னி வளங்கள் அழிந்து போவதற்கும் காரணங்களாயின

## வன்னிக் குளங்கள்

வன்னி நாட்டிலுள்ள குளங்கள் ஆண்டுகள் தோறுங் கட்டுகள் உடைந்து வர, அவைகளைத் திருத்திக் கட்டுவாரின்மையால் வேளாண்மையும் குறைந்து வந்தது. காட்டுக் காய்ச்சலும் அக்காலத்திற்றான் வன்னிநாட்டிற் காலூன்றத் தொடங்கியது. ஒரு காலத்தில் செழிப்புஞ் செல்வமும் பெற்று உன்னத நிலையிலிருந்த வன்னிநாடு காட்டுக் காய்ச்சலை தடைபண்ண வேண்டிய முயற்சிகளில் அரசினர் தலையிடாதபடியால், இப்போது மனித சஞ்சாரமற்ற வனாந்தரமாகி யாழ்ப்பாண வளனையோங்கவிடாது சீர்கெடச் செய்யும் ஓர் உதிரமற்ற உடலாகக் கிடக்கின்றது என்று வரலாற்றாசிரியர்கள் குறிப்பிட்டுள்ளனர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**அத்தியாயம் - ஏழு**

# வன்னியில் முதலிமாரின் கடமைகள்

வன்னியில் கடமையாற்றிய முதலிமாருடைய கடமைகளை அவர்கள் எழுதியுள்ள குறிப்புக்களை அடிப்படையாக வைத்தே தொகுக்க வேண்டியுள்ளது.

வன்னிப் பிரதேசத்தில் கடமையாற்றிய முதலிமாரின் கடமைகள் பல இடங்களில் குறிப்பிடப்படுகின்றன.

1799ம் ஆண்டு ஒகஸ்ட் மாதம் 7ந் திகதி வதிவிடப் பிரதிநிதி திரு. தியலே எழுதிய கடிதத்தில் முதலியார் சம்பந்தமாக மூன்று விடயங்கள் குறிப்பிடப்பட்டுள்ளன. இந்தக் கடிதத்தின் மொழிபெயர்ப்பு எமது மூன்றாம் பாகத்தில் தரப்பட்டுள்ளது. முதலிமார் டச்சுக்காரர் காலத்திலும் நியமிக்கப்பட்டிருந்தார்கள் என்பதற்கு கீழேதரப்பட்டுள்ள கடிதத்தின்படி ஆதாரங்களைக் காட்டலாம்

---

August 7,1799
Order of Mr.Thiele to Tisaivilanku Mappana Mudaliyar and the Udaiyars of Putukkudiyiruppu to wit: In virtue of the statement made that the Oppum granted by T.Nagel, esq, to Gabriel Sylvestary Palla of Putukkudiyiruppu, appointing him Muppu of the Roman Catholic Church and exempting from uliyam duty, was destroyed by Thisaivilanku Mappana Mudaliyar who formerly held office at Putukkudiyiruppu in the year the English came. It is now ordered that his son, Marison, do perform the duties of Muppu. It is further ordered that the whole Roman Catholic congregaton do obey the orders of this Muppu Marison, and that he and his father be not called for any uliyam duty

(Signed) J.G.Thiele
(Signed )——

Mudaliyar
JPL.p.108

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

1. 1799ல் திசைவிளங்கு மாப்பாண முதலியார் புதுக்குடியிருப்பில் டச்சுக்காரர் காலத்திலிருந்து கடமையாற்றியுள்ளார்.

2. திசை விளங்கு மாப்பாண முதலியார் ஆங்கிலேயர் (1795) ஆட்சி தொடங்கும்போது அதாவது டச்சுக்காரருடைய ஆட்சிக் காலத்தில் புதுக்குடியிருப்பில் பதவி வகித்துள்ளார்.

3. எழுதப்பட்ட கடிதத்திலும் அலுவலகத்தில் கடமையாற்றிய முதலியார் ஒருவர் கையொப்பமிட்டுள்ளார்.

4. அடங்காப்பற்று வன்னி முதலிமார் நீர்ப்பாசனம், விவசாயம், நெல்லைக் களஞ்சியப்படுத்தல், விதைநெல் வழங்கல், விவசாயச் செய்கைக்குத் தேவையான வாரக்குடிகளை ஒப்பந்தம் செய்தல் மேட்டுநிலப்பயிர்ச் செய்கை, யானை பிடித்தல், போன்ற பல வகையான கடமைகளைச் செய்துள்ளார்கள்.

5. முக்கியமாக ஆட்சியினருக்கு வருமானம் சேகரித்துக் கொடுக்கும் பிரதிநிதிகளாக இருந்து அந்தக் கடமைகளை நிறைவேற்றினார்கள்.

6. இவர்களுக்கு அரசு நிரந்தர சம்பளம் வழங்கியதற்கான ஆதாரங்கள் எதுவுமில்லை. இவர்கள் சேகரித்துக் கொடுக்கும் வருமானத்திற்கேற்ப கமிசன் வழங்கப்பட்டது.

7. அலுவலகங்களில் லிகிதர்களாகவும், மொழிபெயர்ப்பாளர்களாகவும், செயலாளராகவும் கடமையாற்றியவர்கள் முதலிமார் என அழைக்கப்பட்டுள்ளார்கள்.

மேற்கூறிய காரணங்களுக்கான ஆதாரங்கள் தொடர்ச்சியாக தரப்படுகின்றன.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

1812ம் ஆண்டு முதலியாரொருவர் எழுதிய குறிப்பில்- பின்வருமாறு தெரிவிக்கப்பட்டிருந்தது. "பெப்ரவரி மாதம் 18 ந் திகதி பிரதேச மக்களுக்கு தலைமை தாங்கி யானை பிடிக்கச் செல்லாவிட்டால் தான் தப்பாமல் பதவியை இழக்க நேரிடும்" என எழுதியுள்ளார். ஒரு வருடத்தின் பின்னர் யாழ்ப்பாணத்தில் யானைகள் விற்கப்பட்டுள்ளன. ஆனால் அதற்கான கணக்கறிக்கைகள் எதுவும் கலெக்ரருக்கு சமர்ப்பிக்கப்படவில்லை. ஜே.பி.எல். பக்கம் -110

தானியங்கள் விளைவடைந்து அறுவடைக்கு தயாராகும்போது குழு ஒன்று இதனை மதிப்பீடு செய்யும். இந்தக் குழுவில் அரச மதிப்பீட்டாளர், மாகாண முதலியார், பொர்மாண்டோ முதலியார், உடையார் மற்றும் இரண்டு பிரதான குடியிருப்பாளர்கள் இந்தக் குழுவில் அடங்குவர்.

ஜே.பி.எல். பக்கம் -110 ஜே.பி.எல். பக்கம் -138

---

A Mudaliyar is informed in 1812 that " if he does not lead out the people of the district on 18th February to begin the elephant hunt, he will infalliably be dismissed." In one year, when the elephants were sold in Jaffna,"no account was ever rendered to the Collector of their proceeds. JPL Page 110,

On the grain ripe, the crops were assessed by a committee consisting of a Government assessor, the Provincial Mudaliyar, the Pormando Mudaliyar, the Udaiyar, and two principal inhabitants of the division. JPL.p.138

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

விதைநெல் தேவைப்படுபவர்கள் நிலத்தை உழுவதற்கு ஆரம்பிக்கும்போது தமது விண்ணப்பத்தை முதலியாருக்கு கையளிக்க வேண்டும். அவர் கிராமத்தலைவரையும், பிரதான குடியிருப்பாளர்கள் இருவரையும் அழைத்து விண்ணப்பத்தின் உண்மைத்தன்மையை ஆராய்ந்து சான்றிதழ் வழங்குவார். அந்தச் சான்றிதழை கச்சேரியில் சமர்ப்பித்து இரண்டு பிணை வைத்த பின்னர் விதை நெல் வழங்கப்படும். ஜே.பி.எல். பக்.-139

உலர் தானியங்களைப் பயிரிடுவது மக்களுக்கு மிகவும் முக்கியமானது. அநேகமானோருக்கு விவசாய நிலமில்லை. அதற்கு உரிய வசதிகளுமில்லை. விளை நிலங்கள் இருப்போருக்கு கால்நடைகள் மற்றும் தொழிலாளர் வசதிகளுமில்லை" என முதலியார்கள் குறிப்பிட்டுள்ளனர் .(குறிப்பு திரு. டைக் ஓகஸ்ட் 26,1842) ஜே.பி.எல். பக்.180

---

Persons who required seed paddy made applications at the time of sowing to the Mudaliyar , who with committee called by him of headmen and two principal inhabitants inquired in to the claim, and if satisfied of its genuniness gave the applicant a certificate. On the production of this certificate at the Kachcheri, and on the execution of a bond by the applicant with two sureties , the paddy was issued to him. JPL.p.139

The Mudaliyars state that "the cultivation of dry grain is very important to the people. There are many who have no paddy land , and no means of cultivating the paddy lands of others , no cattle,& who cannot procure employment under those who have paddy land"; Diary of Mr.Dyke, August 26, 1842) JPL.p.180

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சூடடிப்பதில் ஏற்படும் தாமதம் பற்றிக் குறிப்பிடும்போது முதலியார் ஒருவர் கொடுத்த விளக்கம் பின்வருமாறு அமைந்துள்ளது. இது சம்பந்தமாக முதலியார்களுள் ஒருவர் இரண்டு பிரதான காரணங்களைத் தந்தார். ஆனால் மக்கள் அதனைப்பற்றி பகிரங்கப்படுத்த விரும்பவில்லை.

கால்நடைகளை உரிய காலத்தில் பெற்றுக் கொடுப்பதில் கவனயீனம் நிலவியதாகக் மக்கள் குறிப்பிட்டார்கள். ஆனால் முதலியார் அதனை நம்பவில்லை. குறிப்பு நவம்பர் 2, 1848 ஜே.பி.எல். பக். 172

---

The explanation given by one of the Mudaliyars when he was consulted on the subject, was that it was due to two principal reasons which,however , the people were disinclined to divulge;

The reasons alleged by the people themselves were want of cattle, want of time, and carelessness, but the Mudaliyar did not believe; (Diary of November 2,1848) JPL.p.172

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கரைதுறைப்பற்று முதலியார் வாரக்குடிகளுடன் ஒப்பந்தம் செய்வது வழக்கம். அந்த ஒப்பந்தத்தில் வாரக்குடிகள் ஆறு அல்லது ஏழு மாதங்கள் விவசாயச் செய்கைக்கு உதவ வேண்டும் மிகுதி நாட்களில் அவர்கள் தமது தொழிலைச் செய்யலாம் -அறிக்கை ,1872. ஜே.பி.எல். பக் -201

**புகையிலைச் செய்கை :** முதலியார் கொடுத்த அறிக்கையின்படி ஏனைய கிராமங்களுக்கும் இதனை அறிமுகம் செய்தால் இது ஒரு முன்னுதாரணமாக இருக்கும்.

துணுக்காய் முதலியாருடைய அறிக்கையின்படி புகையிலைச் செய்கை நெற்செய்கையை விட இலாபகரமானது. இதனால் விவசாயிகள் நெற்செய்கை செய்வது போல பாசாங்கு செய்து புகையிலைச் செய்கைக்காக நீரைச் சேமித்து வைக்கிறார்கள். ஜே.பி.எல். பக். 187.

---

The Mudaliyar of the Maritime pattus said that the custom as to 'varakkudis in his part of the district was that they were only supported during the sixth or seventh month's cultivation. During the other part of the year they work for themselves. Report , 1872. JPL.p.201

Tobacco: The Mudaliyar reported that if allowed, other villages would follow their example.

The Mudaliyar of Tunukkay reported that tobacco cultivation is so much more profitable than paddy that the people make a mere pretence of cultivating their fields and save the water for tobacco; (Diary of September 30, 1886) JPL.p.187

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## வாரக்குடி ஒப்பந்தம் (விவசாயம்)

1890 ம் ஆண்டு ஜூன் மாதம் 30ந் திகதி முல்லைத்தீவு வேலன் வினாசி என்பவர் முல்லைத்தீவு வேலனித்த ரட்ணசிங்க முதலியார் மயில்வாகன முதலியாருடன் செய்த சேவை ஒப்பந்தம் பின்வருமாறு என்று அந்த ஒப்பந்தம் தொடர்கிறது. ஜே.பி.எல்.பக்-204

**வரலாற்றுத் தெளிவு:**

☞ வரலாற்று நூலைத் தொகுத்த ஜே.பி.லூயிஸ் அவர்கள் 1889 ஜூலை 15 தொடக்கம் 1890 டிசம்பர் 14 வரையும் உதவி அரசாங்க அதிபராக கடமையாற்றியுள்ளார். இவருடைய குறிப்புகளின்படி அதியுயர் பதவிகள் அனைத்தும் வெளிநாட்டவர்களால் வகிக்கப்பட்டுள்ளமை தெரிய வருகிறது.

☞ 1807ம் ஆண்டு தொடக்கம் கலெக்ரர் பதவியும், 1845 ம் ஆண்டு தொடக்கம் உதவி ஏஜென்ரர் பதவியும், பின்னர் 1867 தொடக்கம் முல்லைத்தீவிற்கு தனியாகவும் வவுனியாவிற்கு தனியாகவும் உதவி ஏஜென்றகள் நியமிக்கப்பட்டனர். 1881 தொடக்கம் 1893 வரையும் வவுனியா முல்லைத்தீவு ஆகிய இரண்டு பிரிவுகளுக்கு ஒரு ஏஜென்ற் கடமையாற்றியதாகவும் பதிவுகள் தெரிவிக்கின்றன.

☞ பின்னர் தனித்தனி மாவட்டங்களாகவும் பிரிக்கப்பட்டுள்ளன.

---

Varakkudi Contract (Cultivation)
'The 30th day of June, 1890, I, Velon Vinasi, of Mullaitivu, enter into a contract of service with Velanita Retnasinka Mudaliyar Mayilvahana Mudaliyar of Mullaitivu as follows; JPL.p.204

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**அத்தியாயம் - எட்டு**

# வவுனியா - நிர்வாகம்

வன்னிப் பிரதேசம் விடத்தல்தீவை தலைமையிடமாகக் கொண்டு நிர்வாகம் நடத்தப்பட்டபோது சகல பிரிவுகளும் ஒன்றாக இருந்தன. 1783ம் ஆண்டு ஒல்லாந்தரான தோமஸ் நாகல் முல்லைத்தீவை தலைமையிடமாக மாற்றினார். ஆங்கிலேயருடைய ஆட்சிக் காலத்தில் வருமானத்தை சரியான முறையில் அறவிடுவதற்காக முல்லைத்தீவு , மன்னார், வவுனியா ஆகிய பிரதேசங்கள் காலத்துக்குக் காலம் தனித்தனி மாவட்டங்களாகப் பிரிக்கப்பட்டதை அவதானிக்கக் கூடியதாக இருக்கின்றது. நிர்வாகத் தேவைக்காக சில பிரிவுகள் ஒன்றோடொன்று மாற்றிச் சேர்க்கப்பட்டுள்ளமையும் தெரிகின்றது.

இந்தப் பிரதேசத்தில் முதலிமார்களாக 1808 தொடக்கம் கடமையாற்றியவர்கள்.

**1808 ல் முதலிமார்**

| | | |
|---|---|---|
| கணபதி முதலியார் | - வன்னியன் | -மேல்பற்றுத் தெற்கு |
| கதிர்காமநாயக முதலியார் | - வன்னியன் | -மேல்பற்று கிழக்கு |
| சண்முகநாயக முதலியார் | - வன்னியன் | -கிழக்கு மூலை தெற்கு |
| கந்தப்பசேகர முதலியார் | - வன்னியன் | -கிழக்கு மூலை வடக்கு |
| கோணப்ப முதலியார் | - வன்னியன் | -செட்டிகுளம் |
| சங்கரப்பிள்ளை முதலியார் | - வன்னியன் | -மேற்கு மூலை |
| சோழங்கர் சேனாதிராய முதலியார் | - வன்னியன் | -பனங்காமம் |
| நாகப்ப முதலியார் | - வன்னியன் | -உடையாவூர் |

* 1936ம் ஆண்டு வெளியிடப்பட்ட முதலிமார் பற்றிய விபரங்களில் வவுனியாப் பிரிவில் பதவி வகித்தோரின் ஆண்டு விபரங்கள் சரியாகத் தரப்படவில்லை

("யாழ்ப்பாண இராச்சியம் பிரிட்டிஷ் காலம்" செ. இராசநாயகம் முதலியார்- பக். -213)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வவுனியா, முல்லைத்தீவு முழுப்பிரிவும் ஒரே பிரிவாக நிர்வகிக்கப்பட்டுள்ளது. அதற்கு உதாரணமாக பின்வரும் பதவிகளையும் சம்பளப்பட்டியலையும் குறிப்பிடலாம்.

1810 ம் ஆண்டு நிர்வாக அமைப்பும் சம்பளங்களும் பின்வருமாறு அமைந்திருந்தது.

| | றிக்ஸ் |
|---|---|
| கலெக்டர் மாகாண நீதிபதி | 400 |
| வதிவிட நீதவான் விடத்தல் தீவு | 100 |
| மாகாண நீதிபதியின் செயலாளர்-எழுது வினைஞர் | 57 |
| மாகாண நீதிபதியின் 2வது செயலாளர்-எழுது வினைஞர் | 20 |
| விடத்தல் தீவு வதிவிட நீதவானின் மொழிபெயர்ப்பாளர்-செயலாளர் | 20 |
| மாகாண நீதிபதியின் மொழிபெயர்ப்பாளர் | 30 |
| கணக்கப்பிள்ளை – காசு (சிறாப்பர்) | 15 |
| கணக்கப்பிள்ளை - களஞ்சியம் | 15 |
| கணக்கப்பிள்ளை –விடத்தல்தீவு களஞ்சியம் | 15 |
| முதலாவது ஆராச்சி | 06 |
| இரண்டாவது ஆராச்சி | 05 |
| முதலாவது கங்காணி | 04 |
| இரண்டாவது கங்காணி | 04 |
| ஆறு மதிப்பீட்டாளர்கள் 6X6 | 36 |
| பன்னிரண்டு பியோன் | 45 |
| ஒரு ஜெயிலர் | 10 |
| ஒரு மலபார் மதகுரு (தமிழ்) | 04 |
| | 786 |

ஜே.பி.எல்.பக். 32.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

In 1810 the establishment was as follows;-

| | | Per Mensem.Rds |
|---|---|---|
| Collector and Provincial Judge | — | 400 |
| Sitting Magistrate, Worteltivoe | — | 100 |
| Writer and Secretary to the Provincial Judge | — | 57 |
| Second Writer and Secretary to the Provincial Judge | — | 20 |
| Interpreter and Secretary to Sitting Magistrate, &c,at Worteltivoe | — | 20 |
| Interpreter to the Provincial Judge | — | 30 |
| Kanakapulle of Cash (i.e., Shroff) | — | 15 |
| Kanakapulle of Godown | — | 15 |
| Kanakapulle of Godown at Worteltivoe | — | 15 |
| First Archchi | — | 6 |
| Second Arachchi | — | 5 |
| First Kangani | — | 4 |
| Second Kangany | — | 4 |
| Six Assessors at 6 Rds, each | — | 36 |
| Twelve Peons at Rds. 3 and Rds.9 each | — | 45 |
| One Jailer | — | 10 |
| One Malabar Priest | — | 4 |
| | | 786 |

JPL. p. 31, 32

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

1891ம் ஆண்டில் வவுனியா மாவட்டத்தில் (வன்னி) 253 கிராமங்கள் இருந்தன. பத்துப் பற்றுக்களாகவும் பிரிக்கப்பட்டிருந்தன.

1. கிழக்குமூலை தெற்கு
2. கிழக்குமூலை வடக்கு
3. நடுச்செட்டிகுளம்
4. சின்னச் செட்டிகுளம் கிழக்கு
5. சின்னச் செட்டிகுளம் மேற்கு
6. மேற்குமூலை
7. பனங்காமம்
8. உடையாவூர்
9. மேல்பற்று தெற்கு
10. மேல்பற்று கிழக்கு ஜே.பி.எல்.பக்.48.

* சின்னச் செட்டிகுளம் கிழக்கு, மேற்கு என இரண்டு பிரிவுகளாக பிரிக்கப்பட்டுள்ளன.


---

Number of Villages 253
The District of Vavuniya is divided in to Ten pattus

1. Kilakkumulai South
2. Kilakkumulai North
3. Naduchcheddikkulam
4. Chinnachchiddikulam East
5. Chinnachcheddikkulam West
6. Metkumulai
7. Panankamam
8. Udaiyaur
9. Melpattu South
10. Melpattu East.

JPL p. 48

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




The District of Vavuniya 1891

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

1895ம் ஆண்டு "வன்னி" என்றழைக்கப்பட்ட பிரதேசங்களில் ஒன்பது பிரிவுகள் உள்ளடக்கப்பட்டு வன்னி மாவட்டம் மாற்றியமைக்கப்பட்டது. இதில் மூன்று பிரிவுகளாக இருந்த செட்டிகுளம் மீண்டும் இரண்டு பிரிவுகளாக குறைக்கப்பட்டதால் ஒன்பது பிரிவுகளாகின்றன.

| | | |
|---|---|---|
| 1. | மேல்பற்று தெற்கு | வன்னி மாவட்டங்கள் |
| 2. | மேல்பற்று கிழக்கு | |
| 3 | கிழக்குமூலை தெற்கு | |
| 4 | கிழக்குமூலை வடக்கு | |
| 5. | சின்னச்செட்டிகுளம். | |
| 6. | நடுச்செட்டிகுளம் | |
| 7. | மேற்கு மூலை | |
| 8. | பனங்காமம் | |
| 9. | உடையாவூர் | |

"வன்னி மாவட்டங்கள்" என இவை அழைக்கப்பட்டன. ஜே.பி.எல்.பக். 48

---

| | | |
|---|---|---|
| 1. | Melpattu South | Wanny District |
| 2. | Melpattu East | |
| 3. | Kilakkumulai South | |
| 4. | Kilakkumulai North | |
| 5. | Chinnacheddikulam | |
| 6 | Naduchcheddikulam | |
| 7. | Metkumulai | |
| 8. | Panankamam | |
| 9. | Udaiyaur | |

*6-17 Called "the Wanny Districts" JPL. p. 48

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

- கடைசி ஒன்பது பிரிவுகளும் தற்போது (1895) வவுனியா மாவட்டமாக அமைக்கப்பட்டுள்ளது.

- 1895ம் ஆண்டு வன்னி என்றழைக்கப்பட்ட பிரதேசங்களில் ஒன்பது பிரிவுகள் உள்ளடக்கப்பட்டு வவுனியா மாவட்டம் உருவாக்கப்பட்டது.

1. மேல்பற்று தெற்கு
2. மேல்பற்று கிழக்கு
3 கிழக்குமூலை தெற்கு
4 கிழக்குமூலை வடக்கு
5. சின்னச்செட்டிகுளம்.
6. நடுச்செட்டிகுளம்
7. மேற்கு மூலை
8. பனங்காமம்
9. உடையாவூர்

} வவுனியா மாவட்டங்கள்

---

* The last nine divisions now form the District of Vavuniya,

01. Melpattu South
02 Melpattu East
03 Kilakkumulai South
04 Kilakkumulai North
05. Chinnacheddikulam
06. Naduchcheddikulam
07. Metkumulai
08. Panankamam
09. Udaiyaur

} Vavuniya District

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

* சில பிரிவுகளின் பெயர்கள் தமிழில் எதுவித அர்த்தமும் இல்லாதவை. சில பெயர்கள் பழமை வாய்ந்த சுத்தமான அர்த்தமுள்ள தெளிவான தமிழ்ப் பெயர்களாகும். பனங்காமம், சிங்களப் பெயரை பிரதிநிதித்துவப்படுத்துவதாகும். கமம் என்பது சமஸ்கிருதத்திலிருந்து வந்த தமிழ்ப் பெயராகும். சிங்களத்திலிருந்து 'கம' என்ற சொல் வந்திருக்கலாம்.

* யாழ்ப்பாணச் சரித்திரத்திலே செட்டிகுளம் என்ற இடத்தின் வரலாறு பற்றியும் விளக்கப்படுகின்றது.

☞ பாணன் + கமம் என்ற சொல்லும் கூட இணைக்கப்பட்டு பாணன்கமம் என்பது பனங்காமம் என மருவியிருக்கலாம். ஆய்வுக்குரியது)

சின்னச் செட்டிகுளம், நடுச்செட்டிகுளம் ஆகிய இரண்டு பிரிவும் ஒரு முதலியாரின் கீழ் இருந்தன. ஆனால் 1807 திரு.ரேணர் கடமையை பொறுப்பேற்றதும் இரண்டும் தனித்தனிப் பிரிவுகளாக்கப்பட்டு இரண்டு முதலியார்கள் நியமிக்கப்பட்டனர். ஜே.பி.எல்.பக். 29.

பெருங்களி தவிர்ந்த ஏனைய ஆறு பிரிவுகளும் குறிப்பாக வன்னியின் மேற்குப் பிரிவின் அரைப்பகுதி ஒன்றிணைக்கப்பட்டு வன்னி மாகாணம் அமைந்திருந்தது. அவற்றில் கிழக்குமூலை தெற்கு, மேற்குமூலை, பனங்காமம், சின்னச் செட்டிகுளம், நடுச்செட்டிகுளம் ஆகிய ஐந்து பிரிவுகளும் தற்போது வவுனியா மாவட்டத்துடன் இணைக்கப்பட்டுள்ளன. ஜே.பி.எல்.பக். 31.

---

Chinnachcheddikulam and Naduchcheddikulam were at first under one Mudaliyar, but in 1807, soon after Mr.Turnour assumed duties, the two divisions were separated, and each placed under a Mudaliyar. JPL. p. 29

Beside Perunkali, the six divisions which, roughly speaking, form the western half of the Province of the Vanni, viz., Kilakkumulai South, Metkumulai, Panankamam, Chinnachcheddikkulam, and Naduchcheddikkulam, all of which at the present day belong to the Vavuniya District. JPL. p. 31

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வவுனியா முல்லைத்தீவு கச்சேரிகளுக்கான சம்பளப்பட்டியல்களில் முதலிமார் உடையார் பதவிகளுக்கு சம்பளக் கொடுப்பனவு வழங்கப்பட்டதற்கான பதிவுகள் எதுவும் 1895ம் ஆண்டுவரை இருக்கவில்லை. ஆனால் 1895ம் ஆண்டு சம்பளக் கொடுப்பனவுப் பட்டியல்களில் முதலிமார், உடையார், கோறளைகள் மற்றும் அடப்பன் ஆகியோருக்கு கொடுப்பனவு வழங்கப்பட்டதற்கான பதிவுகள் காணப்படுகின்றன. கச்சேரியில் வேலை செய்த ஊழியர்களின் சம்பளத்தோடு ஒப்பிடுகையில் முதலிமார்களின் சம்பளம் மிகக் குறைவாக இருந்ததையும் கவனிக்கக் கூடியதாக இருக்கின்றது..

| வவுனியா | ரூபா.சதம் |
|---|---|
| தலைமைக் கிளார்க் | 1100.0 |
| மொழிபெயர்ப்பாளர் | 720.0 |
| நான்கு முதலிமார் தலா | 200.0 |
| ஒன்பது உடையார் தலா | 120.0 |
| இரண்டு கோறளைமார் தலாங | 90.0 |

---

The present establishment under the Assistant Agent are as follows

| Vavuniya | Rs. c |
|---|---|
| Head Clerk | 1100.0 |
| Interpreter/Native | 720.0 |
| Four Mudaliyars at | 200.0 |
| Nine Udaiyars at | 120.0 |
| Two Koralas at | 90.0 |

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முதலிமார்களை நியமிப்பதற்காக மீண்டும் பிரிவுகள் மாற்றியமைக்கப்பட்டன. வவுனியாவிற்கு நாலும் (4) மற்றும் முல்லைத்தீவிற்கு மூன்று பிரிவுகளுமாக (3) பிரிக்கப்பட்டு மொத்தம் ஏழு மாவட்ட முதலியார்களை நியமித்தனர். இதற்கானவே இந்த மாற்றம் மேற்கொள்ளப்பட்டது.

பின்வரும் முறைப்படி வவுனியாப் பிரதேசங்கள் இணைக்கப்பட்டன.

வவுனியா

1. கிழக்குமூலை வடக்கு மற்றும் தெற்கு
2. நடுச்செட்டிகுளம். சின்னச்செட்டிகுளம் கிழக்கு மற்றும் மேற்கு.
3. மேற்கு மூலை. பனங்காமம்.
4. மேல்பற்று தெற்கு,கிழக்கு மற்றும் உடையாவூர்

---

The divisions are grouped under seven District Mudaliyars as follows;

Vavuniya

1. Kilakkumulai North and South
2. Naduchcheddikkulam and Chinnachcheddikkulam East & West
3. Metkumulai and Panankamam
4. Melpattu South and East and Udaiyaur

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## வவுனியா முதலிமார்

1899ம் ஆண்டு வவுனியா வேறாகப் பிரிக்கப்பட்டதும் அதற்கென முதலிமார் தனியாக நியமிக்கப்பட்டனர். வவுனியாவிற்கு பனங்காமம் முக்கிய பிரதேசமாக இருந்தபடியால் அதன் தலைமைத்துவம் பற்றிய விபரங்கள் 1644ம் ஆண்டிலிருந்து வரலாறுகளின் இருந்து தொகுக்கப்பட்டுள்ளன.

### பனங்காமம்

| | | |
|---|---|---|
| கயிலை வன்னியன் | - பனங்காமம் | -1644-1678 |
| காசியனார் | - பனங்காமம | -1678-1679 |
| டொன் பிலிப் நல்ல மாப்பாணர் முதலியார் கரைச்சி, | | |
| | -பனங்காமம் | -1679-1697 |
| கதிரை நாச்சன் | | -1765 |
| டொன் கஸ்பர் | | |
| நிற்சிங்க சேனாதிராயன் முதலியார் | - பனங்காமம் | -1765 |
| மரிய கதிரைநாச்சி | | -1765 |
| டொன் கஸ்பர் இலங்கை நாராயண முதலியார் | | |
| | -பனங்காமம் | -1765 |
| டொன் தியோகு புவி (அழகேசன்)நல்ல மாப்பாணர் | | |
| | -(முல்லைத்தீவு, பூநகரி) | -1767 |
| *டொன் ஜுவான் குலசேகர | | |
| நல்ல மாப்பாணன் | -பனங்காமம் (அயுதாந்தி) | -1781-1790 |
| பரநிருப சிங்க முதலி (நிருபம் எழுதுபவர்) | | -1781 |
| டொன் கஸ்பர் நல்ல மாப்பாணர் | பனங்காமம் | -1783-1784 |
| எல்லக் காவேத நல்ல நாச்சன் | | -1784-1790 |
| கப்ரன் தோமஸ் நாகெல் (பனங்காமம், முல்லைத்தீவு) | | -1784-1785 |
| எல்லக் காவேத நல்ல நாச்சன் (திரும்பவும் நியமிக்கப்பட்டவர்) | | -1785-1790 |
| * பண்டாரவன்னியன் | | -1800பின் |

* டொன் ஜுவான் குலசேகர நல்ல மாப்பாணன்(அயுதாந்தி) 1781ல் பனங்காமப்பற்றின் ஒரு பகுதிக்கு ஆழ்வையினார் கந்த உடையான் என்பவருக்கு திசைவிளங்கு முதலியார் என்ற பட்டத்தை வழங்கி நியமனம் வழங்கியுள்ளார்.

* இந்த நியமனம் செல்லுபடியற்றதெனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

* பண்டாரவன்னியன் ஒல்லந்தர்களை எதிர்த்த காரணத்தால் 1800ம் ஆண்டுக்குப் பின்னர் ஆங்கிலேயரால் பனங்காமத்தின் ஒரு பகுதிக்கு மீண்டும் வன்னியனாராக நியமிக்கப்பட்டான்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## வவுனியா தெற்கு முதலிமார்கள்

ஆங்கிலேயர்களின் நியமனப் பதிவேடான "அல்மனக்கில்" வவுனியாவில் கடமையாற்றிய முதலிமாரின் பெயர்கள் பின்வருமாறு தரப்பட்டுள்ளன. ஆனால் அவர்களின் நிர்வாகக் காலம் தனித்தனியாக தரப்படவில்லை.

செல்லத்துரை தம்பியப்பா இலங்கையர் - மாவட்ட முதலியார், வவுனியா தெற்கு

அம்பலவாணர் கணபதிப்பிள்ளை - (UU) மாவட்ட முதலியார் வவுனியா தெற்கு

## வவுனியா வடக்கு முதலிமார்கள், உடையார்கள்

இராஜகாரியர், சிவசிதம்பர உடையார், மாவட்ட முதலியார் வவுனியா வடக்கு
ஆறுமுகம் கணபதிப்பிள்ளை (F) மாவட்ட முதலியார் வவுனியா வடக்கு
செல்லையா கணபதிப்பிள்ளை (2) கிராமத்தலைவர் நீதிவிசாரணை

---

**Vavuniya South Mudaliyars**
Selvadurai Thampiappah Elankayar: District Mudaliyar, Vavuniya South
Ampalavanar Canapathippillai (UU) District Mudaliyar Vavuniya South


**Vavuniya North Mudaliyars**
Rasasagarer, Sivasithampara Udaiyar, District Mudaliyar Vavuniya North.
Arumugam Canapathipillai ; (F) District Mudaliyar Vavuniya North
Chelliah Canapathippillai, (2) President Village tribunals

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**அத்தியாயம் - ஒன்பது**

# முல்லைத்தீவு நிர்வாகம்

1783ம் ஆண்டு தொடக்கம் முல்லைத்தீவை தலைநகராக்கி டச்சுக்காரரான தோமஸ் நாகெல் நிர்வாகம் நடத்தினர். பின்னர் ஆங்கிலேயர் ஆட்சிக் காலத்திலும் இவர் சிறிதுகாலம் நிர்வாகத்தை நடத்தியுள்ளார்.




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

1893 முல்லைத்தீவு மாவட்டம் ஏழு பற்றுக்களாக பிரிக்கப்பட்டிருந்தன.

| | | |
|---|---|---|
| 1. கரிக்கட்டுமூலை வடக்கு | } | கரைதுறைப்பற்று |
| 2. கரிக்கட்டுமூலை தெற்கு | | |
| 3. புதுக்குடியிருப்பு | | |

* மேல்காட்டப்பட்ட மூன்று பற்றுக்களும் கடற்கரையோரமாக அமைந்திருப்பதால் அவை கரைதுறைப் பற்று என் அழைக்கப்பட்டது.

4. முள்ளியவளை
5. கருநாவல் பற்று
6. துணுக்காய்
7. மேல்பற்று வடக்கு

1893 ல் 74 கிராமங்கள் முல்லைத்தீவு மாவட்டத்தில் இருந்தன.
ஜே.பி.எல். பக். 55.

---

The District of Mullaitivu is been divided in to Seven pattus.

| | | |
|---|---|---|
| 1. Karikaddumulai North | } | Maritime pattus |
| 2. Karikaddumulai South | | |
| 3. Puthukkudiyiruppu | | |

4. Mulliayavalai
5. Karunavalpattu
6. Tunukkay
7. Melpattu North.

The first three pattus, which are situated along the sea borde, are called the Maritime pattus
1893 Number of villages 74
JPL.p.55

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

1893 ம் ஆண்டு முல்லைத்தீவுக் காரியாலயத்தில் வழங்கப்பட்ட சம்பள விபரங்கள்.

முல்லைத்தீவு

| | ரூபா சதம் |
|---|---|
| தலைமைக் கிளார்க் | 1000.0 |
| மொழிபெயர்ப்பாளர் - சுதேச மொழி | 600.0 |
| மூன்று முதலிமார் தலா | 200.0 |
| ஏழு உடையார்கள் தலா | 120.0 |
| ஒரு அடப்பன் | 120.0 |

ஜே.பி.எல். பக்கம் -39

முல்லைத்தீவு மாவட்டத்திற்கு மூன்று முதலிமார் நியமிக்கப்பட்டனர். அதற்காகப் பின்வரும் பிரிவுகள் இணைக்கப்பட்டன.

முல்லைத்தீவு

1. கரைதுறைப்பற்று (மூன்று பற்றுக்களுக்கு 1 முதலியார்)
2. முள்ளியவளை மற்றும் மேல்பற்று வடக்கு
3. கருநாவல் பற்று மற்றும் துணுக்காய்

ஜே.பி.எல். பக்கம் -40

---

Mullaitivu

| | |
|---|---|
| Head Clerk | 1000.0 |
| Interpreter/ Native | 600.0 |
| Three Mudaliyars at | 200.00 |
| Seven Udaiyars | 120.00 |
| One Adappan | 120.00 |

The divisions are grouped under three District Mudaliyars as follows;

Mullaitivu

1. The Maritime Pattu
2. Mulliyavalai and Melpattu North
3. Karunaval Pattu and Tunukkay

JPL p. 40.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மேல்பற்று தெற்கைத் தவிர்ந்த ஏனைய 16 பிரிவுகளுக்கும் ஒவ்வொரு உடையாரும், 18 பொலிஸ் விதானையார் வவுனியாவிலும், 17 பொலிஸ் விதானையார் முல்லைத்தீவிலும் இருந்தனர். சிங்களப் பிரிவில் ஒரு ரட்டே மகத்தையாவும், இரண்டு கோறளைகளும், முன்று ஆராச்சிகளும் இருந்தனர்.

---

There is an Udaiyar for each division except Melpattu South, making sixteen in all, and there are eighteen Police Vidanes in Vavuniya and in seventeen in Mullaitivu. The Sinhalese have Ratemahatmaya, two Koralas, and three Arachchies.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## முதலிமாரின் கடமைகள் :

அனைத்து முதலிமாரும் பிறப்பு, திருமணம், மற்றும் இறப்பு பதிவுகாரராகவும் கடமையாற்ற அனுமதியளிக்கப்பட்டிருந்தது. இதற்கென கட்டணமும் அலவன்ஸும் பெறமுடிந்தது. ஒவ்வொரு பிறப்பு மற்றும் இறப்பு பதிவிற்கும் 25 சதம் அரசாங்கம் வழங்கியது. திருமணப்பதிவிற்கு சம்பந்தப்பட்டவர்கள் இரண்டு ரூபா ஐம்பது சதம் வழங்க வேண்டும். மரங்களை மேற்பார்வை செய்வதற்கும் அடையாளமிடுவதற்கும் குறிப்பிட்டளவு கட்டணம் பெறவும் அனுமதியளிக்கப்பட்டிருந்தது.

முதலியார்களும், ரட்டே மகத்தையாவும் கோறளைமாரும் மரண விசாரணைகளையும் நடத்தினர். வவுனியாவில் பன்னிரண்டுபேரும், முல்லைத்தீவில் ஏழுபேரும் இவ்வாறு கடமையாற்றினர்.

சேனைச் செய்கைக்கு அறிக்கையும் விண்ணப்பமும் (சட்டப்பிரகாரம் ஐம்பது சதம்) செய்யும் போது கட்டணம் அறவிட முடியும். முல்லைத்தீவில் பதிவுகளைப் பெறுவதற்கு இருந்த நடைமுறை யாழ்ப்பாணத்திலிருந்ததை விட வித்தியாசமானதாகும். *

(* காணியை விற்பனை செய்வதற்கு காணிப்பதிவுகளை தோம்பிலிருந்தோ அல்லது பாவனையாளர் பதவிலிருந்தோ விற்பனைக்கான காணிச் சொந்தக்காரர்பற்றிய விபரங்களைப் பெற்றுக் கொள்வதற்கான கட்டணமாகும்.) ஜே.பி.எல். பக்.-40

---

All Mudaliyars are Registrars of Birth, Marriages,and Deaths, and for performing duties in this capacity they are entitled to certain fees and allowances – for each birth or death entry 25 cents, payable by Government; and for registering a marriage Rs.2.50, payable by the parties. They are also entitled to fees for inspecting and marking timber,&c.

The Mudaliyars, the Ratemahatmayas, the Koralas, and some of the Udaiyars are Inquirers into deaths. There are twelve in Vavuniya District and seven in Mullaitivu.

The Udayars get fees for making reports on applications for chenas (50cents for each report under the rule), and in the Mullaitivu District "schedule fees", which are peculiar to the Northern Province.*

(*These are fees for giving to persons about to sell land extracts from the thombu, or commutation register , relative to the ownership of the lands which are to be sold) JPL. p. 40.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அரசினால் பொறுப்பேற்கப்பட்ட சொத்துக்களை விற்பனை செய்வதற்காக பிஸ்கால் அதிகாரிகள் நியமிக்கப்பட்டிருந்தனர்.

பொலிஸ் விதனைமார்கள் ஆராச்சிகள் ஆகியோருக்கு சம்பளம் வழங்கப்படுவதில்லை. கால்நடைகளை கொண்டு செல்ல விண்ணப்பம் செய்யும்போது வீதிச் சட்டத்தின்படி பிரிவு அதிகாரிகளால் கமிசன் (ஒரு சோடிக்கு 50 சதம்) அறவிடும் உரிமை வழங்கப்பட்டிருந்தது.

வவுனியாவில் ஒரு நொத்தரிஸூம் முல்லைத்தீவில் இரண்டு நொத்தாரிஸூம் கடமையாற்றினர். வவுனியாவில் இருந்தவர் மாவட்ட வீதிக் குழுவின் கிளார்க்காகவும் கடமையாற்றினார். ஜே.பி.எல். பக்.40

---

There are also Fiscal's officers, and hold sales of property seized under writ.

The police Vidanes and Arachchies are not paid a salary, but receive some remuneration in the shape fees for executing cattle vouchers (50cents for each set), and commission as division officers under the Road Ordinance.

There are a notary at Vavuniya and two at Mullaitivu, the former being also District Road Committee clerk. JPL page 39, 40

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## முல்லைத்தீவுப் பிரதேச முதலிமார்

முல்லைத்தீவுப் பிரதேச முதலிமாரைப்பற்றிய விபரங்களைக் குறிப்பிடும்போது தென்னமரவடியையும் குறிப்பிடவேண்டியுள்ளது. தென்னமரவடியில் இருந்த முதலிமாருக்கும் ஒரே காலப்பகுதியில் நியமனங்கள் வழங்கப்பட்டுள்ளன. குடும்ப உறவுகளும் உள்ளன.. ஓர் முதலியார் இரண்டு பிரிவுகளுக்கு நியமிக்கப்பட்டிருந்தால் அவர்களுடைய பெயர்கள் இரண்டு பிரிவுகளிலும் குறிக்கப்பட்டுள்ளன. இந்தப் பெயர்கள் வரலாற்றுக் குறிப்புகளில் அங்காங்கே குறிப்பிடப்பட்ட ஆண்டுகளுக்கேற்ப வரிசைப்படுத்தப்பட்டுள்ளன.

**கரிக்கட்டு மூலை**

| | |
|---|---|
| சேந்தையினார் | -1679-1697 |
| டொன் தியோகு புவிநல்ல மாப்பாணன் | -1697-1715 |
| டொன் தியோகு புவிநல்ல மாப்பாணன் | -1738 |
| டொன் தியோகு(அழகேசன்) புவி நல்ல மாப்பாணன் | -1762-1767 |

**முல்லைத்தீவு**

பண்டாரவன்னியன்(முல்லைத்தீவு—ஆட்சிக்காலம்ஆய்வுக்குரியது) -

| | |
|---|---|
| சின்னநாச்சி (முல்லைத்தீவு) | -1782 |
| கப்ரன் தோமஸ் நாகெல் | -1783-1784 |
| சின்னநாச்சி | -1785 |

(*கப்ரன் தோமஸ் நாகெல் வழங்கிய பொது மன்னிப்பையடுத்து 1785ல் முல்லைத்தீவு திரும்பியவர்)

**புதுக்குடியிருப்பு**

| | |
|---|---|
| திரிகயிலை | -1679-1697 |
| டொன் கஸ்பர் இலங்கை நாராயண முதலியார் | -1697-1715 |
| திசை விளங்கு நாயக முதலி | -1799 |
| **தியாகர் (திசைவிளங்கு நாயக முதலியாரின் மகன் அல்லது பேரப்பிள்ளை** | **-1799** |

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

* மேற்காட்டிய பிரிவுகள் பின்னர் கரைதுறைப்பற்றென மாற்றம் செய்யப்பட்டன. கரிக்கட்டுமூலை வடக்கு, தெற்கு, புதுக்குடியிருப்பு ஆகிய பகுதிகள் கரைதுறைப்பற்றாகும். கரிக்கட்டுமூலை வடக்கு முல்லைத்தீவைக் குறிப்பதாகக் கொள்ளலாம்.

**கருநாவல்பற்று**

| | |
|---|---|
| திரிகயிலை | -1679 -1697 |
| அம்பல வன்னியன் | -1697 |
| டொன் தியோகு புவிநல்ல மாப்பாணன் | -1697 -1715 |
| டொன் தியோகு புவிநல்ல மாப்பாணன் | -1738 |
| டொன் தியோகு(அழகேசன்) புவி நல்ல மாப்பாணன் | -1742 -1767 |

* கருநாவல்பற்றின் வடக்குப் பகுதி பின்னர் யாழ்ப்பாணத்தோடு இணைக்கப்பட்டதாக வரலாறுகள் தெரிவிக்கின்றன.

**முள்ளியவளை**

| | |
|---|---|
| குட்டிப்பிள்ளை | -1679 |
| டொன் பெரிய மெயினார் உடையார் | -1697 |
| டொன் கஸ்பர் இலங்கை நாராயண முதலியார் | -1697 -1715 |
| கந்தப்பர் மயிலாத்தை உடையார் | -1707 -1715 |
| டொன் கஸ்பார் இலங்கைக் காவல புவி நல்ல மாப்பாணன். | -1747 -1757 |
| இரணசூர இரணராஜா முதலியார் | -1757 -1760 |
| அமரக்கோன் முதலியார் | -1760 -1762 |
| டொன் தியோகு புவி நல்ல மாப்பாணன் | -1765 -1767 |

**மேல்பற்று-**

| | |
|---|---|
| டொன் கஸ்பர் இலங்கை நாராயண முதலியார் | -1697 -1715 |
| கந்தப்பர் மயிலாத்தை உடையார் | -1707 -1715 |
| டொன் கஸ்பார் இலங்கைக் காவல புவி நல்ல மாப்பாணன். | -1747 -1757 |
| அமரக்கோன் முதலியார் | -1760 -1762 |
| டொன் தியோகு (அழகேசன்)புவிநல்ல மாப்பாணன் | -1765 -1767 |
| எல்ல கவேத நல்லநாச்சி | -1767 - |

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**தென்னமரவடி**

| | |
|---|---|
| மரியசெம்பாத்தை | -1679 |
| டொன் சேதுகாவல வன்னியன் | -1697 |
| டொன் அதிரியலு இருமரபுந்துய்ய மாப்பாண வன்னியனார் | -1722-1738 |
| டொன் பிரான்சிஸ்கோ சண்முகப் பெருமாள் சேதுகாவல மாப்பாண வன்னியனார் | -1739-1745 |
| டொன் ஜுவான் சேதுகாவல மாப்பாண வன்னியன் | -1745-1765 |
| டொன் பிரான்சிஸ்கோ சேதுகாவல மாப்பாணர் | -1762 |

* மேற்குறிப்பிட்ட பெயர்கள் அனைத்திலும் அவர்களுக்கு பதவிகள் வழங்கப்பட்ட ஆட்சிக்காலத்தில் பெயர்களைப் பதிவு செய்தபோது கிறிஸ்தவப் பெயர்களைச் சேர்த்து பதிவு செய்தமை வெளிப்படுகின்றது.

பதவிகளைப் பெறுவதற்காக கிறிஸ்தவ சமயத்தை தழுவ வேண்டுமென்று அவர்கள் கட்டாயப்படுத்தப்பட்டும் இருக்கலாம்.

இவர்களில் சிலருடைய பெயர்கள் கிறிஸ்தவ மதத்தை சார்ந்ததாக இருந்தாலும் அவர்கள் தொடர்ந்தும் சைவ சமயிகளாகவே இருந்துள்ளனர். ஆனால் சிலர் கிறிஸ்தவ சமயத்தை தழுவியதையும் இங்கு குறிப்பிட வேண்டும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**அத்தியாயம் - பத்து**

# கரைதுறைப்பற்று முதலிமார் 1783 தொடக்கம்

அடங்காப்பற்றுப் (வன்னி) பிரிவில் கரைதுறைப்பற்றில் நிருவாகம் செலுத்தியோரின் விபரங்கள் வரலாற்றுக் குறிப்புகளில் இருந்து தொகுக்கப்பட்டுள்ளன.

| | |
|---|---|
| லெப்ரினற் (கப்ரன்) தோமஸ் நாகெல் | 1783-1784 |
| சின்னநாச்சி (முல்லைத்தீவு) | 1785 |
| * கப்ரன் தோமஸ் நாகெல்லின் பொது மன்னிப்பையடுத்து முல்லைத்தீவு திரும்பினார்) | 1785ல் |
| பண்டாரவன்னியன் (முல்லைத்தீவு) (ஆய்வுக்குரியது) | 1785 |
| திசைவிளங்கு மாப்பாண முதலியார் (புதுக்குடியிருப்பு) | 1799 |
| தியாகர் | 1799 |
| குமாரசேகர முதலியார் | 1803 ல் |

முல்லைத்தீவில் தூக்கிலிடப்பட்டவர்
குமாரசிங்க வன்னியன் பண்டாரவன்னியனின் சகோதரியைத் திருமணம் செய்தவர். நுவரவெவ வன்னியன் பரம்பரையைச் சேர்ந்தவர்.

1803 ஓகஸ்ட் 25 தொடக்கம்1803 ஓக்ரோபர் 31 வரை 1803.

பொன்னார் வன்னிச்சி

**வரலாற்றுத் தெளிவு**

☞ "யாழ்ப்பாண ஆட்சியில் இருந்தவர்கள் மத்தியில் "பண்டாரம்" என்பது பொதுப் பெயராகவே இருந்தது.. ஆகவே பண்டாரம் என்ற பெயரை உடைய ஒருவருக்கு வன்னியன் என்ற பதவி வழங்கப்பட்டுள்ளது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

☞ ஆங்கிலேயரை எதிர்த்த பண்டாரவன்னியனும் நுவரகலாவெவ குமாரசிங்க வன்னியனும் பின்வாங்கியதும் முல்லைத்தீவிலிருந்த குமாரசேகர முதலியாரும் ஏனைய வேறு சிலரும் கைது செய்யப்பட்டு தூக்கிலிடப்பட்டுள்ளனர். இது முதலிமார்களுக்குள் இருந்த போட்டி காரணமாக இடம்பெற்றது. குமாரசேகர முதலியாரும் ஏனையோரும் காட்டிக் கொடுக்கப்பட்டார்கள் என்பதில் சந்தேகமில்லை. வன்னி முதலிமார்களில் சிலர் ஆங்கிலேயருக்கு ஆதரவாக இருப்பதினால் 1803ல் தான் கைப்பற்றிய முல்லைத்தீவை விட்டு திசாவை குமாரசிங்க வன்னியன் வெளியேற வேண்டி ஏற்பட்டதாக பண்டாரவன்னியன் தெரிவித்ததாக கதிர்காமநாயக முதலியார் வன்னிக் கலெக்ரருக்கு 1810ம் ஆண்டு எழுதிய கடிதத்தில் தெரிவித்துள்ளார். ஜே.பி.எல்.பக். 19

☞ பண்டாரவன்னியனைக் காட்டிக்கொடுத்த கதிர்காமநாயக முதலியார் குறிப்பிட்டுள்ள வட்டுவாகல் என்ற இடத்திலிருந்து புவிநல்ல மாப்பாணரின் மருமகன் இருந்த வெள்ளி வாய்க்காலுக்கு (முள்ளிவாய்க்கால்) பயணம் செய்ய அரை மணித்தியாலமே செல்லும். வட்டுவாகலில் இருந்த ஓய்வு விடுதி புவி நல்ல மாப்பாணருக்கு சொந்தமானதாகும். வன்னியன் பதவியிலிருந்து நீக்கம் செய்யப்பட்ட பண்டாரம் (பண்டாரவன்னியன்) தனது மாமனாருக்குச் சொந்தமான வட்டுவாகல் ஓய்வு விடுதிக்குச் சென்றதையே கதிர்காமநாயக முதலியார் குறிப்பிட்டுள்ளார் எனக் கூறலாம். (பண்டார வன்னியன் வரலாறு—பாகம் 02)

---

* "The insurgents were subsequently "driven from Mullaitivu" and its neigbourhood by a detachment sent from Trincomalee under Captain Edward Madge of the 19th regiment, and Kumara-sekara Mudaliyar of Mullaitivu, and several others who were strongly suspected of treason were captured and executed. JPL.p.19

* "The execution opposite the Public Works Department compound off the road to Vadduvakallu is still known as "Tukkumaratadi" "Hanging Tree Place" though the tree has disappeared. His (Kumarasekar Mudaliyar) great grand son is the present Mudaliyar of the Maritime Pattus. JPL.P.19. -1895

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## நூறு வருடங்களுக்கு முன்னர் இருந்த தலைமைகள்

இலங்கையில் 100 வருடங்களுக்கு முன்னர் இருந்த தலைமைகளின் முழுமையான பெயர்ப்பட்டியல் 1835ம் ஆண்டு "சிலோன் அல்மனக்" பதிவுப்படி தரப்படுகிறது. இக்காலத்தில் ஒரு தாளில் தரப்படும் றெயில்வே நேர சூசி போல் பரம்பரை அலகுகள் குறிப்பிடப்படவில்லை. இது ஒரு சிவில் பட்டியலாகும். பெயர்கள் அனைத்தும் அல்மனக் பதிவில் உள்ளதுபோல் பதியப்பட்டுள்ளன. ஆனால் இந்தப் பெயர்களின் எழுத்திலக்கணம் இடங்களுக்கேற்ப வேறுபடும்.

1936ம் ஆண்டு ஜே.சி. வான் சன்டென் வெளியிட்ட நூலில் வன்னியில் 100 வருடங்களுக்கு முன்னர் அதாவது (1935 – 100 = 1835ம் ஆண்டளவில்) கடமையாற்றிய முதலிமார்களுடைய பெயர்கள் பின்வருமாறு தரப்பட்டுள்ளன.

| | |
|---|---|
| வேதாரணிய | - முதலியார், |
| கந்தவனம் | - முதலியார், |
| சேனாதிராய | - முதலியார், |
| கதிர்காமர் | - முதலியார், |
| அருணர் சரவணமுத்து | - முதலியார், |
| இன்னாசி சுவாம்பிள்ளை | - மணியகாரர், |
| கனகராயர் | - முதலியார் |

ஆகியோருடைய பெயர்கள் குறிக்கப்பட்டுள்ளன.

---

Following is a complete list of the Chieftains of Ceylon a Hundred years ago, taken from the "Ceylon Almanac" of 1835. It may stated here that the publication, unlike the 'attenuated descendant" of today which is issued as a single sheet like a Railway Time Table, fulfilled the functions of a combined "Civil List" official Directory and even newspaper. The spelling of proper names is reproduced exactly as in the "Almanac" even where the orthography of the same name is varied in different places;-

The Chieftains of Ceylon a Hundred years ago. (1935-100 =1835)

| | |
|---|---|
| Wedaraniya | - Modliar, |
| Candawanam | - Modliar, |
| Senaderaya | - Modliar, |
| Cadirgamer | - Modliar, |
| Aroner Sarewanamootoo | - Modliar, |
| Innasy Swampulle | - Maniagar, and |
| Canagarayar | - Modliar. |

(The Chieftains of Ceylon by J.C.Van Sanden - P.69)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**வரலாற்றுத் தெளிவு**

- 1811ம் ஆண்டுக்குப் பின்னர் "வன்னியன்" என்ற பதவி வழங்கப்படவில்லை என்பதையே இது குறிக்கின்றது. 1835 ம் ஆண்டு கடமையாற்றியவர்களுடைய பெயர் வரிசையிலே இன்னாசி சுவாம்பிள்ளை என்பவர் மணியகாரராக கூட வன்னிப் பிரதேசத்திற்கு நியமிக்கப்பட்டுள்ளமை தெளிவாகிறது.
- 1811 ம் ஆண்டு வன்னியர்களுடைய ஆட்சி வன்னிப் பிராந்தியத்தில் இருந்து அகற்றப்பட்டது என்று வரலாற்றாசிரியர்கள் பலர் குறிப்பிட்டுள்ளனர். இது அந்த ஆண்டுக்குப் பின்னர் "வன்னியனார்" என்ற பதவி யாருக்கும் வழங்கப்படவில்லை என்பதையே குறிக்கின்றது.
- நுவரகலாவிய பிரதேசத்தில் ஓய்வு பெற்றவர்களின் வரிசையில் மாத்தளை பிரிவைச் சேர்ந்த டி. என். டபிள்யு. எஸ். ஜயதிலக பண்டிட் முதியான்சே என்ற திசாவையின் பெயரும் பதியப்பட்டுள்ளது.
- ஏழு கோறளைப் பிரிவுகளைச் சேர்ந்த "சத் பத்து மகா வன்னி உன்னே" *நுவரவெவ சூரிய குமாரசிங்க முதியான்சே என்பவரும் ஓய்வு பெற்றுள்ளார்."
- பண்டார வன்னியனுடைய மைத்துனனான குமாரசிங்க வன்னியனையோ அல்லது அவரது பரம்பரையில் வந்த ஒருவரையோ இந்த விபரம் குறிக்கின்றது. 1803ல் பண்டாரவன்னியன் முல்லைத்தீவுக் கோட்டையைத் தாக்கி கைப்பற்றிய பின்னர் அதனை குமாரசிங்க வன்னியனிடமே ஒப்படைத்திருந்தான். குமாரசிங்க வன்னியன் முல்லைத்தீவில் 14 நாட்கள் தங்கியிருந்தான். திருகோணமலையில் இருந்து வந்த ஆங்கிலப் படையினர் முல்லைத்தீவைத் தாக்கிய போது தோல்வியடைந்து அங்கிருந்த பீரங்கிகளை இழுத்துக் கொண்டு பதவியாப் பக்கம் சென்று தப்பியுள்ளான்.
- மீண்டும் 1814 ம் ஆண்டு முல்லைத்தீவுக்குத் திரும்பிச் சென்று தனது அதிகாரத்தை நிலைப்படுத்த முயன்றுள்ளான். முடியாமல்

---

* (சத் பத்து என்றால் ஏழு பற்றுக்களைக் குறிக்கும் சிங்களச் சொல்லாகும்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

போகவே நுவரகலாவெவ திரும்பியதாக வரலாறுகள் தெரிவிக்கின்றன. நுவரகலாவெவ திரும்பிய குமாரசிங்கன் மீண்டும் ஆங்கிலேயர்களால் வன்னியனாக நியமிக்கப்பட்டான். ஆனால் அவன் நடத்திய கொடூரமான ஆட்சி காரணமாக 1815ம் ஆண்டு பதவி நீக்கம் செய்யப்பட்டுள்ளான்.

☞ கண்டி அரசனின் உத்தரவு காரணமாக குமாரசிங்க வன்னியன் முல்லைத்தீவிலிருந்து நுவரகலாவெவவிற்கு திரும்பியமை வன்னியனார்களுடைய அதிகாரமும் பதவியும் அடங்காப்பற்றிலிருந்து முழுமையாக நீக்கப்பட்டமையையே எடுத்துக் காட்டுகிறது.

☞ இதேபோல மன்னார் மாவட்டத்திலும் முதலிமார் ஓய்வு பெற்றுள்ளனர்

☞ யாழ்ப்பாணத்திலும் மணியகாரர் பலர் ஓய்வு பெற்றுள்ளனர். இவர்களுள் யாழ்ப்பாணத்தில் முதலாவது கச்சேரி முதலியாராக நியமிக்கப்பட்ட பிலிப் றொட்றிக்கோ முத்துக்கிருஸ்ணா மற்றும் மணியகாரர்களாக இருந்த பல முதலிமார் ஓய்வு பெற்றுள்ளனர்.

**கரைதுறைப்பற்றுப் பிரதேசத்திலே இரண்டு முதலி குடும்பத்தினர் பிரபலம் பெற்றவர்களாயிருந்துள்ளனர்.**

ஒருவர் குமாரசேகர முதலியார். இவர் முல்லைத்தீவைப் பிறப்பிடமாகக் கொண்டவர்.

மற்றையவர் அம்பலவன்பொக்கணையைப் பிறப்பிடமாகக் கொண்ட K.U.தம்பையா முதலியார். இவருடைய தகப்பனார் குமாரு உடையார். முல்லைத்தீவிலே உடையாராக இருந்தவர்.

1918ல் தமிழில் எழுதப்பட்ட யாழ்ப்பாண வைபவ கௌமுதியில் உள்ள பெயர்கள் தமிழிலும் டச்சுக்காரான ஜே.சி. வான் சன்டென 1936ல் ஆங்கிலத்தில் எழுதிய The Chieftains of Ceylon என்ற பதிவேட்டில் இருந்த பெயர்கள் ஆங்கிலத்திலும் தரப்படுகின்றன.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## குமாரசேகர முதலியார் :

குமாரசேகர முதலியார் * முல்லைத்தீவிலே உயர்தரச் சைவ வேளாண் மரபிலே உதித்தவர்.

இவர் மகன் வேலாயுதபிள்ளை.

வேலாயுதபிள்ளையின் மகன் மயில்வாகன முதலியார்.

இவர் நெடுங்காலமாய் இங்கிலீஷ். அரசாட்சியிலே கிராம முதலியாராக இருந்து பெரும் புகழ் படைத்தவர் இவரது அன்னையார் திரிகோணமலையில் வன்னிய மரபைச் சார்ந்த சோமநாத வன்னியனாரர் குமரராகிய கந்த உடையாரின் புத்திரி பார்பதிப்பிள்ளை. இவர்களுக்கு மூன்று மகன்மாரும் ஒரு புத்திரியும் இருந்தனர். யா.வை.கௌமுதி பக்- 257.

வேலாயுதபிள்ளை மகன் மயில்வாகன முதலியாருடைய பிள்ளைகளின் விபரங்கள் :-

1. **இரத்தினசிங்க முதலியார்.**
   தலைமகனாகிய இரத்தினசிங்க முதலியார் முல்லைத்தீவுக் கிராம முதலியாராக நெடுங்காலமிருந்து நன் மதிப்புற்று இறந்தனர்.
2. **கந்தப்பர்** : ஓர் பிரபல வைத்தியராகவிருந்தவர்.
3. **கணபதிப்பிள்ளை** : என்னும் மூன்று புத்திரரும்
4. **வள்ளியம்மைப்பிள்ளை** : என்னுமோர் புத்திரியும் உளராயினர்.

**வள்ளியம்மைப்பிள்ளை** : முள்ளியவளைப் பகுதி கிராம முதலியாராக நெடுங்காலமிருந்து காலஞ்சென்ற வன்னிய சிங்க முதலியாருக்கு அன்னையாம்.

---

* இவரே பண்டாரவன்னியனுடன் சேர்ந்து இராஜத்துரோகம் செய்தாரென குற்றஞ் சுமத்தப்பட்டு 1803 ல் தூக்கிலிடப்பட்டவர்.
முல்லைத்தீவிற்கும் முள்ளியவளைக்கும் தனித்தனியாக கிராம முதலியார்கள் நியமிக்கப்பட்டிருந்தனர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## கணபதிப்பிள்ளை :

1828ம் ஆண்டு ஆவணி மாதம் 12ந் திகதி புதன் கிழமை பகல் ஜெனனமானவர். இவர் பலவித கீர்த்திகளாலும் நிறையப்பெற்று ஓர் அவதார புருடனென்று யாரும் வியக்க இங்கிலீஷ் தமிழ் என்னும் இரு பாஷைகளையுங் கற்று முல்லைத்தீவில் தபாலாபீசுக் கிளார்க்காகக் கடமை பார்த்து வந்தவர். சகல லட்சணங்களும் அமையப் பெற்ற புனிதவதியாகிய முருக உடையார் புத்திரி அகிலாண்டஅம்மை என்பாரை வதுவை செய்தவர்.

1858ம் ஆண்டில் கோட்டில் உபதுவிபாஷிகாரராகவும் 1860ல் கச்சேரிச் சிறாப்பராகவும் , 1864ல் கச்சேரிப் பிரதம லிகிதராகவும் உயர்த்தப்பட்டு உயர்ந்த வேதனம் பெற்று வந்தனர். இவர் சிதம்பரம், சீர்காழி, மதுரை முதலிய திருச்சேத்திரங்களைப் பலமுறை தரிசித்துப் பணிந்த பெரும் பத்திவயிராக்கியமுடையவர்.

முல்லைத்தீவிலுள்ள வீரகத்திப்பிள்ளையார் கோவிற் திருப்பணியை முடிப்பித்தவர். இவர் மனைவியார் அகிலாண்டம்மையார் சிவபதமடைய, இரண்டாந்தாரமாய் வேலாயுதர் புத்திரி சின்னப்பிள்ளை என்பவரை மணமுடித்துப் பின் அரசசேவையினின்றும் இளைப்பாறி 1897 ஆண்டில் சிவகதியடைந்தார்.

கணபதிப்பிள்ளைக்கு முதற்றாரத்துப் புத்திரர் எழுவர். (புத்திரி ஒருவர்)

1. **செல்லையாபிள்ளை** : இவர்களுள் மூத்தவர் தற்போது (1918) கிராமக் கோர்ட்டு நீதிபதியாயிருக்கும் செல்லையாபிள்ளை.
2. **வல்லிபுரம்பிள்ளை.** : திரிகோணமலையில் சுகாதார சங்க லிகிதராயிருக்கும் (1918)
3. **பார்வதிப்பிள்ளை.** : நொத்தாரிசு மயில்வாகனம்பிள்ளை மனைவியார்
4. **ஆறுமுகம்பிள்ளை.** : கணுக்கேணி இஞ்சினீர்க்கிளாக்
5. **ஆறுமுகம் கணபதிப்பிள்ளை** : வவுனியா வடக்கு மாவட்ட முதலியார்.
6. **அம்பலவாணபிள்ளை**: முல்லைத்தீவு கச்சேரி உபதுவிபாஷிகராகிய (வவுனியா தெற்கு மாவட்ட முதலியாராகவும் இருந்தவர்.)
7. **சிவசிதம்பரப்பிள்ளை**: இங்கிலாந்து சென்று வைத்திய சோதனையில் சித்தியடைந்து சகலராலும் நன்கு மதிக்கப்பெற்று மட்டக்களப்பு புளியந்தீவு அரசாட்சி வைத்தியசாலையில் டக்றராய் விளங்கும்
8. சிவபதமடைந்த **பொன்னுத்துரைப்பிள்ளை.**

(7)* **சிவசிதம்பரப்பிள்ளை** விவாகஞ் செய்தது, இணுவில் பேராயிரமுடையான் வழித்தேன்றலான **திரிபுரசுந்தரி** அம்மையை ஆகும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**திரிபுரசுந்தரி** அம்மையின் பரம்பரை கீழ்வருமாறு தரப்பட்டுள்ளது..

சந்திரவர் மகன் கதிர்காமர் மகன் முருகேசருக்கும், நவாலி இருமரபுந்துய்ய கதிர்காம முதலியார்

↓

மகன் வன்னியசிங்க முதலியார்

↓

மகன் கதிர்காமர்

↓

மகன் வினாசித்தம்பியார்

↓

புதல்வி காதலிப்பிள்ளைக்கும்

↓

புத்திரராயுள்ள வட்டுக்கோட்டை துணைவாசரான டக்றர் கைலாயபிள்ளை அவர்களுக்கும்,

↓

பெரிய தம்பியார் மகன் இஞ்சினீர் சபாபதிப்பிள்ளை

↓

மகள் அலைமேல் அம்மையார்க்கும் இரண்டாம் புத்திரி **திரிபுரசுந்தரி** அம்மையாகும்.

மேற்படி டக்றர் கைலாயபிள்ளையவர்களின் முதலாம் புத்திரி பகவதி அம்மையை, விவாகம் செய்தது. இச்சரித்திரத்தில் முன் காட்டப்பட்டிருக்கும் பேராயிரமுடையான் வழித் தோன்றலான பிறக்ரர் பெருமாள்பிள்ளை. மூன்றாம் புத்திரி இரத்தினம்பாளை விவாகஞ் செய்தது, அராலி இரகுநாதர், கொற்றர். ஐயம்பிள்ளை ( வண்ணை)

சின்னையா மகன் டக்றர் துரையப்பாபிள்ளை. இவருடன் பிறந்தோர், வண்.தாமோதரம்பிள்ளை,
சபாபதிப்பிள்ளை மனைவி முத்துப்பிள்ளை,
வோறஸ் டிப்பாட்மென்றுக் கெற் கிளார்க்கு கனகரத்தினம்,
றிச்சிஸ்றார் ஆபிசில் வேலையாயிருக்கும் சபாரத்தினம்,
வண்.மேற்கு உடையார் ஐயம்பிள்ளை,
கொழும்பு ரேகில் வேலையாயிருக்கும் மாணிக்கவாசகர்.

யா.வை.கௌமுதி பக்கம் - 257-258

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆங்கில நூலின் பதிவுகளின்படி கரைதுறைப்பற்று முதலிமார்

மயில்வாகன வேலாயுதர் - மாவட்ட முதலியார் -கரைதுறைப்பற்று
வேலாயுத ரட்ணசிங்க மயில்வாகன (4)- மாவட்ட முதலியார் -கரைதுறைப்பற்று

* 1890 ம்ஆண்டு எழுதப்பட்ட வாரக்குடி ஒப்பந்தத்தில் கையொப்பமிட்ட முதலியாரின் பெயர் பின்வருமாறு குறிப்பிடப்பட்டுள்ளது.
மயில்வாகன வேலாயுத ரட்ணசிங்க (GU) மாவட்ட முதலியார் - கரைதுறைப்பற்று

Maritime Pattu Mudaliyars (The Chieftains of Ceylon)

Mailvahana Velauther - District Mudaliyar - Maritime Pattus
Velautha Retnasingha Mailvakana (4) District Mudaliyar - Maritime Pattus

Mylvakana Velautha Retnasingha, (GU)District Mudaliyar - Maritime Pattus
(1890 accoding to the Varakkudi agreement)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## K.U. தம்பையா முதலியார். (முல்லைத்தீவு)
## (குமாரு உடையார் தம்பையா முதலியார்)

"இவர் முல்லைத்தீவைச் சேர்ந்த அம்பலவன்பொக்கணை என்னும் இடத்தைச் செனன ஸ்தானமாயுடையவர். இவர் கண்ணியமுள்ள உயர் குடும்பத்தைச் சார்ந்தவர். இவர் தந்தையார் அடியடியாய்ப் பெரும் முதலிப்பட்டத்தை பறங்கியர், ஒல்லாந்தர், காலத்திற் பெற்றுள்ளவர்க்கு வழித் தோன்றலாய், **முல்லைத்தீவுப் பகுதியில் உடையாராயிருந்த குமாரு உடையார்.**

மேற்படி தம்பையா முதலியார் விவாகம் செய்தது, குமிளமுனை சரவணமுத்துப் புலவர் புத்திரியை. **முதலியார் முன் உடையாராய்ச் சிலகாலம் வேலைபார்த்து தற்போது (1918) மணியகாரனாயும், டிஸ்திறிக் முதலியாராயும் JPUPM எனும் பட்டங்களைப் பெற்றவராயும்** விளங்குகின்றனர். இவர் பரோபகார சிந்தையும், மதநைட்டிகம், மத பரிபாலனனோபகாரமுமுடையவர், சர்வ சனங்களுக்கும் முல்லைத்தீவுப் பகுதியிலே ஒரு தந்தைபோலப் பாரபட்சமின்றி நடக்கும் தண்ணளி படைத்தவர்.

முல்லைத்தீவு வீரகத்திப்பிள்ளையார் கோயிலின் மானேசர்.

இவர் ஏக புத்திரியே உடுப்பிட்டியில் பிரபல சுதேச வைத்தியர் ஆறுமுகம் மகன் திருஞானசம்பந்தரின் மனைவி. இம்மாது சிவகதியடைந்தனர்.

இவர் ஏக புத்திரனே தற்போது பிரசித்த நொத்தாரிசும், நியாயதுரந்தரருமாயிருக்கும் **சபாரத்தினம்**..
இவர் வதிரியிலே உயர்குலப் பிரபுவாயிருந்த சதாசிவம் சந்திரசேகரர் மகன் சதாசிவத்தின் புத்திரியை விவாகஞ் செய்தவர்". ( யா.வை. கௌ. பக்கம் 239 -1918.)


**K.U. தம்பையா முதலியார்** வகித்த பதவிகள் உடையார், மணியகாரன், டிஸ்திறிக் முதலியார் JPUPM ஆகியன.

T.M.சபாரத்தினம் முதலியார் (முல்லைத்தீவு) இவர் தம்பையா முதலியாரின் ஏக புத்திரனாகும். இவர் அரச கழக உறுப்பினராகவும் இருந்தவர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**கனகசபாபதி, ஆறுமுகம்** : பிறப்பு - 1882 : 1934 முதல் கரைதுறைப்பற்று மாவட்ட முதலியார்.

Kanagasababathy, Arumugam Mullaitivuu ; born 1882 : District Mudaliyar, Maritime Pattus, : 1934 Appointed District Mudaliyar, Maritime Pattus, Mullaitivu



A. KANAGASABAPATHY,
District Mudaliyar, Nainativu Pattus,
Mullaitivu.

**கனகசபாபதி முதலியார்**

இவருடைய அலுவலகப் படத்தின் கீழ் நயினாதீவுப் பற்று முல்லைத்தீவிற்கு மாவட்ட முதலியாராக இருந்ததாக குறிக்கப்பட்டுள்ளது. கரைதுறைப்பற்று என்பதே இவ்வாறு குறிக்கப்பட்டிருக்கலாம். ஏனெனில் குறிப்புகளில் கரைதுறைப்பற்று என சரியாக குறிக்கப்பட்டுள்ளது.

*Note : His names was registered as A.Kanagasabapathy, District Mudaliyar, Nainativu Pattus, Mullaitivu.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கரைதுறைப்பற்று முல்லைத்தீவு மாவட்ட முதலியாராக இருந்த ஆறுமுகம் முதலியார் மகன் கனகசபாபதி முதலியார் முள்ளியவளையைச் சேர்ந்த நூலாசிரியருக்கு 1965ல் வழங்கிய சான்றிதழ் அவருடைய விபரங்களைப் பெறுவதற்காகத் தரப்படுகிறது

A.M.கனகசபாபதி முதலியார் Retired Distirct Mudaliyar / Mullaitivu.
**ஆறுமுகம் முதலியார் மகன் கனகசபாபதி முதலியார். முல்லைத்தீவு மாவட்ட முதலியாராக இருந்து ஓய்வு பெற்றவர்.**

உ

**Mudaliyar A. M. KANAGASABAPATHY, J. P., U. M.**
*Retired District Mudaliyar,*

*Mullaitivu* 26.7.1965
(Ceylon)

This is to Certify that Arunasalan Sellodevai of Mulliyavalai is known to me. He belongs to a respectable family. He is reliable, intelligent and bears a good character. He is a Ceylonese.

A M Kanagasabapathy

Letter from the Retired District Mudaliyar Mullaitivu in 1965 to the Author.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**அத்தியாயம் - பதின்னொன்று**

# மன்னார் - முதலிமார்

மன்னார் மாவட்டத்தில் அந்நியர் ஆட்சிக்காலத்தில் இருந்த பதவிகள்:

| | | |
|---|---|---|
| அதிகாரம் | : | Adikar |
| முதலியார் | : | Mudaliyar |

மன்னார் மாவட்டத்தில் அதிகாரம் அல்லது அதிகார் (Atikars) என்ற பதவிகள் புழக்கத்தில் இருந்துள்ளன. முத்துத்தம்பி சீமான்பிள்ளை 1897ம் ஆண்டு மன்னார் கச்சேரி முதலியாராக இருந்து 1916ல் மன்னார் தீவுகளுக்கு மாவட்ட அதிகாரமாக நியமிக்கப்பட்டுள்ளார்.

மன்னார் முதற் கணக்கப்பிள்ளையாகிய டொன் மனுவல் இராசகாரிய மானா முதலியார் உத்தியோகம் இளைப்பாற, அவர் மருகனாகிய மானிப்பாய் வெள். வேலாயுதன் சுவான் இராமநாதன் அவ்வுத்தியோகத்திற்கு, கி.பி. 1761 ல் ஆகஸ்து மீ 10 ந் திகதியில், டொன் சுவான் இராசகாரிய இரத்தினசிங்க முதலியார் என்னும் பெயருடன் நியமனமான பொழுது, சாதிவரிசைகளுடன், அரசவூழியமில்லாது 6 அடிமைகள் கொடுக்கப்பட்டன.

---

* "டொன்" என்ற பட்டப் பெயருடன் முதலியார் உத்தியோகம் வழங்கப்பட்டமையால் இவர்களுடைய பரம்பரையினர் போர்த்துக்கேயர் காலத்திலிருந்து முதலியாராகக் கடமையாற்றியதாகக் கொள்ளலாம்.(ஆய்வுக்குரியது.)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**மன்னார்-பூநகரி**

| | |
|---|---|
| டொன் கஸபர் இலங்கை நாராயண முதலி | -1679-1692 |
| டொன் கஸ்பர் நிச்சய சேனாதிராயன் (யானை பிடிக்கும் தலைமை) | -1692-1697 |
| டொன் கஸ்பர் நிச்சய சேனாதிராயன் பனங்காமம் -அயிலாந்தி) | -1697-1715 |
| டொன் மனுவல் ராசகாரியர் மானா முதலியார் | -1761 வரை |
| டொன் ஜுவான் ராசகாரிய ரட்ணசிங்க முதலியார் | -1761 பின் |
| குமாரசிங்க முதலியார் | -1800ல் |
| முத்துத்தம்பி சீமான்பிள்ளை | -1897பின் |
| மாதோட்டத்து இராஜேந்திர முதலி | - |

*டொன் ஜுவான் ராசகாரிய ரட்ணசிங்க முதலியாருடைய இயற் பெயர் வெள்ளாள வேல்ராயன் ராமநாதன் என்பதாகும்

**விடத்தல்தீவு :**

☞ மன்னார் பகுதியில் இருக்கும் விடத்தல் தீவு அந்நியராட்சியில் முக்கியமான அலுவலகங்கள் இயங்கிய இடமாகும். அங்கு இருந்த துறைமுகத்தினூடாக ஏற்றுமதி இறக்குமதி இடம் பெற்றன. முத்துக்குளிப்பு நடைபெறும் இடத்திற்கு அண்மையில் இருந்தமை இதற்கான முக்கிய காரணமாகும்.

☞ விடத்தல் தீவு அலுவலகங்களில் கடமையாற்றியவர்களில் அநேகருக்கு முதலியார் பட்டம் வழங்கப்பட்டிருந்தமையும் குறிப்பிடத்தக்கது. இங்கு முதலிமாராகக் கடமையாற்றியவர்கள் விடத்தல் தீவு அலுவலகங்கள் மூடப்பட்டதும் வவுனியாவிற்கு இடம்மாறியதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

☞ விடத்தல் தீவு துறைமுகம்பற்றியும், அலுவலகங்கள் பற்றியும் தனியாக ஆய்வு செய்தல் அவசியம். விடத்தல் தீவு பற்றிய வரலாற்றுக் குறிப்புகளில் உள்ள சில விடயங்கள் ஆதாரத்திற்காக இங்கு தரப்படுகின்றன.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

1810 ம் ஆண்டு பிரிங்களி என்றழைக்கப்பட்ட பெருங்களி மாவட்டம் அல்லது பொதுவாக எல்லோராலும் அழைக்கப்பட்ட 'வேற்றல்தீவு மாவட்டம்'(விடத்தல்தீவு) மற்றும் விடத்தல்தீவு துறைமுகமும் மன்னார் கலெக்ரரிலிருந்து தனியாக்கப்பட்டு வன்னியோடு சேர்க்கப்பட்டது. இந்த மாற்றம் கலெக்டரின் சிபார்சுக்கமைய ஒகஸ்ட் மாதம் முதலாம் திகதி தொடக்கம் நடைமுறைப்படுத்தப்பட்டது. அதற்கு முன்னர் வன்னிக் கலெக்ரருக்கு விடத்தல்தீவில் எந்தவிதமான தொடர்பும் இருக்கவில்லை. ஆனால் விடத்தல் தீவிலிருந்த நெற்களஞ்சியசாலையில் மட்டும் நெல்லை களஞ்சியம் செய்து வந்தார். ஜே.பி.எல்.பக். 30

---

In 1810 the District of Pringally (Perunkali), or, "as it is commonly called, the district of Werteltivu" (Vidattaltivu) and the port of Vidattaltivu were separated from the Mannar Collectorate and attached to that of the Vanni. This seems a curious arangement, but under the Dutch Vidattaltivu had belonged to Vanni, and the reversion to this state of things was recommended by the Collector. The change was effected from August 1st. Before that the Collector of the Vanni had no connection with Vidattaltivu, exept the use of the godowin there for storing paddy. JPL p. 30.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

விடத்தல்தீவில் இருந்த வதிவு நீதவானாகப் பதவி வகித்தவர் 'கடல் சுங்கப்பிரிவிற்கு கலெக்டராக' இருந்தவர் வன்னிக் கலெக்ரருக்கு உதவியாளராகவும் இருந்தார். இவர் தனது மேற்பார்வையின் கீழ் வருமானக் கடமைகள், குத்தகை, வாடகை விற்பனை, கலெக்டர் இல்லாத நேரங்களில் மேற்பார்வைக்காக நாட்டுவலம் வருதல் போன்றவற்றைச் செய்து வந்தார். ஜே.பி.எல்.பக்.30

The Sitting Magistrate of Vidattaltivu, who was also "Collector of the Sea customs:, became subordinate to the Collector of the Vanni, and in addition to holding these officers he acted as his assistant, performing revenue duties under his orders and superintendence, tithes and selling rents, and at times going on circuit for these purposes instead of the Collector. JPL p. 30.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மன்னாரிலிருந்த சில முதலிமாரின் விபரங்கள்:

### "மனுவேற்பிள்ளை இராசகாரியர் :-

இவர் மாதோட்டத்திலும் மன்னார் முதலியார் குடியிருப்பிலும், பேரும் புகழும் பெற்று போர்த்துக்கீசர் காலத்திலும் ஒல்லாந்தர் காலத்திலும் அரச சன்மானமுற்று வாழ்ந்த அதிகாரிமாரின் வழித்தோன்றல். கரம்பனில் பிரசித்திபெற்ற மனுஷருளொருவராயிருந்த குத்தகைக்காரன் சந்தியோகுப்பிள்ளையும் இவர் முன்னோர் இவர் பாட்டனாகும் மாதோட்டத்து இராசேந்திர முதலி, மாதகல் சந்திரசேகர முதலியின் மைத்துனியை விவாகம் முடிக்க மாதோட்டத்திலிருந்து வரிசை விருதுகளோடு கொம்பன் யானையிலேறிக் கோலாகலத்துடன் வந்தார் என்பர். இவ்விவாகத்தால் இராசகாரியர் குடும்பம் மாதகலின் உயர் குலக் குடும்பங்களோடுறவு பூண்டதாயிற்று.

சமயத்திற் கத்தோலிக்கராகிய இவர் வாலவயதில் கத்தோலிக்க குருவானவர் ஒருவருக்கு சீஷனாயமர்ந்திருந்து அவர் ஆசீர்வதித்துக் கொடுத்த சொற்ப பொருளை மூலதனமாகக் கொண்டு பலவகை வியாபாரங்கள் நடத்தி யாழ்ப்பாணப் பட்டணத்துள்ளாருள் அதி விசிட்டம் பெற்ற தனவந்தனும் கண்ணியவானுமாய் விளங்கினார்.

ஐரோப்பிய சில்ப்ப சாஸ்திரங் கல்லாதவராயினும் தம்மதியூகமொன்றினாலேயே தமக்கெனச் சமைப்பித்து முடித்த மெத்தை வீடும் "யூபிலி அவுஸ்" (Jublee House) என்னும் மாளிகையும் சில்ப்ப சாஸ்திர நிபுணர்களையும் அதிசயிக்கப் பண்ணத் தக்கவைகளாய் நகரமத்தியில் பிரகாசிக்கின்றன.

தேவபயமும் மேய்ப்பத்தியும் நிரம்பக் கொண்டவர். இதனால் தமது பெருஞ்செல்வத்தைத் தமது சமய விருத்திக்குரிய துறைகளிலம் ஏழை எளியவர்களைக் கைதூக்குவதிலும் வாரி இறைத்துக் கொண்டு வந்தனர். சம்பத்திரிசியார் கல்லூரி, யாழ்ப்பாணக் கத்தோலிக்க வாசிகசாலை என்னும் இரு ஸ்தாபனங்களும் இவரால் பெரிதும் ஆதரவு பெற்றவைகள்.

பட்டணத்தின்கண் விளங்கும் அடைக்கலமாதா கோவில், ஊர்காவற்றுறை தேவமாதா கோயில் முகப்புக்கள் இவர் பொறுப்பில் கட்டியெழுப்பப்பட்டன. முற்குறித்த ஆலயத்தின் கடைசி விழாக்கள் யாழ்ப்பாணத்திற் கத்தோலிக்க கோயில்களில் எங்குமில்லா விமரிசையோடு இவரால் வருடா வருடம் நடத்தப் பெற்றன. இவராற் திரவியகாயம் பெற்று வாழ்க்கைப்பட்ட அனாதைப் பெண்கள் பலர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பஞ்சம் கொள்ளை நோய்க் காலங்களில் இவர் குலம் சமயம் நோக்காது யாவர்க்கும் வழங்கிய தருமமோ அநந்தம்.

மனுவேற்பிள்ளை இராசகாரியர் நம் அரசினாலும் நன்கு மதிக்கப்பெற்றவர். பதினொரு முறை உப்புக் குத்தகையும், எட்டுமுறை சாராயக் குத்தகையும் வாங்கிச் சர்வசன அங்கீகாரத்தோடு கவண்மேந்து உத்தியோகஸ்தரின் சன்மானத்தையும் பெற்றவர்.

வண.விற்றன் சுவாமியார் யாழ்ப்பாணத்துக்கு றெயில் பாதை திறக்கும்படியாக எடுத்துக்கொண்ட பிரதம முயற்சியிலே இவரும் அன்னோருக்கு வலக்கை இடக்கையாக நின்றுதவியவர். எவ்வித பிரசித்த கொண்டாட்ட கொம்மிற்றியிலும் ஓர் அங்கத்தவராய் நின்றவர்.

1908ம் ஆண்டு பரமபதமடைந்தார். இவர் மூத்த மகன் தோட்டத்துரையும், லோக்கல் போட்டின் முதல் அங்கத்தவருள் ஒருவராய் நின்றவருமான சவரிமுத்து ராசகாரியா

இளைய புத்திரன் அத்வக்காத்து றேஜிஸ் ராசகாரியர்.
யாழ். வை. கௌமுதி (பக். – 250).

**இராசகாரியர் சிவசிதம்பர உடையார் என்பவர் வவுனியா வடக்கு மாவட்ட முதலியாராக கடமையாற்றியுள்ளார். இவருடைய குடும்ப உறவுகள் ஆய்வுக்குரியவையாகும்.** ஜே.பி.எல்.பக். 8.

## குமாரசிங்க முதலியார் : மன்னார் 1800ல்

மாதோட்டத்திலுள்ள நாவற்குளத்தில் இப்புலவர் வாழ்ந்தனர். இவர் பெயர் பெற்ற ஆயுள்வேத பண்டிதருமாயிருந்தமையால் வெகு செல்வாக்குடையோராயிருந்தனர். 1800 ம் ஆண்டு நோர்து தேசாதிபதியின் கீழ் ஆபரணவரிக்கு மாறாய்க் கலிபிலி யெழுப்பினாரெனக் குற்றஞ்சாட்டப்பட்டு கசையடி யடிப்பிக்கையில் இவர் உள்ளஞ் சுரந்து கன்னி மரியம்மாள் பேரில் ஆசு கவியாய்ச் சில பாடல்கள் சொல்லினர். (பா.ச.) யா.வை.கௌமுதி பக் - 166

---

Rasasagarer, Sivasithampara Udaiyar, District Mudaliyar Vavuniya North. J.C.Van Sanden Page .8.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அத்தியாயம் - பன்னிரெண்டு

# மட்டக்களப்பு - முதலிமார்

அடங்காப்பற்றுப் பிரதேசத்தில் வன்னியன் என்ற பதவி 1811 இல் ஒழிக்கப்பட்ட பின்னரும் மட்டக்களப்புப் பிரதேசத்தில் வன்னியர் என்ற பதவி முதன்மைப்படுத்தப்பட்டுள்ளமைக்கு பல ஆதாரங்கள் உள்ளன.

## அந்நியர் ஆட்சிக்காலத்தில் மட்டக்களப்பில் இருந்த பதவிகள்:

| | | |
|---|---|---|
| வன்னியர் | : | Vannia |
| முதலியார் | : | Mudaliyar |
| உடையார் | : | Udaiyar |
| கிராம நீதிபதி | : | Village Tribunals |
| போடி | : | Podi |

"கிழக்கு மாகாணத்தில் "வன்னியர்" என்பது அதியுயர் பதவியாக கணிக்கப்பட்டுள்ளது. உடையார் பதவி வகித்தவர்கள் வன்னியர்களாகப் பதவி உயர்வு பெற்று கௌரவ முதலியார்களாகவும் நியமிக்கப்பட்டுள்ளனர். சிலர் பரம்பரையாக முதலியார் பரம்பரையில் வந்தவர்கள் வன்னியர்களாக பதவி உயர்வு பெற்றுள்ளார்கள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**கனகசபை சி. வோல்ரர் :** மட்டக்களப்பிலே வன்னியனாகப் பதவி வகித்தவர்.
1898 பிறப்பு
1919ம் ஆண்டு இரண்டாந்தர அரச சேவை கிளார்க்
1932ம் ஆண்டு வன்னியராகப் பதவி உயர்த்தப்பட்டுள்ளார்.

**முகமட் அலி.மீரா லெப்பை**,:சம்மாந்துறைப் பற்று வன்னியன்.
1898. பிறப்பு
1923ல் நீர்ப்பாசன கிராமிய சபையின் தலைவர், பதில் வன்னியர் கரவாகுப்பற்று.
1925ல் உதவி வன்னியர், மண்முனைப்பற்று வடக்கு.
1928ல் பதில் வன்னிய முதலியார், மண்முனைப்பற்று வடக்கு
1929ல் வன்னிய முதலியார், பாணம பற்று.
1932ல் வன்னிய முதலியார், சம்மாந்துறைப்பற்று.

**உதுமா லெப்பை போடி.** : வன்னியர் அக்கரை மற்றும் நிந்தவூர் பற்றுக்கள்.

**(The Chieftains of Ceylon by J.C.Van Sanden - 1936.p.42)**

**குறிப்பு: இப்படிப் பலருடைய பெயர்கள் அந்த நூலிலே தரப்பட்டுள்ளன.**
**உதாரணத்திற்கு மட்டும் சில பெயர்களைத் தந்துள்ளேன்..**

---

Eastern Province, Cangasaby C.Walter, Vannia, Erravur and Koralai pattus born 1898.
1919 Clerk, Government Service, Class ii,
1932, promoted Vanniah .

Mohamed Ali Meera Lebbe, Vannia Sammanthurai Pattu. Born 1898.
1923 President, Irrigation Village Council; acted as Vannia, Karavaku Pattu;
1925, Assistant Vannia Manmunai Pattu North;
1928 Acted as Vannia Mudaliyar, Manmunai Pattu North;
1929 Vannia Mudaliyar, Panama Pattu;
1932 Vannia Mudaliyar Sammanturai Pattu.

Uduma Lebbe Podi, Vannia, Akkarai and Nindur Pattus;
(The Chieftains of Ceylon by J.C.Van Sanden - 1936.p42)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



Group showing Chieftains of the Eastern Province on the occasion of the visit to Ceylon of the late King George V. Standing on the extreme right is Mudaliyar S. S. B. Kumarakulasinghe, Kachcheri Mudaliyar, Trincomalie; Seated on extreme right is Mudaliyar J. Tambi Raja Muttiah; Chief Mudaliyar, Eastern Province; Seated on his right is Gate Mudaliyar K. C. B. Kumarakulasinghe, Chief Tamil Interpreter to His Excellency the Governor. The others in the group are Vanniah-Mudaliyars of the Eastern Province.

**கிழக்கு மாகாண முதலிமாரும் வன்னிய-முதலிமாரும் குழுவாக எடுத்த படம்.**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அத்தியாயம் - பதின்மூன்று

# வெளியீட்டுரைகள்

**லண்டன் கனகதுர்க்கை அம்மன் கோவில் வெளியீட்டு விழாவில்**

**நூல் அறிமுகம்:**

அடங்காப்பற்று (வன்னி ) வரலாறு பாகம் - 04

மாப்பாண வன்னியர் - மடப்பளி வன்னியர்.
(கி.பி.1625 -1800)

- மாதவி சிவலீலன் -

ஈழத்து வரலாறு பற்றிய அறிவும் ஆளுமையும் கொண்ட மதிப்புக்குரிய அருணா செல்லத்துரை அவர்கள் வன்னி வரலாற்றின் நான்காவது பாகமாக மாப்பாண வன்னியர் மடப்பளி வன்னியர் பற்றி ஆராய்ந்துள்ளார். அவருடைய தேடலின் வீச்சு நூலினைப் பெறுமதியாக்கியுள்ளது.

ஈழத்தைப் பொறுத்தவரை வரலாறுகள் ஆவணப்படுத்தப் படவில்லையேயெனும் உண்மை வலியைத் தருவதுண்டு. ஏன் பேணப்படவில்லையென்பதற்கான காரணங்கள் பல. அவற்றையும் மீறிக் கிடைக்கும் வரலாற்றை எவ்வித பக்கச்சார்பற்றும் ஆவணப்படுத்துகின்றவர்கள் கௌரவத்திற்குரியவர்களாகின்றனர். அந்தவகையில் அருணா செல்லத்துரை முக்கியமாகின்றார்.

தமிழர் ஆட்சிக் காலங்களில் செல்வாக்குப் பெற்றிருந்த வன்னி வளநாட்டின் வரலாற்றுண்மைகளைப் பாகம் பாகமாக எழுதி நூலுருவாக்கியுள்ளார். எம்மால் பெற முடியாமல், செய்ய முடியாமல் இருந்தவற்றை ஒருவர் எங்கள் கைகளுக்குள் கொண்டு வந்து தருகின்றபோது அவருக்கான மதிப்பு வார்த்தைகளாலும் செய்கைகளாலும் மட்டுமன்றி மனதளவிலும் உயர்வு பெறுகின்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வன்னியென்பது பொதுவாகக் காடு என்கின்ற மனோபாவத்தினைத் தருவதுண்டு. ஆனால் அதுவொரு செழிப்பானதும், எங்கும் கிடைக்காத வரலாற்றுத் தடயங்களையும் கொண்டதொரு பிரதேசமென்பது ஆச்சரியப்படத்தக்கதாகும். அதேசமயம் அரசர்கள் அரசோச்சியும் அந்நியர் தம் தேவைக்கேற்ப பயன்படுத்தியதுமான வளநாடு பிற்பகுதியில் காடு மண்டியதென்பது வேதனையானது. இவை யாவற்றையும் ஆசிரியர் ஆதாரங்களுடன் இங்கு விளக்கியுள்ளார்.

வன்னியர்கள் தமிழ் நாட்டிலிருந்து வந்தவர்கள் என்பதில் எவ்வித சந்தேகமுமில்லை. The Cult of Draupadi எனும் நூலில் ரங்காசாரி இதுபற்றிக் கூறும்போது, "விஜய நகர நாயக்கர் காலப் பகுதியில் வன்னியர் அரண்மனைகளில் போர் வீரர்களாகப் பணியாற்றி வந்தார்கள். அக்காலப் பகுதிகளிலேயே ஈழத்திற்கும் இடம்பெயர்ந்தார்கள். இவர்களுடன்தான் திரௌபதை வழிபாடு தொடங்கியிருக்கலாம்" என்கின்றார்.

வன்னியர் உண்மையில் இந்திய வம்சாவழியினர் என்றால் அங்கு வன்னி என்பதனைச் சமஸ்கிருதச் சொல்லாகப் பார்க்கின்றார்கள். அது நெருப்பு எனும் பொருளைத் தருகின்றது. அதாவது வன்னியர் யாகத் தீயில் இருந்து தோன்றியவர்கள் என்பது ஐதீகம். இந்நெருப்பு, வீரம், வேகம், கோபம், போன்ற கருத்துக்களைத் தரும். இதிலிருந்துதான் வீரவன்னியன், ருத்ரவன்னியன், வன்னிராசா போன்ற பெயர்கள் வந்ததாகக் குறிப்பிடப்படுகின்றன.

ஈழத்திற்கு இடம் பெயர்ந்தது போலவே தென் ஆபிரிக்கா, மலேசியா, சிங்கப்பூர், பிஜி போன்ற நாடுகளுக்கும் வன்னியர் போயுள்ளனர். போர் வீரர்களாக இருந்த காரணத்தால் இது அவர்களுக்குச் சாத்தியமாயிற்று.

வரலாற்றுச் சான்றுகளின்படி ஈழத்தமிழரின் பிரதேச அடிப்படையிலான "இறையாண்மை" கொண்ட அரசு வடபுலத்தில் கி.பி. 13ம் நூற்றாண்டில் ஆரியச் சக்கரவர்த்திகள் காலத்தோடுதான் ஆரம்பமாகின்றது. அக்காலத்திலும், பின்னரும் வன்னியர் ஈழத்தில் குறுநில மன்னர்களாக விளங்கியுள்ளனர். இவர்கள் ஏன் வந்தார்கள்? எப்படி வந்தார்கள் ? வாழ்வு முறைமை எத்தகையது? என்பது பற்றியெல்லாம் தகுந்த ஆதாரங்களுடன் நூலாசிரியர் இங்கு தொகுத்துள்ளார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பன்னிரண்டு அத்தியாயங்களில் இந்நூல் அமைந்திருக்கின்றது. அனைத்துக் கருத்துக்களும் ஆதாரத்துடன் வெளிக் கொணரப்பட்டுள்ளன. தேவைக்கேற்ப வரைபடக் குறிப்புகளும், ஆங்கில மூலங்களும், இணைக்கப்பட்டுள்ளதால் நூல் மேலும் கனதி பெறுகின்றது. நூலின் சாராம்சமாக அமைவது, வன்னியர்கள் தென்னிந்தியாவில் இருந்து வந்தாலும் ஈழத்தில் வன்னியர் பரம்பரை சிதைகின்றபோது ஆட்சி செய்த வன்னியர் வன்னியரல்லர். அவர்கள் வேறு சாதியினர் என்பதாகும். அதாவது பிற்பகுதியில் வன்னியன் பதவி மாப்பாண வெள்ளாளருக்கும் மடப்பளி வெள்ளாளருக்கும் கொடுக்கப்பட்டிருப்பதால் அவர்களே இறுதித் தமிழ் மன்னர்களாக இருந்துள்ளனர்.

கிடைக்கப்பெற்ற ஆதாரங்கள் போர்த்துக்கேயர் ஒல்லாந்தர் கையேடுகளாக இருக்கின்ற காரணத்தால், எழுதப்படாத எமக்கான வரலாறு நிறைய இருந்துள்ளது. அவற்றிலும் குறிப்பாக, அடங்காப்பற்று, பனங்காமம் என்பன அவர்களுடைய அதிகாரத்திற்குள் முழுமையாக இருக்காத காரணத்தால் விபரங்கள் பதியப்படாமல் விடப்பட்டுள்ளன. இந்த வரலாற்று உண்மையை ஆசிரியர் கூறும்போது, சற்று மனம் துன்பப்படத்தான் செய்கின்றது.

வன்னியர் ஈழத்தின் வடக்கு, தெற்கு, தென்மத்திய பிரதேசங்களில் ஆட்சி செய்துள்ளனர். எனவே ஈழத்தின் பல பாகங்களிலும் அவர்கள் ஆட்சி செய்த காரணத்தால் பிற்பகுதியில் தமிழ் வன்னிமைகள் போலவே சிங்கள வன்னிமைகளும் தோன்றின என்பதனை ஆதாரத்துடன் கூறும் ஆசிரியர், வடக்கில் இருந்து ஒரு பெண் திருமண பந்தம் காரணமாக "நுவரகலாவெவ:" போகும்போது , அவளுடன் 40, 50 குடிமைக் குடும்பங்களும் போயின. அவை பின்னர் சிங்களக் குடும்பங்களாக மாறினவெனக் கூறுவதனூடாகப் பல சிங்களக் குடும்பங்களின் ஆதிச் சந்ததி தமிழாக இருந்துள்ளதென நிறுவுகின்றார்.

ஈழமக்களின் மனோபாவத்தால்தான் அந்நியர் நாட்டினுள் புகுந்து மக்களை அடிமைப்படுத்தியுள்ளனர். குறிப்பாக வரட்டுக் கௌரவம், பதவி ஆசை, காட்டிக்கொடுப்பு, ஒற்றுமையின்மை என்பன முக்கியமானவை. அவற்றுள்ளும் நாட்டைச் சிதைத்து, வளம் அழித்து, 100 இறைசால் பணம் கொடுத்து "டொன்" பட்டம், பெற்றமை நகைப்புக்குரிய விடயமாகும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பதவி ஆசைகளும், காட்டிக்கொடுப்புகளும் நாட்டை எவ்வாறு சீரழித்தன என்பதற்குக் கண்டியரசன் ராசசிங்கனின் செயற்பாடுகள் உதாரணமாகவுள்ளன. அதேசமயம் யுத்த அனர்த்தங்கள் இன்று மட்டுமல்ல அன்றும் மக்களின் இயல்பு வாழ்க்கையைச் சீரழித்திருக்கின்றன. குறிப்பாக மன்னாரில் ஏறக்குறைய பத்து வருடங்கள் முத்துக் குளிப்பு நடைபெறவில்லை. வன்னியில் குளங்கள் பேணப்படாமல் அப்பிரதேசமெங்கும் காடுகள் பரவின. இவைபற்றிய கருத்துக்களை ஆசிரியர் தெளிவு படுத்தியுள்ளார்.

இந்நூலின் இன்னொரு சிறப்பம்சம், தொடர் ஆய்வுக்கு வழிவகுப்பதாகும். உதாரணமாக பனங்காம ஆட்சியாளர் பற்றிக் கூறும்போது, இது ஆய்வுக்குரிய விடயமென்கின்றார். இது போல பல இடங்களைத் தொட்டுக் காட்டுவதனூடாக ஆய்வாளர்களுக்குச் சந்தர்ப்பம் தருகின்றார்.

பண்டாரவன்னியன் திருமணம் செய்யவில்லை என்கின்றார்கள். ஆனால் பண்டாரவன்னியனின் மனைவிக்குப் பிரித்தானிய அரசு ஓய்வூதியம் கொடுத்ததாக மலேசிய தேசியப் பல்கலைக் கழகத்தைச் சேர்ந்த இராசநாயகம் குறிப்பிடுகின்றார். எக்கருத்தை நாம் ஏற்றுக் கொள்ளலாமெனும் சந்தேகம் ஏற்பட்டபோது, ஆசிரியர் பின்வருமாறு விளக்கம் தந்தார். "பண்டாரவன்னியன் காலத்தில் அவரது பிரதேசத்தில் கொலை செய்யப்பட்ட ஐரோப்பிய நாட்டு வைத்தியரொருவரின் மனைவி, 1807 ல் தனது சொத்துக்களையும் கணவனையும் இழந்ததாக பிரித்தானிய அரசிடம் முறையிட்டு ஓய்வுதியம் தரும்படி விண்ணப்பித்ததாக மட்டும் குறிப்பிடப்பட்டுள்ளது. இந்தத் தகவல் சிதைவடைந்திருக்கலாம். பண்டாரவன்னியன் 1811 ல் உயிரிழக்கும் வரை ஆங்கிலேயர்களால் பயங்கரவாதியாகப் பிரகடனம் செய்யப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது."

எனவே, இத்துறையில் ஆழ அறிவுடைய அருணா செல்லத்துரை அவர்களே இதற்குப் பதில் கூறும் தகுதியும் கொண்டவராவர்.

நிறைவாகக் கற்கவும் சிந்திக்கவும் தக்க வகையில் அமைந்த இந்நூலும் ஆசிரியரும் எப்போதும் பாதுகாக்கப்பட வேண்டியவர்கள். இது தமிழ்ச் சமூகத்தின் பணி. ஆசிரியரும் தொடர்ந்து தன் பணியில் மேன்மைபெற மனதார வாழ்த்துகின்றேன்.

மாதவி சிவலீலன்-

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## THE SPEECH DELIVERED BY MR V. P. LINGAJOTHY SOLICITOR ON THE 26.01.08 AT LONDON EALING KANAKA THURKKAI AMMAN TEMPLE AT ARUNA'S ADANKAPATTU (VANNI) HISTORY PART IV BOOK LAUNCH.

| | | |
|---|---|---|
| Name | : | History of Adankappattu (Vanni) - Part 4 |
| Author | : | Arruna Selladurai |
| Publication | : | Aruna Publication |
| Price | : | 12 $ (US Dollars) |
| Review by | : | **MR V. P .LINGAJOTHY Solicitor** |

History of Adankappattu (Vanni) - Part 4. "Mappana Vanniyar – Madappali Vanniyar"

Before I start about the book, I will briefly comment about the author, Mr.Aruna Selladurai needs no introduction to you Tamil audience. He has been a well known media personality and TV news anchor, as well as a producer of dramas, and now he has blossomed into a consummate writer-historian. It is only on the latter aspect of his talents that I will make some comments.

To those of you who are not entirely familiar with the history of Adankaappattuu (Vanni), I can tell you that it is a fact that no one has made a greater effort or taken a greater interest in documenting the history of Vanni as Aruna has, except perhaps for Mullaimani. Although it is Mr Mullaimani who wrote the first historical drama book on Pandara Vanniyan in the early 1960s and through this book introduced Vanni to the world, there were many inaccuracies in the characters in his drama which were not corrected or even detected before Aruna started to delve into this subject in greater detail.

As I understand, Aruna produced his first book entitled Pandara Vanniyan 1750-1811 in 2002. This book in my estimation breathed new life into the history of Vanni as never before. The book also for the first time attempted to accurately document the history of Pandara Vanniyan

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

and the Adankappattu Vanni as it should have been. Aruna identified the historic inaccuracies in Mullaimani's drama book and corrected them in his own version.

Before Aruna's book, many people believed that Pandara Vanniyan's brother was Kailaya Vanniyan and that Pandara Vanniyan was betrayed by Kakkai Vanniyan but it is an historic fact that Kailaya Vanniyan was a chieftain who ruled over Panangamam during the Dutch colonial period 1644-78 and not during the British period when Pandara Vanniyan was the chieftain of the same area. Not only that, Kakkai Vanniyan's period was even before Kailaya Vanniyan's period as we now understand he lived in Kayts in the Jaffna peninsula during the Portuguese period.

Mullaimani's book was in many respects nothing more than a fictitious drama based and set against the backdrop of Vanni history during the British colonial era.

However, Aruna has for the first time presented the history of Adankappattu Vanni with historical evidence supported by concrete documentary evidence and recorded anecdotal sources. This is a valiant attempt on Aruna's part to research many source materials before he wrote his books on Adankappattu Vanni history.

Part 1 of his book deals with Adankappattu (Vanni) before the Birth of Christ and Part 2 deals with the history of Vanni between1750-1811. This period corresponds with the period of Pandara Vanniyan. Aruna had published Part 2 of his book before he brought out Part 1. It is because of the significance of this period and to its relevance to today's contemporary politics that he decided to publish Part 2 before Part 1. I was involved in Part 3 of Adankappattu (Vanni) history which deals with the native chieftains of Vanni in the period 1750-1895. Since I come from the family of a Vanni chieftain, I paid particular interest to the native chieftains of Vanni. I use the adjective "Native" to distinguish those chieftains who hail originally from the traditional rulers such as the Mapanars from the Chola dynasty as opposed to the chieftains nominated by the European colonial powers. Aruna has made reference to the book "The Chieftains of Ceylon" by J.C.Van Sanden but I can

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

safely say that the chieftains mentioned in that book were those who were appointed originally by the Portuguese, Dutch and later British colonial authorities.

Different historians have different definitions about the origin of the word "Vanni". Some including Jaffna and the Sinhalese historians say that it comes from the Sanskrit word "Vanaya" meaning 'Jungle'. Hence the argument that Vanni means 'Jungle area'. However, Aruna has correctly argued in his books that Vanni means 'The territories ruled or controlled by the Vanni chieftains' who had originally come from South India round about the 12th century. The details of the number of Vanni chieftains who came over to Sri Lanka and the territories they ruled have been well documented in Aruna's books.

If I now turn to Aruna's Part 4 book which is being released now: this deals with the history of Vanni between1625-1800 through the Dutch period to the beginning of the British period. Aruna has researched the chieftains and the rulers who superseded the Vanni chieftains. I must also state that Aruna prefers the term Adankaappattu instead of Vanni. He has explained quite fervently in all his books his reasons for preferring this usage.

Vanni means "Areas or territories ruled by Vanni chieftains". There were Vannimais not only in the northern part of Sri Lanka but also in the East, North Central and Northwest. For some reason, in Trincomalee, in Batticaloa and in Puttlam, there have been 7 Vannimais. But according to Aruna, there were 10 Vannimais in the Northern mainland of Sri Lanka. Adankappattu means 'a rebellious province', in this case, the territory south of the Jaffna peninsula and north of Anuradhapura which refused to accept the overlord ship of the Jaffna and the Anuradhapura kingdoms. This is what Aruna describes in detail in his Part 4 book or for that matter in all his Vanni history books.

Part 4 of the book deals with the following subjects :

Chapter 1; deals with the origins of the Vanniyars. By making reference to the History of Jaffna by A. Muthuthambippillai and the Yalpana Vaipa Kowmuthi by Mr.K.Velupillai, the confusion that lingered hitherto

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

as to who the real Vanniyars were has been dispelled following the information gathered from the above sources. It was the assumption that all the Vanni rulers who ruled the Adankappattu territory before the British arrived were called Vanniyars. However, in this chapter, evidence has been presented to show that there were others who also held the title Vanniyars other than those who were members of the Vanni caste, particularly the Mappanars and the Madappalis.

The chapter also tells how the Mappanas and the Madappalis obtained the title Vanniyars. The Mappanas are from the Vellala caste who ruled Adankaappattu after the Vanniyars had returned to South India. The Madappalis on the other hand were initially given the title of Mudaliyars in the light of their powers to catch elephants and then subsequently through matrimonial connections became rulers in the Panankamam area. The Madappalis are also from the Vellala caste. There is evidence to show that there was rivalry between the two Vellala casts.

Chapter 2; describes the boundaries of Vanni and the migrations in various waves from South India. Furthermore it describes how the Vanniyars in the Sinhalease area evolved from the Tamil Vanniyars over a period of time as they migrated further south into the north central province. The chapter also details the matrimonial alliances between the Vellalas and the Vanniyars and how the strong caste feeling gradually died out due to these intermarriages and how both castes came to be under the heading of Vellala.

Chapter 3; deals with the Mappanas in Adankappattu who had originally come from Madurai in south India, particularly from the area known as Marunkur, and explores the settlements which they built.

Chapter 4; deals with the Portuguese period between 1505 and 1658 and details their "divide and rule" policy and their conversion to Catholicism strategy, particularly in the western coastal region Mannar district. During this period the chieftains assumed the "Don" title under the pressure of the Portuguese "divide and rule" strategy.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Chapter 5; deals with the relationship between the Portuguese and the Mappanas which clearly shows why names such as Don Thieogu Puvi Nalla Mappanan or Don Philip Nalla Mappanan arose. It also details incidents in which some Mappanas resisted the Portuguese Catholic influence. There is also a reference to Asisstant Vanniyan titles which clearly shows that the said titles came from the ruling colonial powers and not from the indigenous nobility.

Chapter 6; deals with the Dutch period from 1658 to 1795 and details the Dutch interest in commercial development alongside the traditional "divide and rule" policy of colonial powers with conversion to Protestantism now the new pressure. It explores the Dutch policy of demanding regular tributes and taxes, often in the form of tamed elephants, if the Vanniyars were to be allowed to continue to rule without interference. During this period the centre of power was largely in the Panankamam area. The chieftain who ruled this area, Kailaya Vannyian, is the most popular Vanniyan of the time because of his power and wealth. This chapter also deals with his relationship to Jaffna, particularly to the Poothathamby family.

Chapter 7; deals with the Madappalyars who had initially held positions of authority in Jaffna as Mudaliyars but were later nominated as Vanniyars in the Adankappattu area. Reference is made to the Kowmuthi to show that the Madappaly were originally related to the Tamil kings of Jaffna. According to the Yalpana Vaipavamalai, the word Madappally is derived from the word Maddapam meaning 'five hundred villages' and Aaluthal meaning 'protecting', hence 'protector of five hundred villages'.

Chapter 8; deals with the Mappanas and Madappalis in the Pannankamam area in the aftermath of Kailaya Vannian's rule as recorded in the memoir of the Dutch colonialist Ryclof van Goens. He records Don Philip Nalla Mappanan as the most formidable of all the chiefs in succession to Kailaya Vanniyan and the Kowmuthi details Don Philip's descendants down to Panda Vairamuthu who lived (1813-1901). I understand that Panda Vairamuthu's descendants lived in Pointpedro in the Jaffna peninsula who I have reason to believe had some relationship to my maternal grandmother's family.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Chapter 9; deals with the Dutch in Mannar. Since Mannar also formed part of Adankappattu, Aruna has collected information on the Dutch colonial rulers activities there. He deals in detail with the proselytisation of the natives to Protestant Christianity and various local personalities who collaborated with this policy. He also deals with various places of significance in the Mannar area, including Marutha Madu notable as a place of Catholic Marian pilgrimage.

Chapter 10; deals with the cultural influences of colonialism, particularly in terms of the adoption of various Portuguese and Dutch first names amongst the ruling families.

Chapter 11; deals with the strategies used by the Dutch to counter disaffection amongst the Vanniyars by conferring powers and privileges and includes accounts of various individual chieftains. Detailed information has been supplied here about the rule of Maria Sempathai between 1679 and 1697 in Thennamaravadi; she was a powerful Vannichi who rebelled against the Dutch and the chapter explains her capture and the legend that has her taken to the Dutch Headquarters in Colombo.

It also details the careers of Don Caspar Nitsinga Senathirajan and Don Theogu Puvi Nalla Mappanan who continued to trade locally and with south India without been taxed by the Dutch. Once again, Aruna makes use of original source material such as the writings of the Dutch Governor, Hendrick Becker in 1714 which provide documentary evidence for his explorations here and always ensures that his observations are firmly grounded. The chapter ends with the last Vannichi of Mullaitivu, namely Ponnar Vannichi who ruled this area in the 1840s during the British period

This book – and the other books in this series- are particularly useful for everyone from academic historians to the young generation of the Tamil Diaspora. Without learning about their forefathers, it is difficult for this younger generation to appreciate their culture and values and in that context, I commend this book to all for seeking to do so and for engendering a rekindled interest in our Tamil homeland heritage.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**லண்டன் ஈலிங் அம்மன் கோவிலில் நடைபெற்ற நூல் வெளியீட்டு விழாவில் கருத்துக்களம் நிகழ்வில் சமர்ப்பிக்கப்பட்ட கட்டுரை.**

# "மறைந்து போன வன்னி மாநகரங்கள்"

## -அம்பலவாணர் மயூரன்-

இன்று உலகளாவிய ரீதியில் காணப்படுகின்ற தேசிய இனங்கள் ஒவ்வொன்றுக்கும் வரலாறு, பண்பாட்டியல், பாரம்பரியம் உள்ளமை கண்கூடு. அந்த அடிப்படையிலே ஈழநாட்டின் நீண்ட நெடு வரலாற்றில் குறுநில மன்னர்களாக பிரித்தானியரது ஆட்சிக்கு முன் பல நூற்றாண்டு காலங்களாக நிலைபெற்றிருந்த அரசுகளே வன்னிமைகள் எனப்படுகின்றன. மானிய முறையிலான சமுதாய அமைப்புக்கள் நிலைபெற்றிருந்த காலத்தில் இலங்கையின் அரசியலிலும் பொருளாதார அமைப்பிலும் வன்னிமைகள் முக்கியத்துவம் பெற்றிருந்தனர். அத்துடன் முல்லை, மருதம், நெய்தல், பாலை, என்ற நான்கு நிலங்களையும் தன்னகத்தே கொண்ட பெருமை வன்னி மண்ணுக்கே சேரும்.

காலங்காலமாக வன்னி மண்ணில் மக்கள் வாழ்ந்தனர் என்பதற்கு பூநகரி மற்றும் கோணாவில் பகுதிகளில் கண்டெடுக்கப்பட்ட தொல் பொருட்கள் சான்றாதாரம் பெறுகின்றன. இவை பல நூற்றாண்டுகள் பழமை வாய்ந்ததாக உள்ளதும் குறிப்பிடத்தக்கது. அந்த வகையில் காலங்காலமாக வன்னிப்பகுதியில் வாழ்ந்து மடிந்த பல வன்னி மன்னர்களது இடங்கள் இன்னும் ஆய்வு செய்யப்படாது கைவிடப்பட்டுள்ளது. எனவே அந்த இடங்களை இனியாவது ஆய்வுகளுக்கு உட்படுத்த வேண்டும் என்ற நோக்கோடு இக்கருத்துக்களை உங்கள் முன் சமர்ப்பிக்கின்றேன்.

**கல்நீராவி மலை :**

ஏ 9 வீதியிலிருந்து பிரிந்து செல்லும் பழைய கண்டி வீதியில் கற்கிடங்கு-கரப்புக்குத்தி வீதியில் மரக்குத்தி எனுமிடத்திலிருந்து மூன்று மைல் கிழக்கே இருப்பது கல் நீராவி மலை. 100-150 அடி நீளமான மூன்று பாறைகளை அடுக்கி வைத்தால் எப்படியிருக்குமோ அப்படியுள்ளது அந்தமலை. அத்துடன் இந்த மலையில் மருதமரம், கோயில் இடிபாடுகள், கேணி என்பன உள்ளன.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**வெடுக்குநாறி மலை :**

நயினாமடுவிலிருந்து தென்கிழக்குத் திசை நோக்கி சுமார் மூன்று மைல் தூரத்தில் வெடுக்குநாறி மலை உள்ளது. இங்கிருந்துதான் பேராறு ஊற்றெடுத்து பாய்கின்றது. இவ்விடத்தில் கோயிலின் கட்டட இடிபாடுகளும், நீச்சல் தடாகமும், இயற்கையாக அமைந்த குகை ஒன்றும் காணப்படுகின்றன. நயினாமடு குளத்திற்கும் இந்த மலையிலிருந்தே தண்ணீர் வருகின்றது.

**கரும்புள்ளியான்:**

பாண்டியன் குளத்திலிருந்து ஒட்டங்குளமூடாக மல்லாவி செல்லும் வீதியில் கரும்புள்ளியான் என்னும் இடமிருக்கின்றது. இங்கு கோயில் கட்டட இடிபாடுகளும் கேணியும் காணப்படுகின்றன.

**கல்விளான் :**

துணுக்காய் கல்விளானிலும் கட்டட இடிபாடுகளும் கோட்டை இருந்ததிற்கான ஆதாரமும் காணப்படுகின்றன.

**குஞ்சுக்குளம் :**

மாங்குளத்திலிருந்து வவுனியா நோக்கி வந்தால் மன்னகுளத்திற்கும் மாங்குளத்திற்கும் இடையில் மேற்கு நோக்கி ஒரு வண்டில் பாதை செல்கின்றது. அதன் வழியே சுமார் ஒரு மைல் தூரம் சென்றால் குஞ்சுக்குளம் சந்தியை அடையலாம். அதற்கண்மையில் வானளவு வளர்ந்த ஆலமரம் உண்டு. அதற்கருகில் ஈமத்தாழிகள் உட்பட பல அழிபாடுகள் உள்ளன.

**கள்ளிக்குளம் :**

மாமடுவுக்கும் இளமருதங்குளத்திற்கும் இடையில் உள்ள கள்ளிக்குளம் என்ற இடத்தில் ஒரு பழைய பூர்வீகக் கிராமம் உண்டு. இங்கு பலர் ஆய்வுகளை மேற்கொண்டிருந்தாலும் அவை பூர்த்தி செய்யப்படவில்லை.

**நாகதாழி :**

வவுனியா புதூர் நாகதம்பிரான் கோயிலிலிருந்து மேற்குப் பகுதியில் சுமார் இரண்டு மைல் தூரத்தில் நாகதாழி என்னும் இடமிருக்கின்றது. இங்கு பல தாழிகளும் பழைய அம்மன் கோயிலும்,

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கட்டடச்சிதைவுகளும் உள்ளன. இங்கு பழமையை உணர்த்தும் தென்னை மரங்களும் உண்டு. இங்கிருந்த அம்மன் சிலையை எடுத்து வந்து குஞ்சுக்குளம் என்னுமிடத்தில் வைத்து வணங்குகின்றனர். அந்த இடமும் இன்னும் ஆய்வு செய்யப்படவில்லை.

**பாவாடைக்கல் :**

உடையார்கட்டுக் குளத்திலிருந்து தெற்குத் திசையில் சுமார் மூன்று மைல் தொலைவில் பாவாடைக்கல் என்ற இடமுள்ளது. இங்கு 100 அடி உயரமுள்ள குன்று ஒன்று உள்ளது. யாழ்ப்பாணத்திலிருந்த சங்கிலி மன்னனுக்குப் பயந்து பரராஜசேகரன் தன்னிடமிருந்த சேமதிரவியங்களை கொண்டு வந்து இங்கேதான் மறைத்து வைத்தான் என்று ஒரு கதை உண்டு.

**கோணாவில் :**

கிளிநொச்சியிலிருந்து திருநகரினூடாக அக்கராயன் செல்லும் வீதியில் கிட்டத்தட்ட ஐந்து மைல் தொலைவில் கோணாவில் இருக்கின்றது. இங்கு நாலு வருடங்களின் முன் சில ஈமத்தாழிகள் கண்டெடுக்கப்பட்டன. இது சுமார் 5000 ஆண்டுகளுக்கு முற்பட்டது எனக் கூறப்படுகின்றது. ஆனால் இவை இன்னமும் ஆய்வு செய்யப்படவில்லை. இதற்கு முன் பூநகரியிலும் ஈமத்தாழிகள் கண்டெடுக்கப்பட்டமை சுட்டிக் காட்டத்தக்கது.

**வவுனிக்குளம் :**

வன்னி மண்ணின் மிகப்பழைய இடங்களில் வவுனிக்குளம் பிரதேசமும் ஒன்றாகும். வவுனிக்குளத்தினை எல்லாள மன்னன் கி.பி. 3 ம் நூற்றாண்டின் ஆரம்ப காலத்தில் கட்டியதாக எச். பாக்கர் அவர்கள் சுட்டிக்காட்டியுள்ளார். மகாவம்சத்திலும், அனுராதபுரத்திற்கு வடக்கேயுள்ள பெலி வாவியை மறித்து எல்லாளன் குளம் கட்டியதாக குறிப்பிடப்பட்டுள்ளது. பெலி வாவியே பாலியாறு எனவும் பாலியாற்றுக்கு அருகில் உள்ள குளம் வவுனிக்குளம்தான் எனவும் பாக்கர் கூறியுள்ளார். இங்குள்ள சிவபுரம் சிவன் கோவிலும் மிகப் பழமை வாய்ந்ததாகும். வவுனிக்குளத்திற்கும் சிவன் கோயிலுக்கும் இடையில் ஒரு பெரிய கேணி ஒன்று காணப்படுகின்றது. இந்தக் கேணி ஒட்டுசுட்டான் தான்தோன்றீசுவரர் கோயில் கேணியைப் போலப் பெரியதாகும். இக் கோயிலை நளன் வழிபட்டதாக தல வரலாறு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கூறுகிறது. அத்துடன் வசபன் என்ற மன்னனால் (கி.பி.66 - 110) அமைக்கப்பட்ட பாலிநகர் வவுனிக்குளத்திற்கு அருகே இருந்ததாக கலாநிதி க.குணராசா அவர்கள் தனது "ஈழத்தவர் வரலாறு" (பக்கம்95) என்ற நூலில் குறிப்பிட்டுள்ளார். 1889 ஜூன் 8ல் இவ்விடத்திற்கு முல்லைத்தீவு உதவி அரசாங்க அதிபர் நெவில் விஜயம் செய்துள்ளார். கோயில்காடு என முன்னர் அழைக்கப்பட்ட சிவபுரம் சிவாலயத்தில் தலையில்லாத புத்தர் சிலை, இடுப்புடைந்த விஷ்ணுவின் சிலை, சிவலிங்கம் ஆகியனவற்றைக் கண்டதாகவும் குணராசா தனது நூலில் குறிப்பிட்டுள்ளார்.

அத்துடன் இந்தக் கோயில் சுற்று வட்டாரத்திலுள்ள கொல்லன்விளாங்குளம் பகுதியில் 1994ல் நாகதம்பிரான் கோயில் ஒன்றிருந்தமை கண்டுபிடிக்கப்பட்டது. அங்கே பல செங்கல் கட்டட இடிபாடுகளும் உள்ளன. இது விஷ்ணுவின் ஆலயம் எனப்படுகிறது. மேலும் கொல்லன் விளாங்குளத்திற்கு அண்மையில் உள்ள முதலியாகுளம் பிள்ளையார் கோயிலிலும் கட்டட இடிபாடுகள் உள்ளன. வவுனிக்குளத்திற்கும் பாண்டியன் குளத்திற்கும் இடையில் உள்ள இடதுகரை என அழைக்கப்படும் இடத்தில் (3ம் துருசடியிலிருந்து பாண்டியன் குளம் வரும் வழியில் உள்ள இத்திமரத்திற்கு அருகில் உள்ளது) தனியாருக்குச் சொந்தமான ஒரு கேணியும் கட்டட இடிபாடுகளும் உள்ளன.

இதேபோன்ற பல இடங்கள் வன்னியில் ஆய்வுக்குரியனவாக உள்ளன.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கவிதையில் ஓர் அறிமுகம்

-கோவிலூர் செல்வராஜன்-

முல்லைத்தீவு மாவட்டம்
முள்ளியவளை மண் தந்த ... ஒரு
முத்தான கலைஞன்
வன்னி மண்ணில்
கண்ணியம்மிக்க குடும்பத்தில் பிறந்து
தனித்துவமாய் தாய் மண்ணில் வாழும் - ஒரு
தமிழ்மகன்-
வன்னிமண்ணின் வரலாற்றை
பின்னி எடுத்து தமிழ் உலகிற்கு சொல்ல
உன்னிப்பாக உழைத்துக் கொண்டிருக்கும்- ஒரு
ஊடக உழைப்பாளி-
அடங்காப்பற்று-
பண்டாரவன்னியன் வரலாற்றை
புதிய பார்வையில் வடிவமைத்தவர்-
அடங்காப்பற்று வரலாற்றின் தொடர்ச்சியாக
மாப்பாண வன்னியர், மடப்பளி வன்னியர் வரலாற்றை
கோப்புக்குள் அடக்காமல் நூல் உருவில் கொண்டு வந்து
அடங்காப்பற்று வன்னி வரலாறு பாகம்-4 என்று வெளியிடும்
அருணா-செல்லத்துரை அவர்களைப் பாராட்டும்- தக்க
தருணமாக நான் இதை எடுத்துக் கொள்கிறேன்.

எழுபதுகளின் இறுதியில் தொடங்கியது
எனக்கும் அவருக்கும் இடையே சந்திப்பும்-நட்பும்
இலங்கை வானொலிதான் இருவருக்கும் கலைக்களம்....
இப்பொழுது நினைத்தாலும் என் நெஞ்சம் நந்தவனமாகின்றது.
அன்பும் அடக்கமும் அவரின் அடையாளங்கள்
அளவான பேச்சும் அமைதியான போக்கும்
ஆண்டவன் அவருக்கு அளித்த கொடைகள்.....
காலையில் தொடங்கி மாலைவரை... தன்
கடமையிலேயே கண்ணாயிருப்பார்-
கலைக்கூடங்களிலேயே காலத்தைக் கழித்தவர்-

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஒலி நாடாக்களும் ஒலிவாங்கிகளும்தான் - வாழ்க்கையின்
வலி தெரியாமல் அவரை வாழ வைத்திருக்கின்றன-
ஒலிப்பதிவு, நிகழ்ச்சித் தயாரிப்பு, அறிவிப்பு,
நெறியாள்கை - மற்றும்
மெல்லிசைப் பாடலாசிரியர், நாடக நடிகர்,
நாடக எழுத்தாளர், இயக்குனர்-என்று
பல பரிமாணங்களில் பயணித்தவர்-இன்று
அடங்காப்பற்று வன்னி வரலாறு பாகம்-4 வெளியிடும்
அருணா - செல்லத்தரை அவர்கள் பாராட்டுக்குரியவரே

நாடக ஒத்திகையின்போது நளினமாகவே இருப்பார்.....
பூடகமாகப் பேசி எங்களுக்குள் பொருளை உணர்த்திடுவார்
நாடா சுழலத் தொடங்கினால் Silence tape rolling-
Recording என்று சொல்வார்.... ஆஹா
எத்தனை நாடகங்கள்
எத்தனை ஒலிப்பதிவுகள்
அத்தனையும் அவரின் அயராத உழைப்பில்...
கச்சிதமாகவே காற்றலையில் மிதந்தன.....
அருணா செல்லத்துரை அவர்கள் பாராட்டுக்குரியவர்.

ஆடலும் பாடலும் கூட அவருக்கு அத்துபடிதான்
தேடலும் கூடலும் அவரின் தேவைகளாக இருக்கின்றன
அளப்பரிய சேவையை வன்னி மண்ணுக்காகச் செய்துவரும்
அண்ணர் அருணா செல்லத்துரை அவர்கள்
தமிழ் மண்ணுக்காகவும் வரலாறு தன்னை தயார்படுத்திக் கொண்டு
தரமான படைப்புக்களைத் தரவேண்டும் என்று
தாழ்மையாகக் கேட்டுக் கொள்கின்றேன்

ஒலிபரப்புத்துறையிலிருந்த ஒரு சிலர்தான்
படைப்பாளிகளாக பயனளிக்கின்றார்கள்-அதில்
அண்ணரும் இடம்பெறுவது எனக்கு மகிழ்ச்சியைத் தருகிறது.....
தாயகத்திலிருந்து வரும் தரமான படைப்பிலக்கியங்கள்- புலத்தில் வாழும்
தமிழரிடம் மகா வரவேற்பைப் பெற்று நிற்கின்றன-
காரணம் ஏன் தெரியுமா?

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அடிபாடுகளுக்கும், இடிபாடுகளுக்கும் இடையில்
அவஸ்தைப்பட்டுக் கொண்டு அவர்கள் கொடுக்கும் படைப்புக்கள்
வியக்கத்தக்கவை, விதந்துரைக்கத்தக்கவை -
நானும் ஒரு படைப்பாளி என்ற வகையில்
ஈழத்தமிழ் படைப்பாளிகள் படும் கஸ்டம் நன்கு புரிகிறது
அந்த வகையில் -
அண்ணர் அருணா- செல்லத்துரை அவர்களின்
அடங்காப்பற்று வன்னி வரலாறு விதந்துரைக்கப்பட வேண்டிய
தமிழர்களின் பொக்கிஷமே என்று கூறி, அவரை, வாழ்த்தி
பாராட்டி விடைபெறுகின்றேன்
நன்றி வணக்கம்....

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அத்தியாயம் - பதின்னான்கு

# விமர்சனம்

**Review**
**Critic K.S.SIVAKUMARAN's**
Reviews on the 4 books on the
Vanni (Adanka Pattu) appear below.

## UNTOLD STORY OF THE VANNI

In the South-Eastern part of the Northern Peninsula of Sri Lanka there is a region called Vanni. It has been in news for two decades. But, do we know its origin? A media person, writer and unofficial researcher, Aruna Selladurai, has written a series of books on the Vanni. He hails from a village called Mulliyawalai in the area. Earlier, he worked for the SLBC and Rupavahini, and presently, he is at Shakthi TV, I understand.

Let us see what he says in Part 1 of History of Adankapattu (Vanni). Not all of us know of this region, because nobody writes about it in either English or Sinhala. Lankan History is not fully recorded by historians who do not belong to the Thamil Community, but the sad fact is that readers in Sinhala and English take for granted what the Southern historians say in their books. Worse still, the historians in Thamil do not bother to write in English or Sinhala. So one can't blame the Sinhala readers, for facts distorted in the books they read.

In his introduction, the author says that there are tanks built in the region before the AD, to show that the history of Vanni goes back to very ancient times. Similarly, V. Subramaniam (Mullaimani) an educationist and writer of repute, tells us that there are some facts regarding Vanni in the following books in Thamil.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Yaalpaana Vaipava Maalai (Mylvagana Pulavar), Vaiya Paadal (Vyapuri Iyer), Yaalpaana Charithram (Mudaliyar Rasanayagam). Yaalpaana Vypava Vimarsanam (Swami Gnanapragasar), Yalpana Vaibhava Kaumudii (K. Velupillai), Konesar Kalveddu (Kavirajar). Vanniyar (Dr.S.Pathmanathan, (Kalliyankaddu Cheppeadukal, (Dr. S.Gunasingham).

There are few books in English that give some information on Vanni such as Manual of Vanni Districts (J.P.Lewis), Vanni and the Vanniyars (C.S.Navaratnam), Vanniyars of North Ceylon (Prof S.Arasaratnam and Origin of Vanni Cheftains (Prof.K.Indrapala).

These Vanniyars came to the Eastern part of Lanka in 5th Centaury AD. The Chieftain Kulakoattan settled the Vanniyars in East Lanka. They came from Mathurai and Thruchirapalli in Thamilnadu. Ukra Singhan was from the family of Vijaya. He captured the Northern part of Lanka and ruled from Kuthiramalai. It was he who was known as Kulakoattan said Fr. Gnanapragasar. The Chola Emperors captured Lanka in 10 AD and administrated the Wanni region. Maapaana Vellalas and their subordinates came to Lanka on the invitation of Vanniyars. Rajavaliya and Chulavamsa refer to the Wanni rulers in 11th Centuary AD. Prof. Pathmanathan says that the Vanniyars came from the Vealaikaara battalion. Aariya Chakaravathis ruled Yaalpaanam from the 13 AD. Chenpaka Perumal (who was known as Sapumal Kumara) captured Yaalpaanam and ruled for 17 years.

The book has several maps of ancient Lanka and a bibliography. The book is interesting, as it gives certain details of the Vanni region, which many of us do not know. One must congratulate the author, Aruna Selladurai, for taking pains to present an account of Adanka Pattu (Vanni). - *THE NATION - 06.09.2009*

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# THE STORY OF PANDARA VANNIAN (AD 1750-1811)

Vanniyan here means a person from the Vanni region. This region is also called Adanka Pattu (a locale that couldn't be subdued), Pandara is equal to Bandara in Sinhala? No, I am not sure. Pandari normally means a devotee who serves in the temples doing odd jobs. But here we speak about a ruler as 'historicized' by Aruna Selladurai, a media person in a book titled as above. It's a book in Thamil in a series on the Vannis or the Vanni

## Chronology

Due to limited space available I shall confine to the basic information on the subject for the benefit of readers who cannot read Thamil. I shall confine only to the chronology of events listed by the author that gives some information on Adanka Pattu or Vanni

During the rule of the ancients this region was not under any forces and the Vanniyars from India aggrandized the region. Later it was free from the reign of the Yaalppanam and the Sinhala people. And from 1505 AD foreigners were aggrandizing the region.

The Portuguese brought under their control Mannar and Chettikulam. But it was the Vanniyars who ruled the remaining Adanka Pattu. They called this region Vannis. The Dutch and the British also continued with the name Vannis

The name existed until the demise of the last of the Vannians - Panadara Vanniyan in 1811. When the British ruled Lanka between 1796 and 1947, Vanni was a part of the Northern Province.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## Separate District

When Lanka gained independence in 1948 Vanni became a separate district. In 1987 the militant forces established their headquarters in Mullaitheevu and other regions in the Vanni. The A-9 highway that runs though Vanni from Yaalpaanam to Mahanuwara was closed for public transport. As a result in 1990 the Vanni region became once again an area that could not be subdued. In 2002 the A-9 was re-opened.

The chronology stops there in the book under review.

In the first chapter it is mentioned that during the 5$^{th}$, 6$^{th}$, and 7$^{th}$ centuries 60 Vanniyars from South India visited the King Kulakottan and 59 of them preferred to live in the Vanni region. They ruled from Panankamam.

## Attack

In 1543 the Portuguese tried to convert people in Mannar and Chettikulam to Catholicism.

The King of Yaalpaanam, Sankilian attacked the Catholics in 1544 and killed the petty ruler Ilanchingan nee Ugrasinkan. In 1560 the Portuguese built a fortress in Mannar. They brought Vannis also under their control in 1621.

The story continues in remaining chapters. Those who can read Thamil may gather more information from the book particularly on Pandara Vanniyan.

The book is available from the author at A15 1/1, Manning Town Housing Complex, Mangala Road, Colombo -08. It is priced at Rs.300/=. The author has

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

written more than 10 books in Thamil and presented several programmes over the Radio and TV

He is a well known media person in Thamil

LAKBIMA NEWS - Sunday
13th September, 2009.

THE VANNI HEADS ( A.D 1750 – 1895 )

In a series of four books in Thamil on the history of Adanka Pattu (Vanni), media person Aruna Selladurai gives information hitherto unknown to most of us. Adanka Pattu means the region that could not be subdued. In Part 3 of the series under the head "Sudeshath Thalaimaihal", he narrates the role played by indigenous leadership during the period mentioned above. Within 134 pages which include colour and black and white photographs, the writer attempts to justify the uniqueness of the Vanni region. The book is available from the author at A15-1/1, Manning Town Housing Complex, Mangala Road, Colombo-08 at Rs. 300/= per copy.

For the benefit of readers who cannot read Thamil I give below the essential points that the writer makes in his own researched material.

The History of Vanni begins before the birth of Christ. During the British period in the country, there was a one Pariyari (Native Physician) named Velan from Mullaitivu who opposed the British rule. This was mentioned in the notes submitted to the British by Kathirgama Nayaga Mudaliyar who was in charge of the Melpattu East sector.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

The book is divided into eight chapters; Traditions of Adanka Pattu, Muslims in Mullaitivu, Indigenous Leadership, Kaadu Raasa (The King of the Jungles) contributed by Attorney P. Lingajothi. The Commonality between Vanni and other countries, Commemorative Number (1979) Song of the Kamuham Chandai compiled by Mullaimani in 1979, Kathiravelu Iyaaru contributed by Sinnathamby Ponnambalam and Vinacithamy Periyavar contributed in Ariyan Poihai.

Here are excerpts from the first chapter.

There were Vanniyars and non-Vanniyars in Adankapattu. Facts regarding them remain in inscriptions and in the form of Ola writing. The history of the Vanni is limited only to the 16th century. The term "Vanni" came to be used only after the advent of the foreigner. There were more than 700 tanks in Vanni.

The Vanniyars ruled Adanka Pattu from Panankaamam. They wanted to bring Mullaitheevu, Mulliawalai, and Kanukerney under their yoke. They sought assistance from Mathurai in Thamilnadu. The messenger first reached Thiruchirapalli. Upon hearing this Varasingha Aarachi, Mullai Malanaar, Saruhumalanaar, Sivanallamalanaar arrived in Mulliawalai and settled there. That region was ruled by Saandaar and fisher-folks. Then the messenger went to Mathurai. Vellalar and Mappanar families came to the region.

The Vellalars and Maapanars came with Brahmins, Cobblers, Malayalees, Ahambadikal, Thimilar and Potters belonging to other castes. They came from Mathurai, Thondai Mandalam, Karaikkaal, Thiruchirapalli, Kudaloor and Marunkoor.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

They were led by Ilansinha Maapaanar, Allavahu, Aththi Maapanan and Sinha Mappanaar. The people who came settled in Yaalpaanam and Vanni. The Vanniyars ruled over indigenous population and paid taxes to the king of Yaalpaanam.

In these regions there were Veddahas, Buddhists and Rakshayars. The Portuguese had Chettikulan under their control. In 1783 the Dutch captured Adanka Pattu. The Captain named Thomas Nagel urbanized Mullaitheevu and ruled over there. He introduced laws regarding allotment of lands.

Chapter 2 talks about Muslims in Mullaitheevu. In 1891 there were 701 Muslims in the Vavuniya District and 438 in the Mullaitheevu district.

Chapter 3 – Indigenous Leadership – Before the reign of Pandara Vanniyan, there were indigenous leadership in Vanni. Among them was the generation of Vellalar.

Parihari Velan was very important in that generation. Parihari means a medicine man. There were 15 such Physicians in Vavuniya and 14 in Mullaitheevu. Another leader was Kaaddu Raasa. He was also anti-British.

A relative of the latter is an attorney Paramalingam Lingajothy. He lives in London. He writes:

" I am aware from the elders of my family that my ancestors had been credited with many feats may it be traditional medical practices, administration of the local area, astrology, astronomy, spirituality, temple building, building an irrigation system for improving cultivation, etc. They were also warriors who were experts in marital arts and other forms of fighting...."

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"My research proved that there is no other family that could claim the Royal title to the Kingdom of Kanukerney other than the family of Kathiravelu Vinnasythamby... Kanukerney was re-named Karikaddumoolai... In the last century Thanniyootu has become the de facto capital of Kannukerney Kingdom. And Mullaitheevu the important town of its coastal region"

Paramalingam Lingajothi's another account is also included in Aruna Selladurai's book under review. It's very interesting to learn the following:

"The culture of Vanni is shaped buy is shaped by its soil. When you talk of Vanni, you begin to smell a flavour that is unique to that place: its rural setting and villages, tanks, lush green vegetation, plenty of water and the abundance of cattle and pasture lands."

" The simplicity of the people, their ever-smiling faces, shows a candidness that is unique to Vanni...Similar cultures to Vanni exist in the Far East including China, India, (primarily South India where the Vanniyars live), as well as part of Africa"

Due to constraints in limitation of space I would stop with that. Even if you do not know Thamil or even don't bother to know Thamil, you may yet read the quotations in the foot note written in English to know the other side of Lankan history.

DAILY NEWS – 09.09.2009

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Imprint

The Vanniyas: Maapaana and the Madapalli Clans
by K.S.Sivakumaran

Aruna Sellathurai's fourth in the series of the books recounting the history of the Adankappattu (Vanni) covering period of 1625- 1800 is also interesting as his previous books.

The book is published by Aruna Velyeetu Aham, A 15 1/1 Manning Town Housing Complex , Colombo-08 and priced Rs 350/=. This 116 page book has nine Chapters. The author has written 10 books in Thamil, two of which won the North East Provincial Council Literary awasrd in 1997 (Television in Srilanka) and Nanti Udayar - a historical play based on the tradition of the Vanniyars which received the 1996 State Literary Award and the Unda Abhinandana Golden Award in 1994 he brought a collection of light music songs.

His teleplay "Veedu" (Home) and a few radio plays were elected best book on Drama in 1993 by the Yaalpaanam Literary Assembly.

In Audio CDs two on Oli Thenral and his historical play depicting the historical tradition of the Vanniyars titled "Nandhi Udayar" were released. Again the latter was launched in CD format. In 1994 he produced another DVD recording the Mullai Modie of Folk play.

Aruna Sellathurai is an experienced Broadcaster and telecaster having served at the SLBC - Rupavahini and presently he works for the Shakthi Radio and TV Channels.

A self made man and an ardent lover of his region of birth the Vanni region he tries his best to record the

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

forgotten historical past of the region by his own research.

Through not written in an academic fashion applying scientific modalities, his books including this give valuable interesting facts and incidents of the Vanniyars of the past.

What the present book says can be noted at a glance if we could name the chapters of the book, Introduction and Sources Vineyards, Boundaries and Vineyards, Malabar in Adankappattu and the Portuguese period ,the Portuguese and Maapana Vanniyars, the Dutch Period Madappaliyar in history, Maapanar and Madapaliyar in Panankamam. The Dutch in Mannar, Christian Names, the honour for the Vanniyars and finally Clarification of research Materials.

The writer says that the history of Vanniyars is entwined with the history of Yaalppanam, Adankappattu, Nuwerakalaweva, Thirukonamalai, and Mahanuwara regions.

What this book gives is a collection of observations and notes gleaned from various sources.

It does not present a codified history of the Vanniyars. The author leavesit to the historians to construct the history of the Vanni region based on further research. Nevertheless from what the earlier writers have written on Vanni, one could gather a lot of information on the Vanniyars.

We learn that the author in his final volume would give a compehensive account as perceived by him.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org


The writer gives the following sources for the compilation:

Manual of The Vanni Districts
by J.P.Lewis - (1895)
Manual of The North Central Province
by R.E.Ivers - (1899)
Yalppana Charithiram
by A.Moothuthambipillai - (1915)
Yalppana Vaipava Kaumthi
by Mes.K.Veluppilai - (1918)
Notes on Jaffna
by John H.Martyn - (1923)
The Dutch in Ceylon
by R.G.Anthonisz I.S.O. - (1923}
Yalppana Charithiram
by S.Rasanayagam - (1933)
The Chieftains of Ceylon
by J.C.Van Sanden - (1936)
RAS Journal
by Rev.Fr.S.Gnanapirakasar - (1936)
Vanniyar
by Prof.S.Pathmanathan - (2003)

*Daily News / December 9th 2009*

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# THE VANNI




Lith. Surveyor General's Office Colombo 195. No. 714.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




# ADANKAPPATTU (VANNI) HISTORY

## PART - 05

ADANKAPPATTU MUDALIYARS
- A.D.1795-1948



by

**Arruna Selladurai**

**Dip. in. Journalism, University of Colombo**

Arruna Selladurai
Adankappattu (Vanni)
History - Part 5 - Mudaliyars
978-955-1347-01-7

9 789551 347017

ISBN 978-955-1347-01-7

DESIGNED & PRINTED BY UNIE ARTS (PVT) LTD.,
48B, BLOEMENDHAL ROAD, COLOMBO 13, SRI LANKA. TEL: +94 11 2330195

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org